திருக்கரந்தை ஆதிவராகப்பெருமாள் வருக்கக்கோவை

மகாமகோபாத்தியாய
ர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்
திருவான்மியூர், சென்னை-600 041
1983

திருக்கரந்தை
ஆதிவராகப்பெருமாள்
வருக்கக்கோவை

(குறிப்புரை, விசேடவுரை, ஆராய்ச்சிக்குறிப்பு
முதலியவற்றுடன் கூடியது)

உரையாசிரியர் – பதிப்பாசிரியர்

பேராசிரியர். C. ஜெகந்நாதாசார்யர்
M. A. (Hist), M. A. (Tamil), L. T., P. O. L.
Dipl. Geog, Vidvan
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,
விவேகானந்தர் கல்லூரி, மயிலை, சென்னை.
(U. G. C. பேராசிரியர்)

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்
திருவான்மியூர், சென்னை - 600 041
1982

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல்நிலைய வெளியீடு எண்—81

முதற்பதிப்பு — 1982 — 1000 பிரதிகள்

© மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல்நிலையம், திருவான்மியூர், சென்னை - 600 041

விலை : ரூ. **12**

Published with the Financial Assistance
from the Government of India,
Department of Culture, New Delhi

Printed at Kalakshetra Publication Press.

பொருளடக்கம்

		பக்கம்
முகவுரை	..	i
ஆராய்ச்சிக்குறிப்பு	..	xi
திருக்கரந்தை ஆதிவராகப் பெருமாள் வருக்கக்கோவை மூலமும் உரையும்	..	*1 — 110*
செய்யுள் முதற்குறிப்பகராதி	..	*111 — 113*
அருஞ்சொற் பொருளகராதி	..	*114 — 146*
இதுவரை தெரியவந்துள்ள கோவை நூல்களின் அகர வரிசைப்பட்டியல்	..	*147 — 148*

பதிப்பாளர் குறிப்பு

தரவு கொச்சகக் கலிப்பா

பாடாமல் நின்புகழை பங்கயத்தாள் உண்ணினைந்து
நாடாமல் நின்கோயில் நண்ணுமல் நின்னெதிரே
ஆடாமல் காலம் அவமே கழித்தழிந்தேன்
வாடா தருள்குடந்தை மங்களநா யகித்தாயே.

(ஐயரவர்கள் பாடல்)

இளமைப் பருவந் தொடங்கித் தமிழ் மொழியில் பேரார்வம் கொண்டு, குருகுல முறைப்படி நல்லாசிரியர்களிடம் தமிழ் நூல்களைப் பயின்று, நல்லாசிரியர் ஸ்தானத்தையும் பெற்றுப் பல்லாண்டுகளாகப் படிப்பாரும், தேடுவாருமின்றிச் சிதலைக்கு உணவாகி அழியும் நிலையிலிருந்த சங்க இலக்கியங்களை அல்லும் பகலும் சலிப்பின்றித் தேடித்தொகுத்து ஆராய்ந்து பிழையின்றிப் பதிப்பித்துத் தமிழுலகத்திற்கு அளித்தவர் டாக்டர் ஐயரவர்கள்.

அவர் தேடிச் சேகரித்த ஓலைச்சுவடிகளும், அவற்றிற்குரிய கையெழுத்துப் பிரதிகளையும் கொண்ட நூல்நிலையம் **திருமதி ருக்மினிதேவி** அவர்கள் பேராதரவில் இயங்கி வருகிறது.

நூல்நிலையத்தில் அச்சில் வராத நூல்களுள் ஒன்முன 'திருக்கரந்தை ஆதிவராகப் பெருமாள் வருக்கக்கோவை' என்னும் இந்நூலைப் பதிப்பிக்க எடுத்துக் கொண்டபோது 853 எண்ணுள்ள ஓர் ஓலைச்சுவடியும், 58 எண்ணுள்ள கையெழுத்துப்பிரதி ஒன்றும் இருந்தன. அந்நூலைப்பிரதி செய்து தமிழ்ப்பேராசிரியர் **ஸ்ரீ. சி. ஜகந்நாதாசாரியார்** அவர்களிடம் கொடுத்து ஐயரவர்கள் பதிப்பு முறையில் அமைத்துத்தர வேண்டுமென்று அணுகியபோது அவர் மகிழ்ச்சியுடன் ஏற்று உரை எழுதியதுடன் ஆராய்ச்சிக் குறிப்புக்கள், முகவுரை முதலியனவும் எழுதித்தந்தார்.

அவர் ஸ்ரீ வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியருடன் கம்ப ராமாயணப் பதிப்பிலும், பிற பதிப்புக்களிலும் நன்கு உழைத்து

பயிற்சி பெற்றவராதலின், எந்நூலையும் நன்கு பதிப்பிக்கும் திறமையுடையவர். இற்றைக்குப் பல நூல்களுக்குச் சிறந்த உரைவளம் காண்பதில் முதுமையையும் பாராமல் உழைத்து வருகின்றார்; சிறந்த பேச்சாளரும்கூட. அன்னாருக்கு இந்நூல் நிலையம் நன்றி செலுத்துகிறது.

மத்திய அரசு இப்பதிப்பு வெளிவருவதற்குப் பெருமளவு மானியம் அளித்தமைக்கு நன்றி.

இந்நூல் நிலையத்தின் முன்னேற்றத்திற்காக ஊக்கம் காட்டி வரும் தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநரும், இந்நூல்நிலையத்தின் நிர்வாகக்கமிட்டித் தலைவருமான **டாக்டர் ஆர். நாகசாமி** அவர்களுக்கு நன்றி.

இந்நூல் அச்சாகும்போது ஒப்புநோக்குதல் முதலிய பணிகளை வித்துவான் **திரு. எஸ். பாலசாரநாதன்** அவர்கள் புரிந்தமைக்கு நன்றி.

இந்நூலை நல்ல முறையில் அச்சிட்டுக் கொடுத்த **கலாக்ஷேத்திர அச்சகத்தார்** அவர்களுக்கு நன்றி.

இங்ஙனம்

க. சுப்பிரமணியன்

கௌரவப் பாதுகாவலர்

டாக்டர் உ. வே. சாமிநாதையர்

நூல்நிலையம்

சென்னை—600 041

திருக்கரந்தை
ஆதிவராகப் பெருமாள் வருக்கக்கோவை

முகவுரை

கோவை என்பது தொண்ணூற்ருறு வகைத் தமிழ்ப் பிரபந்தங்களுள் ஒன்று. இது அகப் பொருட்டுறைகள் அமையக் கட்டளைக் கலித்துறை என்னும் பாவால் நானூறு செய்யுட்கள் கொண்டதாகும். ''ஐந்திணை தழுவிய அகநிலைக் கோவை தந்த நானூறுந்தாங் கலித்துறையே'' என்பது பன்னிரு பாட்டியற் சூத்திரம்.

ஒத்த அன்பினராகிய தலைவனும் தலைவியும் பால்வரை தெய்வம் கூட்ட ஒருவரையொருவர் கண்டு காமுற்றது முதலாக உலகத்துச் சான்ருேர் அறிய வரைந்து கொண்டு ''ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம் கூடி முயங்கப் பெறின்'' என்றதற் கேற்ப ஊடியும் கூடியும் மகிழ்ந்து, ஏமஞ்சான்ற மக்களொடு துவன்றி மனையறங் காத்து இறுதியில் நற்பேறு எய்துதலை அகனைந்திணை ஒழுகலாற்றினின் அடிப்படையாகக் கொண்டு ஏறக் குறைய நானூறு துறைகளுக்கு அமையும்படி பாடப்படுவதாகும்.

இந்தக் கோவை நூல்களுள் மிகச் சிறந்ததாகக் கருதப் படுவது மாணிக்கவாசகர் பாடிய திருச்சிற்றம்பலக் கோவையாராகும். இதனைத் திருக்கோவையார் என்பது வழக்கு. சைவத்திருமுறைகள் கண்ட நம்பியாண்டார் நம்பி இதன் பெருமையை நன்குணர்ந்து

''வருவாசகத்தினின் முற்றுணர்ந்தோனை வண்டில்லை
மன்னைத், திருவாதவூர்ச் சிவ பாத்தியன் செய்
திருச்சிற்றம்பலப், பொருளார் தரு **திருக்கோவை**
கண்டேயு மற்றப் பொருளைத், தெருளாத வுள்ளத்தவர்
கவிபாடிச் சிரிப்பிப்பரே'' என்று உரைத்தருளினர். மேலும்,

''பல்காற் பழகினும் தெளியாவுளவேல், தொல்
காப் பியந்திரு வள்ளுவர் **கோவையார்**, மூன்றினும்
முழங்கும்'' என்ருர் இலக்கணக் கொத்துடையார்.

இத் திருக்கோவையார்க்குப் பேராசிரியர் என்பார் அரிய தோர் உரை செய்துள்ளார். இது தில்லை திருச்சிற்றம்பலவனுகிய இறைவனைப் பாட்டுடைத் தலைவனுகக் கொண்டு அமைந்தது.

இனி கி.பி. எட்டாம் நூற்ருண்டினைச் சார்ந்த இறையனுர் களவியலை அடியொற்றிப் **பாண்டிக் கோவை** என்ற நூல் அமைந் துள்ளது. அது ஏறக்குறைய முந்நூற்றிருபத்தாறு கட்டளைக் கலித்துறைச் செய்யுட்களைக் கொண்டது. இது பாண்டியன் அரி கேசரியைப் பாட்டுடைத் தலைவனுகக் கொண்டது. இனி, இவற் றுக்குப் பின்னர் இடைக்காலத்தே - அதாவது இன்றைக்கு எழுநூறு ஆண்டுகட்கு முன் கி.பி. பன்னிரண்டாம் நூற்ருண் டினைச் சேர்ந்த பொய்யாமொழியார் பாடிய தஞ்சைவாணன் கோவை குறிப்பிடத்தக்க தொன்ருகும். இதன் பாட்டுடைத் தலைவன் சந்திர வாணன் என்பவன். இது நாற்கவிராச நம்பி இயற்றிய அகப்பொருளிலக்கணத்தை அடியொற்றி அமைந்த தாகும். இதற்கு அட்டாவதானி சொக்கப்ப நாவலர் இயற்றிய பழைய உரையொன்று உண்டு. நம்பியகப் பொருளுரையில் இக்கோவைச் செய்யுட்கள் உதாரணமாக எடுத்தாளப்பட்டுள்ளன. ஆகையால் இந்த நம்பியகப்பொருளிலக்கணம் கற்போர்க்கு இக் கோவை பெரிதும் பயன் படுகிறது. சுருங்கக் கூறின், இந்தக் கோவை நூல்களனைத்தையும் இடைக்காலத் தெழுந்தவை, பிற்காலத் தெழுந்தவை எனப் பிரித்து விடலாம்.

இங்ஙனம் பிற்காலத்தனவாகக் கருதப்படும் கோவை நூல் களுள் 200 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டதாகத் தோன்று கிற இந்த ஆதிவராகப் பெருமாள் கோவை ஒன்ருகும். இதில் **கன்னடியன் கால்வாய்** (73) பற்றிய குறிப்பு வருகிறது. ''பொன்னுடன் முத்தும் அகிலுடன் சாந்தும் பொருதெறியும் கன்னடியன் பெருங்கால் ஆதிவராகர் கரந்தை வெற்பு'' என்பது அத்தொடர். இது தாமிரபரணி நதி தீரத்து நீர்ப்பாசன வாய்க் கால்களுள் மிகவும் சிறந்தது. தாமிரபரணி நதியின் தென்கரை யிலுள்ள திருக்கரந்தை (67) எனும் ஊரையும் அதைச் சுற்றி யுள்ள கழனிகளையும் இது வளப்படுத்துகின்றது. இந்தக் ''கன்னடியன்' என்பது யார்? என்று ஆராய்ந்த பொழுது, ஒரு நல்ல குறிப்பு கிடைத்தது. கன்னடியன் என்பது கன்னட தேசத்திலே யிருந்து வந்த ஒரு பிராமணனைக்குறிக்கும். அவர் பெயராலே அணைக்கட்டும் கால்வாயும் புகழ் பெற்றமைந்துள்ளன. இத்தகைய கன்னட தேசத்தவர் **பாளையன்** என்ற பெயரோடு திகழ்ந்து, துவாரசமுத்திரத்தைச் சேர்ந்த (ஹொய்சாள) கன்னட மன்னர்கள் மதுரையில் சிறிதுகாலம் அரசாண்டு கொண்டிருந்த

காலத்தில் அவருடைய தாற்காலிக பிரதிநிதியாக இந்த வட்டாரத்தில் நியமிக்கப்பட்டவர் எனத் தெரிகிறது. இந்தப் பிராமணர் கன்னடியராயினும் பொதுமக்கட்கு நன்மை செய்யும் சேவையில் பெரிதும் ஈடுபாடுடையவர் எனத் தெரிகிறது. இவர்தான் பாளையங்கோட்டையிலுள்ள புராதனப் பகுதியைக் கட்டியதாகக் கூறப்படுகிறது. எனவே விஜயநகர சாம்ராஜ்ஜியத்திற்கு உட்பட்டு மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்களாகிய நாகம நாயக்கர், விசுவநாத நாயக்கர் இவர்களுக்கு முன்பே இந்தப் பாளையன் இச்செயல்களை ஆற்றியிருக்க வேண்டும். ஆகையினால் தான், துவாரசமுத்திர கன்னட மன்னர்கள் கையில் மதுரை இருந்த காலத்து இந்தப் பாளையன் இந்தச் செயல்களை ஆற்றியிருக்கிறார் என்பது தெரிகிறது. மற்றும் நாயக மன்னர்கள் காலத்தில் தான், **தெலுங்கு** பாளையக்காரர்கள் மதுரை திருநெல்வேலி முதலிய வட்டாரங்களில் பிரபலமாயிருந்தனர் எனத் தெரிகிறது. அவர்கள் காலத்து, தெலுங்குச் சொற்கள் வழக்காற்றில் பயிலத் தொடங்கின என்பதையும் இந்நூலாசிரியர் குறிப்பாகக் காட்டுகிறார். செய்யுள் - 86இல் ''முட்டையிட்ட கெவுளி பாக பலுகு'' என்பது காண்க. எனவே கி.பி. 1530க்கு முன்னாலே [அதாவது நாயக்க மன்னர் ஆட்சி மதுரையில் ஏற்படுவதற்கு முன்னாலே] இந்தக் கன்னடியன் கால்வாய் வெட்டப்பட்டுள்ளது. இந்தக் கால்வாயைப் பற்றிப் பல ஐதிஹியங்கள் உண்டு. அவை பின்வருமாறு:-

1. ஒரு நாள் ஒரு கிராம தேவதையினருளால் ஒரு கன்னடியருக்கு நிறையச் செல்வம் கிடைக்க, அவரை நோக்கி அந்தத் தெய்வம் அந்தச் செல்வத்தைக் கொண்டு பல அணைக் கட்டுகளைக் கட்டி நீர் தேக்கிப் பல கால்வாய்கள் மூலம் நீர்ப் பாசனம் செய்யக் கட்டளையிட்டது. அதன்படி நோக்க, கட்டப்பட்ட அணைகளெல்லாம் **ஒரே மனிதராலேயே** கட்டப்பட்டது எனத் தெரிகிறது. பசு ஒன்றை வழிகாட்டியாக அவிழ்த்து விட, அதன் பின்னே தொடர்ந்து சென்று, அது படுக்கின்ற இடந்தோறும் ஒரு அணைக்கட்டு கட்டுவதாக நியமனம் ஏற்பட அதன்படியே அந்தப் பசு அம்பாசமுத்திரத்திற்கும் கடலுக்கும் நடுவே ஆறு இடங்களில் படுத்துக் கொண்டது. அந்த ஆறு இடங்களிலும் இந்த ஒரே கன்னடியர் ஆறு அணைக் கட்டுகளைக் கட்டினார் என்பது ஒன்று.

2. இனி மற்றொரு ஐதிஹியம். இந்தக் கன்னடியர் பெயரால் திகழ்கின்ற ஒரே ஒரு அணைக்கட்டுதான் இவர் கட்டியது என்றும், அவிழ்த்து விட்ட பசு போகும் வழியெல்லாம் கால்வாய்

வெட்டிச் செல்ல வேண்டும் என்றும், அது படுக்கின்ற இடங்களில் குளங்கள் அமைக்கப்பட வேண்டும் என்றும் நியமனம் ஏற்பட்டது.

3. இனி மூன்ருவது ஐதிஹியம். இது ஒரு செப்புப் பட்டயத்திலே தெரிய வருகிறது. நாராயணப்பையா என்ற கன்னடியர் பாரத்துவாஜ கோத்திரத்தைச் சேர்ந்த அந்தணர். ரிக்வேதத்தில் வல்லவர். இவர், வேலூரிலே அரசாண்டு வந்த மஹாராஜா கஜபதி பிரதாபருத்ர ராயர் நோய்வாய்ப்பட்டு வருந்திய போது அதனை நீக்கப் பிராயச்சித்தமாகக் கால புருஷ தானம் வழங்கப்பட்டவர். இந்தத் தானம் மிக உத்தமமான பிராமணர்கள்தான் வாங்கலாம். இந்தத் தானத்தைப் பெற்ற பின் நாராயணப்பையா திருப்பதிக்குச் சென்று திருவேங்கடமுடையான் நியமித்தபடி தெற்கே பொதிய மலைக்கு வந்து அகஸ்தியரைத் தரிசித்து, அவர் சொற்படி பிராமணர்களுக்கு உபயோகப்படும்படியாக ஒரு நீர்ப்பாசன கால்வாயையும் அவர்கள் தங்குவதற்கு ஒரு சத்திரத்தையும் கட்டும்படி பணித்தார். அங்ஙனமே இந்தக் ''கன்னடியன் கால்வாயை'' வெட்டி நீர்ப்பாசன வசதி அமைத்ததோடு, சேரன்மாதேவியில் அழகியவப்பன் சுவாமி கோவிலின் மேலைப் பகுதியில்ஒரு சத்திரத்தையும் கட்டினுர். அந்தச் சத்திரத்தின் நிர்வாகம் ஸ்ரீவத்ஸ கோத்திரத்தைச் சேர்ந்த யஜுர்வேதி நாராயணப்பிள்ளை என்கின்ற அந்தணரிடம் ஒப்படைக்கப் பட்டது.* இந்தச் சத்திரத்திற்குத் திருவாங்கூர் மஹாராஜா இலவசமாக மிளகு அனுப்பி வைத்தார். 1795-இல் திருவாங்கூரை ஆண்ட ராமராஜர் என்ற மன்னர் இன்னும் பல சலுகைகள் காட்டினுர் எனத் தெரிகிறது. இந்த ஐதிஹியங்கள் பலவாறு இருப்பினும் ஒன்று மட்டும் நிச்சயமாகத் தெரிகிறது. கன்னடியன் கால்வாயை வெட்டியவர் ஒரு கன்னடியர். இந்தக் கால்வாயை வெட்டுவதற்குக் காரணமாயிருந்த அந்தக் கன்னடியர் மிக்க செல்வாக்குடைய ஒரு பிராமணர் ஆவர் என்றும், அவர் கி.பி. 15-ஆம் நூற்ருண்டில் இந்த நற்செயலை ஆற்றியிருக்கலாம் என்றும் தெரிகிறது. இந்தக்கால்வாயின் நீளம் சுமார் 21 மைல் என்பர். இந்தக் கால்வாய்க்கு அருகே ஒரு கோவில் இருக்கிறதென்றும் அதில் காணும் கல்வெட்டுக்களில் ஒன்று பதினேழாம் நூற்ருண்டின் தொடக்கத்தது என்றும்

* அந்தணர்கள் ''பிள்ளை'' எனப்படுவதை, நம்பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை, பிள்ளைலோகாசார்யர் என்ற திருப்பெயர்களால் அறிக.

தெரிய வருகிறது. இந்தக் கோவில் ஆதிவராகப் பெருமாள் கோவிலாக இருக்கலாம் என்று கருதப் படுகின்றது.*

இந்நூல் செய்தற்குக் காரணம்

இனி, இந்த ஆதிவராகப் பெருமாளைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்ட இந்தக் கோவை நூல் வர்க்கக் கோவையாக எழுதப்பட்டிருத்தலின் 'அ' முதல் ''வெள'' வரையில் தமிழ் நெடுங்கணக்கிலே வரக்கூடிய முதல் எழுத்துக்களைக் கொண்டு நோக்க 101 பாடல்களாக அமைந்துள்ளது. தொடக்கத்தில் காப்புச் செய்யுளையும், இறுதி வாழ்த்துச் செய்யுளையும் சேர்த்து 103 பாடல்கள் ஆகின்றன. காப்புச் செய்யுளை நோக்குங்கால் இதனை எழுதிய ஆசிரியரைச் சிலர் அண்டி, 'நீர் ''**கரந்தைக் கோவை**'' என்ற ஓர் வர்க்கக்கோவை நூலைத் திருக்கரந்தை ஆதிவராகப் பெருமாள் பேரில் எழுத வேண்டும்' என்று விண்ணப்பஞ் செய்ததாகத் தோற்றுகிறது. இதனைக் ''கரந்தைக் கோவை சாற்றும் **வருக்கம்** ஈந்தீர்; ஆகவே புள்ளரசைப் பணிந்தே துணிந்து ஓதுவனே'' என்று ஆசிரியர் சங்கற்பித்ததால் தெளியலாம். **இதுவே இந்நூல் செய்தற்குக் காரணம்.**

(குறிப்பு:- இனி, கரந்தைக்கோவை'' என்ற ஒரு முழு நூலும் (400 செய்யுட்கள் கொண்டது) இந்தத் திருக்கரந்தையைப் பற்றி உண்டு எனத் தெரிகிறது. இதனை எழுதியவர் வடமலையப்பப்பிள்ளையனாய் இருக்கலாம் என்ப (M. S. **பூர்ண. பிள்ளை** Tamil Literature. Page 314) இது கிடப்ப; பணவிடுதூது என்ற நூலில் பலபட்டடைச் சொக்க நாதப்பிள்ளை யென்பவர் இந்த வருக்கக் கோவையையும், கரந்தைக் கோவையையும் எழுதியதாகத் தெரிய வருகின்றது என்ற ஒரு குறிப்பு காட்டப்பட்டுள்ளது. அஃது ஊகமே; எங்ஙன மென்று சான்றுகள் காட்டப்படவில்லை. மற்றும், தமிழ்க்கலைக்களஞ்சியத்தில் சொக்கநாதப் பிள்ளை செய்ததாகக் கூறியுள்ள நூல்களில் இவைகளைப் பற்றிய குறிப்பேயில்லை. ஆகவே, சொக்கநாதப்பிள்ளை ஆசிரியராய் இருக்கலாமென்பது முயற்கொம்பே.]

---

* A Manual of the Tirunelveli District in the Presidency of Madras compiled by A. J. Stuart, M.C.S. Acting District Judge, Coimbatore, Madras (printed 1879) என்பதிலிருந்தும், Political and General History of the District of Tirunelveli in the Presidency of Madras by Right. Rev. R. Caldwell (printed 1881) என்பதிலிருந்தும் தொகுக்கப்பட்டன.

ஆசிரியரைப் பற்றி இந்நூலால் அறிய வருவன

இவர் பெயர் தெரியவில்லை என்றாலும் காப்புச் செய்யுளில் 'புள்ளரசைப் பணிந்தே துணிந்தோதுவன்' என்று சிறப்புறக் கருட பகவானை விதந்து வழிபடுதலால் இவர் பெயர் பட்சி ராஜன், பெரிய திருவடி என்பன போல இருக்கலாமோ எனத் தோன்றுகிறது. இந்தப் பெயருள்ளோரைத் திருநெல்வேலி மாவட்டத்திலும் அதனைச் சார்ந்துள்ள திவ்ய தேசங்களிலும், அதிகமாகக் காணலாம். (பெரியாழ்வாரையே கருடாம்சம் என் பர்; திருவாங்கூர் ராஜ்யம் திருவடிராஜ்யம் எனப்படுவதுண்டு). அதற்கேற்பவே செய்யுள் - 92-இல் மகம் கருட சேவையைப் பற்றி ஒரு குறிப்பு காணப்படுகிறது. ''புள்ளரசில் **மாகத்திலே** வரும் ஆதிவராகர்'' என்ற தொடரில் இவர் பெயர்ப் பொருத்தம் தொனிக்கிறது எனலாம்.

இவர் **பிரபந்நர்** என்ற குறிப்பும் 67-ஆம் செய்யுளால் பெறப்படுகிறது. எனவே ஆதிவராகப் பெருமாளை யொழிய வேறொன்றும் புகலில்லை என உறுதி கொண்டவர் எனத் தெரி கிறது. இவர் ஊர் திருக்கரந்தை வரையினது என்பதும் அங் குள்ள வராகப் பெருமாள் பேரில் காழ்த்த பக்தி உடையவர் என்பதும் ஒரு குறிப்பால் காண்கிறோம்:

செய்யுள் 41-இல் ''மாயன் **எங்கோன்** சேரும் கரந்தை அன்னீர்'' என்பதும் காண்க.

இவர் புலமை மிக்கவர் என்பதை - இவரை நோக்கி அறிஞர் சிலர் வர்க்கக் கோவை பாடச் சொல்ல அதற்கேற்ப இவரும் பாடினர். இதனை ''தமிழ் மணக்கும் மருக்கோவையாம் கரந் தைக் கோவை சாற்றும் வருக்கம் ஈந்தீர்; அதற்கேற்ப யான் உருக்கோவைப் புள்ளரசைப் பணிந்தே துணிந்து ஓதுவனே'' என்று பாடியமையால் அறியலாம். இவர் யாத்த இக்கோவை யின் கட்டளைக் கலித்துறை செய்யுட்களை ஆராய்ந்து பார்த்தாலும் இவர் கவிப்புலமை தேற்றம். இவர் இச் செய்யுட்களில் அகப் பொருள் துறைகளை விளக்குவதன் மூலம் கையாண்டுள்ள சொற்றொடர்கள் பொருள் சிறந்தனவாகித் துறை விளக்கத்தை விசதமாக்குகின்றன.

'அ' முதல் 'வெள' வரையில் தொடங்கும்படியாகச் செய்து அவற்றிற் கேற்பச் சொற்களைக் கொண்டு மோனை எதுகைகளை வைத்துப் பாடுவதென்பது சிறந்த புலமை மிக்கவர்க்கே

சாத்தியம். செய்யுட்களுக்கான 101 அகத்துறை தலைப்புக்களும் நாற்கவிராச நம்பி அகப்பொருளைப் பெரிதும் பின்பற்றியே அமைந்துள்ள பெற்றிமையைக் காணலாம். இதனால் இவ்வாசிரியர் நம்பியகப்பொருள்விளக்கத்தில் ஆழ்ந்த அறிவுடையவர் எனத் தெரிகிறது.

மற்றும் ''வடசொற்கிளவி வடவெழுத்து ஒரீஇ, எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே'' என்ற தொல்காப்பிய நூற்பாவுக்கு இணங்கப் பல வடமொழிச் சொற்களைத் தமிழ் மரபுக் கேற்ப அப்பிலே பெய்திட்ட உப்பே போல மேற்கொண்டு இருத்தலைக் காண்கிறோம். இதனால் இவர் தொல்காப்பியர் கருத்திற் கேற்ப ஒழுகுபவர் என்பதும் தெரிகிறது. பிற்கால நன்னூலார் (பவணந்தி முனிவர்) பிறதிசைச் சொற்களும் ஏறிடலாம் என்பதைச் ''செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும், ஒன்பதிற்றிரண்டினில் தமிழொழி நிலத்தினும், தங்குறிப் பினவே திசைச் சொலென்ப: (பெயரியல் சூத்திரம்-16) என்ற நூற்பாவால் விதித்தனர். அதற்கேற்பத் தம் காலத்து வழங்கிய தெலுங்குச் சொற்களைத் திறம்பட இடம் நோக்கி மணிபோல் பதித்துள்ளார். (உ.ம்.) ''முட்டையிட்ட கெவுளி பாகபலுகு'' (86). இங்ஙனம் சுந்தரத் தெலுங்கும் தெய்வீக வடமொழியும் செந்தமிழ்த் தேனோடு கூட்டிக் குழைத்து இந்நூல் யாக்கப்பட்டுள்ளது எனலாம். இங்கு ஆசிரியர் ஆழ்வார்களிடத்திலும் அவர் அருளிச் செயல்களிலும் பெரிதும் ஈடுபாடுடையவர் என்பதைச் செய்யுட்களின் கட்டுக்கோப்பிலும் கருத்துக்களிலும் உள்ளுறையாகக் காண்கிறோம். நூலின் தொடக்கத்திலேயே காப்புச் செய்யுளைத் ''**திருக்**கோவை'' என்று மங்களச் சொல்லோடு தொடங்கி, நூலின் தொடக்கத்து முதற் செய்யுளை ''அரவிந்தம்'' என்ற மங்களச் சொல்லாலே தொடங்கி, கடைசி 101,102 - இரண்டு பாடல்களையும் வாழ்த்தோடு மங்களமாக முடித்திருப்பது, இவர் கவிபாடும் போது பாட்டியலுக்கு ஏற்ப மங்கலப் பொருத்தங்கள் பார்ப்பவர் எனத் தெரிகிறது. எனவே இந்நூலைப் பயிலும் அனைவருக்கும் சர்வ மங்களம் ஏற்படும் என்பது ஒருதலை.

திருக்கரந்தை - ஓர் கருத்து.

இனி இக் கோவைப் பிரபந்தம் திருக்கரந்தையிலுள்ள ஆதி வராகப் பெருமாள் மேல் பாடியிருப்பதால் - அந்தத் திருக்கரந்தையைப் பற்றி யாம் விசாரித்து அறிந்தவை கூறுவாம்.

திருக்கரந்தை என்ற ஊர் தாமிரபரணியின் **தென்கரை**யிலுள்ளது. இதனை ''பீதாம்பரர் பன்னகாசனர் ஞானப்பிரான்

கரந்தை, மா தாம்பிரபன்னித் **தென்கரையார்** (செ:67) என்ற தொடரினாலும், ''தென் கரந்தை நகர்'' (செ:45), ''தென் கரந்தைப்பதி'' (செ:102) என்ற அடைமொழிகளாலும் தெளியலாம். இங்குள்ள பெருமாள் பெயர் ஆதிவராகப் பெருமாள். தாமிரபரணியில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் போது இக் கோயில் தண்ணீரில் மூழ்கி விடுவது போல் புனல் மிகுமாதலின் எளிதில் போக்குவரத்து செய்ய முடியாது தடைப்படுதலுமுண்டு என்ப.

இனி, ஒரு முக்கியமான கருத்து கூற விழைகின்றேன். தாமிரபரணியின் தென்கரையில் கன்னடியன் கால் பாய்கின்ற பிரதேசத்தை யொட்டிக் கரிசூலாண்ட மங்கலம் என்றதோர் ஊர் இருக்கின்றது. இதனை இக்காலத்தோர் கரி சூழ்ந்த மங்கலம் என்கின்றனர். அந்த ஊர் தான் கரந்தையோடு பெரிதும் தொடர்புடையதாகவும் பொருத்த முடையதாகவும் இருத்தல் வேண்டும். அது உண்மையாகவும் இருக்கலாம். ஏனெனில் இந்த நூலுக்குள் ஒரு சிறந்த உட் சான்று கிடைத்தது. செய்யுள் 46-இல் ''விண்டுராதனை முன் கருவூடு காத்த திருமால் வராகர் கரந்தை'' என்று வருதலை நோக்க, பரீட்சித்தைக் கருவிலே யிருந்து காத்தமை கூறப்படுதலின் ''கரிசூலாண்ட'' என்ற தொடரோடு மிகவும் பொருத்தமாக அமைந்துள்ளது. இதனை அடியேன் வற்புறுத்திக் கூறுவதற்குக் காரணம் - ஆசிரியரால் இது தனிப்பட விதந்து கிளக்கப்பட்டதோர் அற்புத நிகழ்ச்சியாகக் கருதுகின்றேனாதலின். ஆகவே, கரிசூலாண்ட மங்கலம் கரந்தாபுரியாக அதனைச் சூழ்ந்த பகுதி கரந்தை வரை, கரந்தை வெற்பு என வழங்கப் பட்டதாதல் வேண்டும் எனத் தோன்றுகிறது.*

இனி இந்நூல் பனையேட்டிலிருந்து பின்னர் கையெழுத்துப் பிரதி எடுக்கப்பட்டு வந்ததினாலே பல இடங்களில் கட்டளைக் கலித்துறை இலக்கணத்திற்கு மாறுபடவும் இருந்தன. அவற்றையெல்லாம் கூடியவரையில் சரிப்படுத்திச் சொற் பொருள் நயங்களை நோக்கி இலக்கண இலக்கிய மரபு வழுவாதபடி அடியேன் பதிப்பித்துள்ளேன். இதற்குச் சிறந்த குறிப்புரையும், துறை விளக்கங்களும், ஆராய்ச்சிக் குறிப்புக்களும் காட்டியுள்ளேன்.

---

* தஞ்சாவூர் வடவாற்றுக்கும் வெண்ணாற்றுக்கும் நடுவில் அமைந்துள்ள கருந்திட்டைக்குடி என்ற பகுதியின் பெயர் மருவி கரந்தை என இப்போது வழங்கப் படுகிறது. இந்தக் கரந்தை வேறு திருக்கரந்தை என்று திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த கரந்தை வேறு என மனக்கொளல் வேண்டும்.

இக்கோவையில் வந்துள்ள உவமை, உருவகம், கருத்துடையடை கொளி, வீறுகோளணி முதலிய பொருளணிகளையும், யமகம், [மடக்கு] முரண் முதலிய சொல்லணிகளையும் அவை வரும் இடங்களில் காட்டியுள்ளேன்.

சிறந்த வைணவநூலாதலின் ஆங்காங்கு வைணவத்தின் தத்துவங்களையும் கருத்துக்களையும் விளக்கமாக எழுதியுள்ளேன். மேலும் தொனிப் பொருள், இறைச்சிப்பொருள், வருணனைச் சிறப்பு, மிக மேன்மையான சொற்றொடர்கள், சொற் சுருக்கம் பொருளாழம் பொருந்திய சொற்றொடர்கள், உவமை நயங்கள், அபூர்வ பிரயோகங்கள், உலக வழக்கில் பயிலும் மொழிகள் - இவையனைத்தும் ஆங்காங்கு உரைக்குறிப்பிலும் ஆராய்ச்சி முகவுரையிலும் காட்டப்பட்டுள்ளன. இவையனைத்தும், பயில் வார்க்கு எளிதாகப் புரிந்து கொள்வதற்கு உதவி செய்யும் என்ற நோக்கத்தோடு எழுதப்பட்டன.

தமிழ் கூறும் நல்லுலகம் ஐயர் அவர்களை மறக்க முடியாது. ''இருந்தமிழே உன்னாலிருந்தேன் இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்'' என்று வாய்ப்பேச்சளவிலே சொல்லாமல் இறுதி மூச்சுவரை செயலாற்றி மறைந்த பெருந்தகை. அவர் தமிழ்த்தாய்க்குச் செய்திருக்கும் தொண்டு ஒவ்வொரு தமிழ் மகனையும் தலை நிமிரச் செய்கின்றது. அவர் சேகரித்து வைத்த கருவூலங்கள் விலை கூறிடில் கோடிப் பொன்னுக்கு மேலே போகும். ''இவளது கூர்முத்த வாள்நகை கோடிப் பொன்னே விலை கூறிடின்'' என்றான் முறுவல் குறிப்புணர்ந்த தலைவன் [8]. ஆனால் ஐயர் தொண்டுக்கோ விலையில்லை. தமிழ் இருக்கும் வரையில் பாரதி கூறியது போல ஐயர் பெயர் நிலைத்து நிற்கும்.

அத்தகைய பெரியோரின் நூல்நிலையத்தில் அரும் பணி யாற்றிவரும் நிருவாகக் குழுவினர் அடியேனை ஒரு பொருட்டாக மதித்து இந்தக் கோவை நூலுக்கு நீ பதிப்பாசிரியராகவிருந்து உரையெழுதிப் பணியாற்ற வேண்டும் என்று பணித்த போது, ஐயர் அவர்களின் ஆசியை முன்னிட்டும் அடியேனுக்கு ஞானாசிரி யராய் இருந்து பல்வகையாலும் அறிவூட்டிய உரையாசிரியச் சக்கரவர்த்தி ஸ்ரீ. உ. வே.வை.மு. கோபாலகிருஷ்ணமாசார்யர் ஸ்வாமி அவர்கள் ஆசியை முன்னிட்டும் இந்தத் துணிகரமான செயலில் இறங்கினேன். இந்த நூல் செம்மையுற அமைவதற்கு அவர்கள் ஆசியும் ஆதிவராகப் பெருமாளின் அருளுமே காரணம்.

இந்த நூல் உரையாக்கத்தின்போது என் உரை முழுவதை யும் பட்டோலை செய்து படியெடுத்து யெழுதி நல்ல கையெழுத்தில் அமையும்படி செய்த சௌ.**விமலா வாசுதேவனும்**, சௌ.வெ.ரா **வசுமதியும்** செய்திருக்கும் உதவி மறக்கற் பாற்றன்று. அன்னார்க்கு ஆதிவராகப் பெருமாள் சகல சௌபாக்கியங்களையும் அருளும்படி பிரார்த்திக்கின்றேன்.

எனது காலத்தை யெல்லாம் வீணாக்காமல் தமிழ்த்தாய்க்குத் தொண்டாற்றும்படி ஒரு வாய்ப்பினையளித்த ஐயர் அவர்களின் நூல்நிலையத்திற்குத் தலையல்லால் கைம்மாறிலேன்.

ஐயர் பணி என்றும் ஓங்குக,

தமிழ்த்தாய் வாழ்க.

இங்ஙனம்
உரையாசிரியர்-பதிப்பாசிரியர்
சி. ஜெகந்நாதாசார்யர்

ஆராய்ச்சிக்குறிப்பு

இந்த நூலாசிரியர் கோவைச் செய்யுட்களில் தனிச் சிறப்பாகக் காணப்படுவது அவருடைய வைணவப்பற்ருகும். ஆதி வராகப் பெருமானிடத்துப் பெருங்காதல் கொண்டவரென்பது புலனுகிறது. வைணவ பரிபாஷைச் சொற்களையும் தேவ பாஷையாகிய வடமொழிச்சொற்களையும் இடமறிந்து உபயோகிக்கும் திறம் பாராட்டத்தக்கது. தென்பாண்டி நாட்டுப் பொருநை நதி பாயும் பிரதேசத்தில் இவருக்கு இருக்கும் பற்றும், தாய் மொழியாம் தமிழ் மொழியின் மேல் இவருக்கு இருக்கும் அன்பும் அளவிடற்கரியன, ''தமிழ் மணக்கும் கரந்தை'' என்றும் ''ஏர் முத்தமிழ்'' என்றும் பாராட்டுவதோடு ''வாழி என் செந்தமிழே'' என்று வாழ்த்துக் கூறிச் சிகரமாக நூலை முடித்திருப்பதும் இப்பற்றினுக்குச் சான்ருகும்.

அகப்பொருள் இலக்கணச் செய்திகளை எடுத்து ஆள்வதிலும் அந்த இலக்கணத்துறைகள் நன்கு அமையச் செய்யுள் அமைப்பதிலும் இவர் வல்லவர். அவ்வந் நிலங்களுக்கேற்ற கருப்பொருள்களைத் திறம்பட அமைத்து உவமை, இறைச்சி வாயிலாகப் பல செய்திகளை விளக்குவதைக் காணலாம். இவர் செய்யுட்களில், தலைவன் கூற்று, தலைவி கூற்று, தோழி கூற்று, செவிலி கூற்று, கண்டோர் கூற்று என்னும் கூற்று வகைகள் பயின்று வருகின்றன. ஆதிவராகப் பெருமாள் பாட்டுடைத் தலைவனுக ஏற்றம் பெற்ற இந்நூலில் கிளவித் தலைவன் பெயர் இலக்கண மரபிற்கேற்பக் கூருதிருத்தலை நோக்கலாம். [''மக்கணுதலிய அகத்திணை ந் திணையுஞ், சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெருஅர் என்பது விதி.] ஆங்காங்கு ஏற்ற இடங்களில் புறப்பொருள் செய்திகளையும் கவிமரபு பிறழாமல் கூறியுள்ளதைக் காணலாம். இந்நூலினது யாப்பு கட்டளைக் கலித்துறைச் செய்யுட்களாலானது. இறுதி ஐந்தாஞ் சீர்கள் பெரும்பாலும் விளங்காய்ச் சீராகவே அமைக்கப் பட்டுள்ளன குறிக் கொள்ளத்தக்கது; ஏதோ ஒரேழிடங்களில் விளச்சீரில் புள்ளி எழுத்து வந்து வற்றி நிற்கும் திறத்தையும் காண்கிறோம். உவமை, உருவகம், உயர்வு நவிற்சி, **கருத்துடை-யடைகொளி, வீறுகோளணி** போன்ற பொருளணிகளும், யமகம் [மடக்கு], முரண்தொடை முதலிய சொல்லணிகளும் இந்நூலின் போக்குக்கு அணியூட்டுகின்றன. இந்நூலில் வந்துள்ள விலங்குகள்

பறவைகள், தாவரங்கள் முதலியவற்றைக் கூர்ந்தறிந்து இந்த ஆசிரியர் எழுதியுள்ளார். தொனிப்பொருள், சமற்காரம், குறிப்பு வகையால் வேறுபொருள் புலப்படுத்தல் முதலான நயங்களையும் காண்கிறோம். பலவகைச் சாதி இயல்புகள், பழக்க வழக்கங்கள், வைணவசித்தாந்தக் கருத்துக்கள், வைணவ சம்பிர தாயம் வழுவாது காத்தல், உலக வழக்குச் சொற்கள் முதலிய வற்றை இந்நூலாசிரியர் திறம்பட அமைத்துள்ளமை பாராட்டத் தக்கது. கரந்தைத் தல சம்பந்தமாகச் சில வரலாற்றுக் குறிப்பு களும் இடையிலே கற்பனை வளத்தோடு அமைந்துள்ளன.

இனி, அவர் மேன்மை தோன்றக் காட்டியுள்ள **சிறப்பு அம்சங்களைத்** தனிப்பட எடுத்தோதுவாம்.

சிறப்பு அம்சங்கள்

இந்நூலிற் பயிலும் கதைக் குறிப்புக்கள்

1. செய்யுள் 22:— எழுபெற்றம் தழுவும் பெருமாள்

கும்பர் மகள் நப்பின்னை பிறந்த அன்றே பிறந்த ஏழு ஆண் கன்றுகளைக் கொழுக்க வளர்த்து, அந்த ஏழு விடைகளையும் தழுவி வலியொடுங்கச் செய்யும் மாவீரனுக்கு அவளைத் திரு மணஞ் செய்து கொடுப்பதாகச் சுல்கம் வைக்க, அதன்படியே கண்ணபிரான் ஏழு எருதுகளையும் தழுவி வலி யொடுக்கியடர்த்து நப்பின்னையை மணந்தான் என்பது வரலாறு.

2. செய்யுள் 34:- சொற்பாவலன்பின் பணிப்பாய் சுருட்டிச் சுமந்து சென்ற கற்பாவலன்

பக்திசாரர் என்னும் திருமழிசை யாழ்வார் கச்சிப்பதியில் (காஞ்சி நகரம்) திருவெஃகாவில் எழுந்தருளியிருந்த போது அவரது சீடன் கணிகண்ணன் என்பான் வழக்கம் போல அந்நகரத்து அரசனை பல்லவராயனுடைய அரண்மனைக்குப் பிரதி தினமும் சென்று பிக்ஷைக்கு வேண்டிய பொருள்களைப் பெற்று வந்து கொண்டிருந்தான். அவனை ஒரு நாள் அரசன் அழைத்து ''உங்கள் ஆழ்வாருடைய அநுக்கிரகம் இருந்தால் நான் எப்பொழுதும் இளமையோடு ஒருபடித்தாய் இருப்பேன்; ஆகவே

''உமது பரம குருவை யான் சேவிக்குமாறு இங்கு அழைத்து வர வேண்டும்'' என்று பிரார்த்திக்க, அவன் ''நம் ஆசாரியர் ஓரிடத்திற்கும் எழுந்தருளார்'' என்று கூறிவிட, மன்னன் சினந்து அவனைக் கச்சியை விட்டு வெளியேறும்படி ஆணை பிறப்பிக்க, அவன் நேரே பக்திசாரரை யடைந்து நடந்த செய்தியை விண்ணப்பஞ் செய்து ''அடியேனுக்கு விடைதந்தருள வேண்டும்'' என்ன, ஆழ்வார் ''நானும் பெருமாளை யெழுந்தருளப்பண்ணிக் கொண்டு உடன் வருவேன்'' என்று உரைத்துத் திருக்கோவிலுட் சென்று திருவடி தொழுது—

''கணிகண்ணன் போகின்றான் காமரு பூங்கச்சி
மணிவண்ணா நீகிடக்க வேண்டா—துணிவுடைய
செந்நாப் புலவனும் போகின்றேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்''

என்று பிரார்த்தித்த அளவிலே, அந்தப் பெருமானும் ஆழ்வார் எண்ணப்படி யோக நித்திரையை விட்டு எழுந்து வர, மூவரும் அவ்வூரை விட்டு அருகிலுள்ள ஓரிடத்தை யடைந்து அங்கு வசித்தனர். இங்ஙனம் பெருமாளும் ஆழ்வாரும் அவர் அடியானும் அப்பதியை விட்டுப் போயினதால் அவ்வூர் முழுவதும் பொலிவிழந்து சூரிய வொளி செல்லாமல் இருள் மூடப்பட்டது. இப்படி நீள் இரவாய் நீண்டதைக் கண்டு கவன்று மன்னனும் மந்திரிமாரும் அவர்களுள்ள விடத்தைத் தேடி யடைந்து, கணி கண்ணன் காலில் விழுந்து தமது பிழையைப் பொறுத்தருளுமாறு பலவாறு வேண்ட, அவனும் மீண்டு எழுந்தருளும்படி ஆழ்வார் பக்கல் விண்ணப்பஞ் செய்ய, அவரும் அதனையங்கீகரித்துப் பகவானை நோக்கி—

''கணிகண்ணன் போக்கொழிந்தான் காமரு பூங்கச்சி
மணிவண்ணா நீகிடக்க வேண்டும்-துணிவுடைய
செந்நாப் புலவனும் போக்கொழிந்தேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்படுத்துக் கொள்''

என்று முன்பு பாடிய பாட்டை மாற்றிப் பாடிவேண்ட, எம் பெருமானும் அதற்கு உடன்பட்டு மீண்டும் திருவெஃகாவை யடைந்து ஆழ்வார் திறத்து அபிமானத்தால் தான் இங்ஙனம் செய்தது பின்புள்ளார்க்கும் பிரதியட்சமாக வேண்டு மென்று முன்பு போல வலத்திருக்கை கீழாகவன்றி இப்பொழுது இடத் திருக்கை கீழ்ப்படக் கண்வளர்ந்தருளினன்.

இங்ஙனம் பக்தர் சொன்னபடி செய்ததனால், அப்பெருமானுக்கு ''யதோக்தகாரி'' என்று வடமொழியிலும், ''சொன்ன வண்ணஞ் செய்த பெருமாள்'' என்று தென்மொழியிலும்

திரு நாமம் வழங்கலாயிற்று. இவர்கள் சென்று ஓரிராத்திரி தங்கி யிருந்த ஊர் ''ஓரிரவிருக்கை'' எனப் பெயர் பெற்றது. [இஃது இக்காலத்து ''ஓரிக்கை'' என வழங்கப்படுகிறது. இது பாலாற் றங்கரையில் உள்ளது].

கச்சிப்பதி முன்போலப் பொலிவு பெறவே அரசனும் பாக வதர்களது மகிமையை யுணர்ந்து அதுமுதல் அவர்கட்கே அடியவனுய் வாழ்ந்து வந்தான்.

3. செய்யுள் 46:- விண்டுராதனை முன் கருவூடு காத்த திருமால்

விண்டுராதன் என்றது அபிமன்யுவின் புத்திரனை பரீட் சித்தை. இவன் விஷ்ணுவால் ஆபத்தினின்றும் காப்பாற்றப் பட்டான். ஆகையால் விஷ்ணுவால் **கொடுக்கப்பட்டவன்** என்ற பொருளில் விண்டுராதன் என வந்தது.

துரியோதனன் குற்றுயிரோடு கிடப்பது கண்டு அசுவத் தாமன் அவனிடம் சென்று ''பாண்டவரை இன்று இரவில் கொல்வேன்'' என்று சபதங் கூறி அவரிருந்த பாசறை புகுந்து, ஆங்குத் தோன்றிய பூதத்தினுல் முதலில் தகைக்கப்பட்டுப் பின்னர் சிவபூசை செய்து பெற்ற ஆயுதத்தால் அப்பூதத்தைத் தோற்கடித்து விரட்டியோட்டிப் படைவீட்டினுள் புகுந்து அங்குத் தூங்கிக் கொண்டிருந்த திட்டத்துய்மனைத் தலைதுணித்து, எதிர்த்து வந்த பாஞ்சாலரனைவரையும் ஒழித்துப் பின்னர் ஆங்குப் படுத்திருந்த உபபாண்டவரைப் பாண்டவர்கள் என்று மாருகக் கருதி அசுவத்தாமன் தலை துணிக்க, அத்தலைகளை யெடுத்துக் கொண்டு துரியோதனனையடைய, அவன் அவற்றை நோக்கி ''இவை பாண்டவர்கள் தலையல்லவே'' எனக் கடிந்து அப்பாவம் தீரத் தவஞ்செய்யும்படி விடை கொடுத்தனுப்பினன். அப்பொழுது அசுவத்தாமன் பாண்டவர் பூண்டையே அழித்து விட வேண்டும் என்னும் எண்ணத்துடன் விடுத்த **அபாண்டவம்** என்ற அஸ்திரமானது அபிமன்யுவின் மனைவியான உத்தரையின் வயிற்றிலிருந்த கருவையும் சிதைக்க வர, அதனைத் தன் சக்கரப் படையால் வலியொடுங்கச் செய்து கண்ணபிரான் கருவிலே யிருந்த குழந்தை பரீட்சித்தைக் காப்பாற்றினுர்.

''மலர்ந்த செங்கதிர் மாமணி யிழந்தவன் மலர்விழி
சிவப்பூர
அலர்ந்த தாமரைப் பொகுட்டுறை யயன்படை **யபாண்டவ**
மெனத்தூண்ட

உலங்க லந்ததோ ளேவர்த முயிர்பிழிந் துண்ணவந் துறல்
பாரா

இலங்கு மாழியை நோக்கினன் மறைமுத லிரிந்ததப் படை
மாதோ''

—(தன்மபுத்திரன் அரசியலடைந்த அத்தியாயம், 24)

என்பர் பாகவதத்தும். [அபாண்டவியம் - அபாண்டவம்; பாண்டவரைக் கருவறுப்பது; இதனைப் பிரமசிரோஸ்திர மென்றும், ஐஷீகாஸ்திரமென்றும் கூறுவர்].

4. செய்யுள் 52:- மருப்பார் வராகர் பெருங்கடற்கே துறை தாங்கு பார்மகள் சோராமல் தாங்கியமை

முன்னொரு காலத்தில் பூமியைப் பாயாகச் சுருட்டியெடுத்துக் கொண்டு கடலில் மூழ்கிப் போன இரணியாக்கன் என்னும் அசுர ராசனைத் தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளின்படி திருமால் வராக ரூபமாகத்திருவவதரித்துக் கொன்று பூமியைக் கோட்டாற் குத்தியெடுத்துக் கொண்டு வந்து விரித்தருளின னென்பது வரலாறு. ஒரு பிரளயத்திற் சமுத்திர ஜலத்தில் மூழ்கிப் போன பூமியை மகாவிஷ்ணு வராகவடிவங் கொண்டு எடுத்து வந்தனனென்னுங் கதையும் உண்டு; அன்றியும், விஷ்ணு ஆதிவராகரூபியாய்ப் பூமியின் கீழிருந்து அதனைத் தாங்கி நின்றனனென்றும் புராணம் கூறும்.

5. செய்யுள் 54:- ''கல்லென்ற பெண்ணை நடவென்ற மாயன்''

அகலிகையின் பேரழகில் ஈடுபட்டு அவளை மனைவியாக் கொள்ளக் கருதியிருந்த இந்திரன் பின்னர் அவள் கௌதம முனிவரின் பத்தினியாயினமை கண்டு பொறாமை கொண்டு வேற்றுருவத்தால் அவளைக் கற்பழிக்கக் கருதினன். இவ்வாறு பல நாளாய்ப் பெருங் காதல் கொண்டிருந்த தேவேந்திரன் ஒரு நாள் நடுராத்திரியில் கௌதமராச்சிரமத்திற்கு அருகே வந்து பொழுது விடியுங் காலத்துக் கோழி கூவுவது போலக் கூவ, அது கேட்ட முனிவர் சந்தியா காலம் சமீபித்து விட்டதெனக் கருதி யெழுந்து காலைக்கடன் கழிக்கும் பொருட்டு நீர்நிலை நோக்கிப் புறப்பட்டுச் செல்ல, அப்பொழுது இதுவே சமயம் என்று இந்திரன் அம் முனிவுருக் கொண்டு ஆச்சிரமத்துட் சென்று இவளோடு கலக்கையில், இவளும் ''தன் கணவர் அல்லன், இந்திரன்'' என்று உணர்ந்தும் விலக்காமல் உடன்பட்டிருக்க, அதனை ஞானக் கண்ணாலறிந்து உடனே மீண்டு வந்த அம்முனிவர் இவளைக் கருங்கல் வடிவமாம்படி சபித்து, உடனே இவள் அஞ்சி நடுங்கிப் பலவாறாக வேண்டிக் கொண்டதற்கு இரங்கி ''ஸ்ரீராமபிரானது

திருவடித்துகள் படுங்காலத்து இக்கல் வடிவம் நீங்கிச் சுய உருவம் பெறுவாய்'' என்று அனுக்கிரகிக்க, அவ்வாறே கல்லுருவமாய்க் கிடந்த அகலிகை இராமபிரான் திருவடி பட்டமாத்திரத்தில் இயற்கையுருவம் அடைந்து, கௌதம முனிவரிடம் நடந்து சென்று சேர்ந்தாள் என்பது கதை. ''கோதமன்றன் பன்னிக்கு முன்னையுருக் கொடுத்ததிவன், போதுநின்ற தெனப் பொலிந்த பொலன் கழற்காற் பொடி கண்டாய்'' என்றது கம்பராமாயணம்.

6. செய்யுள் 60:- கைக்குன்றம் காத்த நெடுமால்

இந்திரத்யும்நன் என்னும் அரசன் மிக்க விஷ்ணு பக்தியுடையவனாய் ஒரு நாள் விஷ்ணு பூசை செய்து கொண்டிருக்கையில் அகஸ்திய மகா முனிவர் அவனிடம் எழுந்தருள, அப்பொழுது அவன் தன் கருத்து முழுவதையும் திருமாலைப் பூசிப்பதிற் செலுத்தியிருந்ததனால் அவ்விருடியின் வருகையை யறிந்திடானாய் அவனுக்கு உபசார மொன்றும் செய்யாதிருக்க, அம்முனிவன் தன்னை அரசன் அலட்சியஞ் செய்தானென்று மாறாகக் கருதிக் கோபித்து, ''நீ யானை போலச் செருக்குற்றிருந்ததனால் யானையாகக் கடவை'' என்று சபிக்க, அங்ஙனமே அவன் ஒரு காட்டில் யானையாகத் தோன்றினனாயினும், முன் செய்த விஷ்ணுபக்தியின் மகிமையால் அப்பொழுதும் விடாமல் நாடோறும் ஆயிரந் தாமரை மலர்களைக் கொண்டு திருமாலை அருச்சித்துப் பூசித்து வருகையில், ஒரு நாள் பெரியதொரு தாமரைத் தடாகத்தில் அருச்சனைக்காகப் பூப்பறிப்பதற்குப் போய் இறங்கிய பொழுது அங்கே பெரிய முதலையாய்க் கிடந்த ''ஹூஹூ'' என்னும் கந்தருவன் அவ்யானையின் காலைக் கௌவிக் கொள்ள, அதனை விடுவித்துக் கொள்ள முடியாமல் கஜேந்திரன் ''ஆதி மூலமே!'' என்று கூவியழைக்க, உடனே திருமால் கருடாரூடனாய் அங்கு எழுந்தருளித் தனது சக்கராயுதத்தைப் பிரயோகித்து முதலையைத் துணித்து யானையை அதன் வாயினின்றும் விடுவித்து இறுதியில் அதற்கு முத்தியை அருள் செய்தனனென்பதாம்.

7. செய்யுள் 66:- அரா மகுடச் சிரசில் திருநடஞ் செய்தமை

யமுனா நதியில் ஒரு மடுவில் இருந்து கொண்டு அம்மடு முழுவதையும் தன் விஷாக்கினியாற் கொதிப்படைந்த நீருள்ள தாக்கிப் பானத்துக்குத் தக்கதாகாதபடி செய்த காளியனென்னும் ஐந்தலை நாகத்தைக் கிருஷ்ணன் தண்டிக்க வேண்டுமென்று திருவுள்ளங்கொண்டு அம்மடுவிற் குதித்து, அந்நாகத்தின் படங்களின் மேலேறித் துகைத்து நர்த்தனஞ் செய்து நசுக்கி வலியடக்குகையில், மாங்கலிய பிக்ஷையிட்டருள வேண்டுமென்று தன்னை

வணங்கிப் பிரார்த்தித்த நாக கன்னிகைகளின் விண்ணப்பத்தின்படி அந்தக் காளியனை உயிரோடு கடலிற் சென்று வாழும்படி விட்டருளினனென்பது.

8. செய்யுள் 74:- ஆழியிலோர் மீனதுவானது

முன்னொரு காலத்திற் பிரமதேவன் கண்துயில்கையில் சோமகனென்னும் அசுரன் வேதங்களையெல்லாம் கவர்ந்து கொண்டு கடலினுள் மறைந்து செல்ல, பிரமன் முதலிய தேவர்களின் வேண்டுகோளினால் திருமால் ஒரு மீனாகத் திருவவதரித்துக் கடலினுட்புக்கு, அவ்வசுரனைத் தேடிப் பிடித்துக் கொன்று அவன் கவர்ந்து சென்ற வேதங்களை மீட்டுக் கொணர்ந்து அன்னப் பறவை வடிவங் கொண்டு அவற்றைப் பிரமனுக்கு உபதேசித்தருளினான்.

9. செய்யுள் 78:- கல் நார் யாக்கப்பட்டமை (உரலிற் கட்டுண்டது)

கண்ணன் குழந்தையாயிருக்குங் காலத்தில் துன்பப்படுத்துகின்ற பல திருவிளையாடல்களைச் செய்யக் கண்டு கோபித்த நந்தகோபர் மனைவியான யசோதை, ஒரு நாள் கிருஷ்ணனைத் திருவயிற்றில் கயிற்றினாற் கட்டி ஓருரலிலே பிணித்துவிட, கண்ணன் அவ்வுரலையிழுத்துக் கொண்டு தவழ்ந்து அங்கிருந்த இரட்டை மருத மரங்களின் நடுவே எழுந்தருளிய போது, அவ்வுரல் குறுக்காய் நின்று இழுக்கப்பட்ட படியினாலே அம்மரங்களிரண்டும் முறிந்து விழுந்தவளவில், முன் நாரதர் சாபத்தால் அம்மரங்களாய்க் கிடந்த நளகூபரன், மணிக்கிரீவன் என்னுங் குபேர புத்திரரிருவரும் சாபந்தீர்ந்து சென்றனரென்பது கதை.

10. செய்யுள் 80:- முனம் தானை காததவர்

ரஜஸ்வலையாயிருக்கும் தன்மையையும் எண்ணிப்பாராமல் தலைமயிரைப் பிடித்திழுத்துத் திரௌபதியைத் துச்சாசனனைக் கொண்டு துரியோதனன் சபை நடுவிற் கொண்டு நிறுத்தித் துகிலுரிய ஆணையிட்டு மானபங்கஞ் செய்யத் தொடங்க, அவள் பொறுக்க மாட்டாமல் ''கோவிந்த! புண்டரீகாக்ஷ! ரக்ஷ மாம் சரணாகதாம்'' என்று சொல்லிக் கண்ணபிரானைச் சரணமடைய, அவளுக்கு ஆடைகள் பல நிறங்களோடு மேன்மேல் சுரக்க அப்பிரான் அருள் புரியவே, துச்சாசனனும் சலித்திருகையிளைத்து நின்றான். இங்ஙனம், ''திரௌபதிக்கு ஆடை சுரந்தது கோவிந்த நாமமிறே''.

11. செய்யுள் 82:– ஒருபொற்கணையால் வன்மரம் ஏழெய்த மாயோன் (மராமரம் எய்தது)

இராமலட்சுமணரை அனுமன் மூலமாகச் சுக்கிரீவன் சிநேகித்த பிறகு, தனது பகைவனை வாலியைக் கொல்லும் வல்லமை இராமபிரானுக்கு உண்டோ இல்லையோ என்று ஐயமுற்றுத் தன் சந்தேகந்தீரும்படி ''எதிரிலிருந்த ஏழு மராமரங்களையும் ஏககாலத்தில் தொளையிடும்படி எய்ய வேண்டும்'' என்று சொல்ல, உடனே இராமபிரான் ஒரே அம்பு தொடுத்து அம்மரங்களேழையும் தொளைபடுத்தினனென்பது.

12. செய்யுள் 100:– கல்லெழிலிபெய்யக் கைக்குன்றெடுத்து நிரைகாத்த கண்ணன்

திருவாய்ப்பாடியில் ஆயர்கள் எல்லாரும் கூடி மழையின் பொருட்டாக இந்திரனை ஆராதித்தற்கென்று வழக்கப்படி சமைத்த சோற்றைக் கண்ணபிரான் ஒருகால் அவனுக்கு இடாதபடி விலக்கிக் கோவர்த்தன மலைக்கு இடச் சொல்லித் தானே ஒரு தேவதா ரூபங்கொண்டு அமுது செய்தருள, அவ்விந்திரன் கோபத்தோடு புஷ்கலாவர்த்தம் முதலிய பல மேகங்களையேவிக் கண்ணன் விரும்பி மேய்க்கின்ற கன்றுகட்கும் பசுக்கட்கும் கண்ணனுக்கு இஷ்டரான இடையருக்கும் இடைச்சியர்க்கும் தீங்கு தரும்படி கல்மழையை ஏழுநாள் இடைவிடாது பெய்வித்த பொழுது, கண்ணன் கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்து மழையைத் தடுத்து எல்லாவுயிர்களையும் இடையூறு சிறிதுமின்றிக் காத்தருளினனென்பதாம்.

இந்நூலிற் பயிலும் வைணவ வழக்காறுகளும் வைணவ தத்துவக்கருத்துக்களும்

1. செய்யுள் 3 :- ''கான் மலரும் துழாய்மால்''

திருத்துழாய் விஷ்ணுவிற்குச் சிறப்பாக அமைந்த ஓர் அடையாளமாகும். அது அங்குரிக்கும் போதே நறுமணம் வீஞ்சிக் கிடக்கும். ''நாற்றத்துழாய் முடி நாராயணன்'' என்று ஆண்டாள் திருப்பாவையில் போற்றுகின்றாள். வில்லிபுத்தூரரும் இராமபிரான் ''சென்ற வழி இன்றளவும் துளவம் நாறும்சேது'' (அருச். தீர்த்த: 45) என்று பாராட்டுகின்றார். அத்தகைய திருத்துழாய்ப் பிரசாதம் வைணவர்களுக்குச் சிறந்ததாதலின், வைணவக் கோயில்களில் திருத்துழாயைப் பிரசாதமாகக் கொடுப்

பதைக் காண்கிறோம். துழாயைப்பற்றி இக்கோவை நூலின் ஆசிரியர் பரக்கப் பேசியுள்ளார். அவை வருமாறு:—

காண்மலரும் துழாய்மால் (கான்-வாசனை) (3)
சூட்டிய பச்சைத்துளவோன் (4)
காதம் தொடுக்கும் துளவார் வராகர்(20)
சுருள்கொண்ட மாலைத்துழாய்(29)
சூட்டுண் துளவத் திருமால்(30)
நுண்தாது இறைக்கும் துழாயோன்(56)
புனையும் துளபத் திருமால் (68)

2. செய்யுள் 15:– ''தெரிசனம்தந்து''

''தரிசனம்'' என்ற சொல் காட்சி என்ற பொருளதெனினும், இஃது பெருவழக்காக வைணவர்களிடை வழங்கப்படும். வில்லியும் ''சேது **தரிசனம்** செய்தான் திறல்வல்லோனே'' என்றார். (அருச். தீர்த்த: செ:45). கருடதரிசனம், கோபுர தரிசனம் என வழங்குகை வைணவர் மரபு. மேலும், சித்தாந்தத்தை (முடிந்த முடிபை)த் தரிசனம் என்பதும் உண்டு (The Darsanas). விசிட்டாத்துவைத சித்தாந்தத்தை ''எம்பெருமானார் தரிசனம்'' என்பர்.

''எம்பெருமானார் தரிசன மென்றே யிதற்கு
நம்பெருமாள் பேரிட்டு நாட்டி வைத்தார்'' என்றது உபதேசரத்தின மாலை (செ: 38)

3. செய்யுள் 31 :- முன்வந்தருள்மால்

இங்கு ''முன் வந்தருள்மால்'' என்றதால் ''பரகதஸ்வீகாரம்'' என்ற சாஸ்த்ரார்த்தம் பேசப்படுகிறது. பரகத ஸ்வீகாரமாவது - எம்பெருமான் **தானாகவே** சேதநனை ரக்ஷ்யப் பொருளாக ஏற்றுக் கொள்வது. [சேதனன் எம்பெருமானை உபாயமாக வரிப்பதற்கு ''ஸ்வகதஸ்வீகாரம்'' என்று பெயர்]. இப்படிப்பட்ட ''முன்வந்தருள் செய்கை'' என்னும் பரகத் ஸ்வீகாரத்தைக் குகப் பெருமாள் பக்கலிலும் அனுமன் பக்கலிலும் இராமபிரான் அருள் புரிந்த வகையால் தெளியலாம். இதனை உலகாரியர் தமது ஸ்ரீ வசனபூஷணத்தில் பின் வருமாறு குறிப்பிடுகிறார் இரண்டு சூர்ணிகைகளில் (150,151). ''அபேக்ஷாநிரபேக்ஷமாகத் திருவடிக்கும் ஸ்ரீ குகப்பெருமாளுக்கும் இது உண்டாய்த்து'' (150).

''இவன் முன்னிடுமவர்களை அவன் முன்னிடுமென்னுமிடம் அபயப்ரதாநத்திலும் காணலாம்''. (151) என்பன.

இவற்றின் கருத்துச் சுருக்கம்

(150) —குகனும் அனுமனும் யாதொரு அபேக்ஷையும் (விண்ணப்பமும்) தெரிவியாதிருக்கச் செய்தே, இராமபிரான் **தானாகவே** சென்று கங்கா கூலத்திலே குகனையும், பம்பா தீரத்திலே அனுமனையும் அங்கீகரித்து அருளியமை காண்க. இங்கு, பரகதஸ்வீகாரம் உண்டாயிற்று.

(151) இப்படி, ஸ்வதந்திரனாக அவன் இவர்களை அங்கீகரித்த இடத்திலும் புருஷகாரத்தை (இக்காலத்து 'சிபார்சு' போல்வது) முன்னிட்டு அங்கீகரித்தாரோ என்ற வினா எழுகின்றது. அதற்கு விடையாக - இச்சேதநன் தான் ஆச்ரயிக்கிற போது புருஷகாரமாக முன்னிடுமவர்களை, அவனும் அங்கீகரிக்கும் போதும் முன்னிடுவன். இதனைக் குகனை அங்கீகரிக்கும் போது இராமபிரான் ''மாழைமான் மடநோக்கி உன் தோழி, உம்பி எம்பி'' என்று இளையபெருமாளையும் (இலக்குமணனையும்) பிராட்டியையும் (சீதையையும்) முன்னிட்டுக் கொண்டமையாலும், அனுமனை அங்கீகரிக்கும்போது ''தமப்ய பாஷ ஸௌமித்ரே ஸுக்ரீவ ஸசிவம்கபிம்'' என்று இளையபெருமாளை முன்னிட்டுக் கொண்டமையாலும் தெளியலாம். ஸ்ரீ விபீஷணனை அபயப்ரதாந பூர்வகமாக அங்கீகரிக்கிற விடத்திலும் ''கதிரோன் மைந்த! கோதிலாதவனை நீயே என் வயின் கொணர்தி'' யென்று சுக்ரீவனை முன்னிட்டுக் கொண்டமையும் காண்க.

இனி, சேதனன் முன்னிடுவது போல இவனும் முன்னிட வேண்டுமோ என்னில், அத்தகைய நிர்ப்பந்தம் இன்றெனினும், சேதந லாபம் ஈசுவரனுக்கேயா மன்றோ! அதாவது - சேதநனை யடைபவனும், தன்னையடையச் செய்பவனும், சேதநனைப் பெற்று மகிழ்பவனும் எம்பெருமானே யாகையால் சேதந லாபம் ஈசுவரனுக்கேயாகின்றது. ஆகவே, முன்வந்தருள் செய்வதாகிய பரகதஸ்வீகாரமே பேற்றுக்கு உபாயம் என்பது வைணவ சித்தாந்தம்.

நம்மாழ்வாரும் திருக்காட்கரைத் திருவாய்மொழிப்பத்தில் இவ்விழுமிய தத்துவத்தைக் காட்டுகிறார்:

> ''வாரிக் கொண்டுன்னை **விழுங்குவன்** காணிலென்று
> ஆர்வுற்ற என்னையொழிய என்னின் முன்னம்
> பாரித்துத் தான் என்னை முற்றப்**பருகினான்**
> காரொக்கும் காட்கரையப்பன் கடியனே'' என்று. [9-6-10]

செய்யுள் 37 :- திருவுளந் தேறி நில்லே

இத்தொடர் ''பாங்கன் தலைவனைத் தேற்றல்'' என்ற துறையினது. தேற்றும் போது பாங்கன் ''சீலத்தை ஆய்ந்த திறலாய்! திருவுளம் தேறி நில்லே'' என்றான்.

இங்குக் கவனிக்க வேண்டிய சொல் ''**திருவுளம்**'' என்பது. ''சுவாமிக்குத் திருவுளம் என்ன?'' என்பது சர்வ சாதாரணமாக வைணவரிடம் வழங்கும் பேச்சு நடை; அதாவது, ''உமக்கு என்ன விருப்பம்; உமது மனக்கருத்து என்ன?'' . இதனைக் கம்பராமாயணத்தில் கம்பன் சிறப்புறக் காட்டியுள்ளமை ஒப்புக் காண்க:

'' எல்லைநீத்த
அருத்தியன் தேனும் மீனும் அமுதினுக் கமைவதாகத்
திருத்தினன் கொணர்ந்தேன் என்கொல் **திருவுளம்** என்ன வீரன்
விருத்த மாதவரை நோக்கி முறுவலன் விளம்பலுற்றான்''
(அயோத். கங்கைப்:42)

ஒரு வேட்டுவன் வாயில் சிறந்த வைணவப் பேச்சு வருவதே என்று முறுவலனாயினன் இராமபிரான் என்பது ஈண்டு தேற வேண்டிய நயம். கம்பர் பரமவைணவராதலின் இங்கு அச்சொல்லைப் பிரயோகித்துக் காட்டியுள்ளார். [அமுது, திருத்தினன், திருவுளம் என்பன வைணவர் பேச்சு நடை: குகப்பெருமாள் ஆதலின் அவன் வாயில் இவை பயில்வன]

செய்யுள் 59 :- வைகிடமாந்தேசம் (வைகுண்டம்) தரவல்ல ஞானவராகர்

அந்தமி லின்பத்து அழிவில் வீடு என்றும், கலங்காப் பெரு நகரம் என்றும் பாராட்டப் பெறும் வைகுந்த மாநகரம் தர வல்லவர் திருமாலாகிய பரமபதநாதர் என்பது அறிய வேண்டுவது. ''சரணமாகுந் தன தாளடைந்தார்க் கெல்லாம் மரண மானால் வைகுந்தம் கொடுக்கும்பிரான் ''(9-10-5) என்கிறார் நம்மாழ்வார். இதனால், தமக்கு வைகுந்தப் பேறு நிச்சயம் என்று அறுதியிட்டபடி. அங்ஙனமே அவரே மேல் ''வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே'' (10-9-9) என்கிறார். ஆகவே, சேதநர்க்கு நித்தமுத்தர்களோடு ஒக்கச் சேர்ந்திருந்து நித்ய கைங்கரியஞ் செய்து போருவதே துணிந்த துணிபு என்பது தேற்றமாயிற்று. இந்த ஸ்ரீ வைகுண்டலோகம் எப்படியிருக்கிறது என்பதைத் திருவரங்கத்துமாலை செய்யுள் பின்வருமாறு விவரிக்கிறது:— இஃது எந்த உலகத்தும் மேலது; நித்திய

இன்பத்தது; பந்தம் நசிப்பது; நித்தரும் முத்தரும் பாரிப்பது; முந்தை மறையினின் றல்லாது (வேறு வகையால்) எத்தேவர்க்கும் முன்ன அரிது; அந்தம் இலது; கம்பர் பெருமானும் இந்தப் பரம பத நிலையை—

''சிறுகா லையிலா நிலையோ திரியா
குறுகா நெடுகா குணம்வே றுபடா
உறுகால் கிளர்பூ தமெலா முகினும்

மறுகா நெறியெய் துவென்வா னுடையாய்'' ஆரணிய சரபங்க. செ: 93)

செய்யுள் 67 :- 'ஏதாம் பிரபன்னர் ஆணையெய் தோமென் றியம்பியதே'

இத்தொடரில் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய சொற் பிரயோகம் ''**பிரபந்நர்**'' என்பது. இது வைணவ சித்தாந் தத்திலேயே அடிக்கடி பேசப்படுகின்ற சொல். ஆழ்வார்களுக் குள் தலைசிறந்த நம்மாழ்வாரைப் ''பிரபந்ந ஜன கூடஸ்தர்'' எனப் பாராட்டுவர். யார் இந்தப் பிரபந்நர்? அச்சொல்லின் ஆழ்பொருள் என்ன என்பதைக் காண்போம்.

பிரபந்நன் :-

மோட்சத்தில் விருப்புடையனாய், சர்வேசுவரனையே பற்றி யிருக்குமவன் பிரபந்நன். அவனுக்கு இரண்டு முக்கிய பண்புகள் இருக்க வேண்டும். (1) அநந்ய கதித்வம் (வேறு ரக்ஷகமில்லாமை) (2) ஆகிஞ்சந்யம் (கைம்முதல் இல்லாமை)

அநந்யகதித்வமாவது — ''களைவாய் துன்பம் களையா தொழிவாய் களைகண் மற்றிலேன்'' என்கிறபடியே சர்வேசு வரனையொழிய வேறொரு ரக்ஷகர் இல்லை என்றிருக்கை.

உடன்பிறந்தோர், மைந்தர்கள், தாய்தந்தையர், பிரம ருத்ராதி தொடக்கமான தேவர்கள் ரக்ஷகராதல் கூடாதோ, அவர்களுக்குக் குறையென் என்னில்:—

''உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா, உடன்பிறந்தே கொல்லும் வியாதி'' என்பது போல, அவர்கள் ரட்சகர் அல்லர் என்பதை வாலி பக்கலிலும், இராவணன் பக்கலிலும் காணலாம்.

மைந்தர்கள் ரக்ஷகரல்லர் என்பதை ருத்திரன் பக்கலிலும், கம்சன் பக்கலிலும் காணலாம். (ருத்திரன் தன் தந்தையாகிய நான்முகன் தலையையே கிள்ளினான்; கம்சனோ தன் தந்தையாகிய உக்கிரசேனனைச் சிறையிலிட்டான்).

தாய் தந்தையர் ரக்ஷகரல்லர் என்பதைக் கைகேயி பக்கலிலும், இரணியன் பக்கலிலும் காணலாம்.

மனைவியர்க்குக் கணவன்மார் ரக்ஷகரல்லர் என்பதைத் தரும புத்திராதிகள் பக்கலிலும் நளன் பக்கலிலும் காணலாம்.

தேவேந்திரன் ரக்ஷகனல்லன் என்பதை அவன் ''எப்போது நம் பதம் நழுவப் புகுகிறதோ'' என்று அஞ்சியே, இந்திரசித்து, மகாபலி போல்பவர் கையிலே ஐசுவரியத்தைப் பறிகொடுத்துக் கண்ணும் கண்ணீருமாய்த் திரிபவனாதலின், ரக்ஷகனாக மாட்டான்.

பிரமன் ரக்ஷகனல்லன் என்பதை மதுகைடபர்கள் கையிலே அகப்பட்டு வேதங்களைப் பறிகொடுத்ததாலும், ருத்திரன் கையிலே தலையறுப்புண்கையாலும் அறியலாம்.

ருத்திரன் ரக்ஷகனல்லன் என்பதைச் சகல பிராணிகளையும் சம்ஹரிக்கையே தொழிலாக உடையனாதலாலும், தன்னை வழிபட்ட அடியார்களைக் கொண்டு கொடுந்தொழில்களைச் செய்வித்துக் கொள்கையாலும், தனக்குப் பிதாவான பிரமனின் தலையைத் திருகிய பாதகத்தால் கையும் கைத்தளையும் பூண்டு திரிவாரைப் போலே கையும் கபாலமுமாய் இரந்துண்டு திரியும் ஒருவனாகையாலும் ரக்ஷகனாக மாட்டான் என்பதை அறியலாம்.

இனி, ''பணம் பத்தும் செய்யும்'' என்பது போலச் செல்வம் ரக்ஷகமாமோ என்னில் — கள்ளர், அரசர், தாயத்தார் இவர்களால் கொள்ளப் படுதலேயன்றிக் காமம், வியாதிகட்கு ஆட்படுத்தித் தற்கொலையிற் கொண்டு விடுதலாலும் செல்வம் ரக்ஷக மாக மாட்டாது.

ஆக, ஈசுவரன் ஒருவனே ரக்ஷகன் ஆவன். இதனைத் தானே ஏறிட்டுக் கொண்டு கழுத்திலே ஓலை கட்டித் தூது போயும், புருவம் நெரித்த விடத்திலே தேரை நடத்தியும், மார்பில் அம்பேற்றும், சாவாரை நோக்கியும், செத்தாரை மீட்டும், நிரூபித்தான். ஆக, நாராயணனே ரக்ஷகனாவன்.

இனி, **ஆகிஞ்சந்யமாவது** - எல்லா வகையாலும் ஈசுவரனுக்கே இட்ட வழக்காயிருக்கிற இருப்பை நினைத்து, நம் காரியத்தை நாமே செய்து கொள்ளத் தகுதியில்லாதவர்கள் என்றிருக்கை.

இவ்விரண்டு பண்புகளையுடையனாய் ஈசுவரனையே உபாயமாகப் பற்றுகையாலே நிர்ப்பரனாய் (சுமையற்றவனாய்) இருக்கு

மவனுக்கு உயிர்பிரியும் காலத்து மயக்கம் அணித்தானவாறே ''**நயாமி**'' என்று அருள் செய்தபடியே (வராஹ சரமஸ்லோகம்) ஈசுவரன் தானே சரக்காளாய் (சொந்தக்காரனுய்) வந்து, பரம பதத்தேறக் கொண்டுபோய் நித்யமுக்தரோடு ஒருவனுக்கி நித்ய கைங்கரியத்தையும் கொடுத்தருளுகிருன்.

செய்யுள் 75:- வராகப்பெருமாள் பொற்கோவில் திருச்சங்கமும் கைவரு சங்கமும் போல் வாழி ஆயிரம் காலங்களே.

இங்ஙனம் வைணவ சமய நூல்களில் சங்கினைப்பற்றிக் குறிப்பது மரபு. உதாரணமாக, ''வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ'' (திருப்பாவை, 6) ''விடிவை சங்கொலிக்கும் திருவண்வண்டூர்'' (திருவாய்மொழி, 6-1-9) முதலியன நோக்குங்கால், முற்கால வழக்கப்படியே கரந்தையிலும் வராகப் பெருமான் கோயில் திருச்சங்கு முழங்குவது கூறப்பட்டது, சம்பிரதாயம் வழுவாமற் காப்பது காண்க.

கைவருசங்கம் - பாஞ்சசன்னியம்: ''பாஞ்சசன்னியம் போல்வாழி'' என்றவிடத்து ''படைபோர்ப் புக்குமுழங்கும் அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே'' என்ற திருப்பல்லாண்டு அநுசந்தேயம்.

''சங்கரையா! உன் செல்வம் சால அழகியதே'' என்று நாச்சியார் திருமொழி (7-7) பாராட்டும்படி சகல போகங்களையும் அநுபவிப்பவனுக இருப்பதால், அவனைப் போலவே நாமும் சகல போகங்களும் பெற்று வாழ்வோம் என்னும் கருத்தோடு ''அவன் சங்கமும் போல் வாழி'' என்றதுமாம்.

செய்யுள் 102:- வாழி வாழ்த்து

இதனை ''மங்களாசாசனம்'' என்பர். அதாவது, மங்களங் களைப் பிரார்த்திப்பது, ஆழ்வார் ஆசாரியர்களுக்கும் வாழி திருநாமம் உண்டு. மற்றும் இந்த மங்களாசாசனம் செய்தவர் களுள் விஷ்ணுசித்தராகிய பட்டர்பிரான் ஏனைய ஆழ்வார்களினும் விஞ்சி நிற்றலால் **பெரியாழ்வார்** என்று பெயர் பெற்ருர்.

''மங்களா சாசனத்தில் மற்றுள்ள ஆழ்வார்கள்
தங்களார் வத்தளவு தானன்றிப் - பொங்கும்
பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரான் பெற்ருன்
பெரியாழ்வா ரென்னும் பெயர் (செ: 18) என்பது உபதேச ரத்தினமாலை.

அவருடைய திருப்பல்லாண்டு தினந்தோறும் எல்லாத் திவ்ய தேசங்களிலுமுள்ள திருக்கோயில்களில் அநுசந்தானம் பண்ணப்

படுவது அனைவருக்கும் தெரியும். ஆக, சாற்றுமுறை முழுவதும் இவ் **வாழ்த்தினைக்** கொண்டு முடிவதைக் காணலாம்.

திருமாலுக்காகும் தொடர்கள்

அமுதாசனரைக் குடிவைத்த வேதியர் ஆதிவராகர்,(49)
அராமகுடச்சிரசில் திருநடஞ் செய்தார்,(66)
இடைச்சியர் வாய்ச்சீர் முத்து அமுதஞ் செய்தவர்(8)
இடைச்சேரியிற் போய் நெய் போல் தயிருண்ட கள்வர் (84)
இருபெண்கள் தாள் வருடக் கடல் துயில்பவன் (25)
இறந்த காலம் எடுத்த பெருமாள் வராகர் (55)
இறைமை பெற்ற மூவரும் ஆனவர் ஆதிவராகர் (89)
எழுபெற்றம் தழுவும் பெருமாள் (22)
ஐந்து தருக்கோவை வாழ்வித்த சக்கரக்கோ (காப்புச்செய்யுள்)
ஓலக்கடற் பள்ளி கொண்டோன் (11)
ஔவியம் தீர்ப்பார் (12)
கட்செவிப்பாயார் (19)
கடற்புவியை வௌவின கார்வண்ணர் (93)
கணையால் வன்மரம் ஏழெய்த மாயோன் (82)
கமல விலோசனர் (36)
கவி கை என்ன மலையேந்து செங்கையர் (27)
கன்ஞரி யாக்கும் வராகர் (78)
கன்று மேய்த்த செங்கண் மாலோன் (2)
காசையை நேர் வண்ணர் (99)
கார்க்குன்றனையார் (50)
கார் தாமரை பல பூத்துச் சமுத்திரத்தே கிடந்தாலனையவர் (40)
குன்றெடுத்து நிரைகாத்தவன் (100)
கூற்றும் இராக்கதரும் பதறும் திகிரியுடையவர்(24)
கைத்தலம் சேர் சக்கரத்தார் (21)
சக்கரக்கோ (காப்புச் செய்யுள்)
சங்கம் தரித்த கரத்தார் (25)
சூட்டுந்துளவத் திருமால் (30)
செங்கட்கருங் கொண்டல் (31)
தானைகாத்தவர் (80)
நாற்பாலார்க்கும் வைப்பு (57)
நிசாசரரைக் கைக்கும் திகிரியர் (48)
திருப்பாற்கடலில் யோகத்துயில் கொண்டவர் (86)
பச்சைத் துளவோன் (4)
பன்னகாசனர் (67)
பார் தாங்கு செச்சையான் (18)

பிறைபோல் வளைந்த மருப்பார் வராகர் (52)
பீதாம்பரர் (67)
பூணுரமார்பர் (69)
பேராயிரமுள்ளபிரான் (71)
மகராலயம் போல் மெய்யோன் (33)
மாமேக வண்ணத்தர் (62)
மீனதுவானவர் (74)
முத்தி நாடாளும் செல்வர் (23)
மைவரு நீலமலை போல்வார் (85)
வந்தடைந்தார்க்கு வரங்களெல்லாம் தரும் தாமரைக்கண்ணர் (94)
வாங்கிய கார்முகன் பார்மகள் கேள்வன் வளைதிகிரி தாங்கிய பாணியந் தாமரையான் (95)
விண்டுராதனைக் கருவூடுகாத்தவன் (46)
விந்தைக்கிசைதந்த மாயோன் (96)
வீரத்திகிரியர் (97)
வெண்சங்கமும் சக்கரமும் தரித்தவர் (1)
வெண்தரள முந்தி நந்தாடு செங்கையர் (64)
வையமெலாம் பூத்தவர் (81)

இனி, இந்நூலினுள் பாட்டுடைத் தலைவனாகிய ஆதிவராகப் பெருமானைச் சார்த்தி அவர் **ஊராகிய கரந்தை** *பேசப்பட்ட திறம் காண்போம்:-*

மாலோன் கரந்தை (2)
வராகர் கரந்தை (5,6,43,50)
மகராலயம் போல் மெய்யோன் கரந்தை (33)
ஆதிவராகர் கரந்தை நகர் (34)
மாயோன் கரந்தை (41,77,82,96)
திருவாளன் செல்வக்கரந்தை (42)
துழாயோன் கரந்தை (56)
வைப்பாய் வணங்கு மாலார் கரந்தை (57)
நெடுமால் கரந்தை (58)
ஞானப் பிரான் கரந்தை (67)
அறங்கண்ட மாயன் கரந்தை (76)
பெருஞ் சமுகத் திறைவர் கரந்தை (88)
தாமரையான் கரந்தாபுரி (95)
நிரைகாத்த கண்ணன் கரந்தை (100)

இனி, கரந்தையைச் சூழ்ந்துள்ள எல்லைப் பகுதி கரந்தை வெற்பு, கரந்தை வரை என்று குறிக்கப்பட்டுப் பாட்டுடைத்

தலைவனைச் சார வைக்கப்பட்டிருத்தலைச் செய்யுட்கள் 1,13, 46,48,51,53,54,55,60,62,73,78 இவைகளிற் காணலாம்.

இனி, கரந்தை நகர் சில **தனிச்சிறப்புக்கள்** கொண்டு மிளிர்கின்றது. அவை பின்வருமாறு:-

பரிசனம் சூழும் கரந்தை (15)
சீரோங்கு செல்வக் கரந்தை (28)
கமல வண்டார் இசைக்கும் கரந்தை (38)
கருமேகபந்தித் தெள்கா மணக்கும் கரந்தை (39)
தென் கரந்தை நகர் (45)
மௌவல் மலர்ந்ததை வண்டு கௌவக் கமழும் கரந்தை (87)
நல்லிருக்குநெறி வர்த்திக்கும் செல்வக் கரந்தை (90).

உவமைகள்

இந்நூலுள் வந்துள்ள சிறந்த உவமைகளைக் காண்போம். அவை பின்வருமாறு:-

அல் வந்தரும்பு நிலாப் போல் (செ:7)
பன்னகாசனம் போல் தெரிசனம் தந்து (15)
கௌவும் புலி நிகர் கூற்று(24)
கிரிவாய் வெளவும் புயலென (24)
மலையம் என்ன முலை யேந்தும் ஆருயிர் செல்லும் (27)
காரொன்று தடந்தாமரை பல பூத்துச் சமுத்திரத்தே கிடந்தாற் போல் (40)
நச்சு மச்சம் போல் கிடந்து துடித்தல் (61)
முலை முத்தாரமும் பொரிமாப் போலே பிதிர்ந்தது (68)
பௌவ மனைய படை வேந்தர் (75)
பனந்தாங்கு கொங்கைப் பசுங்கொடி (80)
காளையும் காதலியும் தேவர்தங்கோன் இந்திராணி என்றே வந்து சேருவர் (89)
யோகத்திலே இலக்குமி போலே; சையோக சுக போகத்திலே ரதிபோலே; வாரத்திலே அன்னை போலே (92)

மேன்மைமிக்க தொடர்கள்

இனி, இந்நூலுள் வந்துள்ள அதி முக்கியமான பொருள் பொதிந்த நயமிக்க தொடர்களைக் கொண்டு இக் கோவை பாடிய ஆசிரியரின் திறனை உணரலாம். அத்தொடர்கள் வருமாறு:-

ஆலோன் விழுங்கும் மும் மண்டலம் (2)
வாய்ச் சீர் முத்து அமுதஞ்செய் (8)

ஏதம் பயில எழில் சிறந்தீர் (16)
ஏர் தாங்கு கொம்பியர் (18)
கூர்தாங்கு முட்பொதிகள் பல வீன்ற குடக்கனி (18)
பாதந்தொடுத்தணிந்தேன் (20)
முலையேந்து மாருயிர் செல்லும் நெடுமூச் செறிந்தே (27)
பொருள் கொண்ட பூண்முலை (29)
முச்சுடர் நண்பன் உண்மை ஆதரவு (31)
ஆலை மலையை அலரையுற்ருர் (35)
பயோதரம் கண்வாய் - குழைதிரு வாணி நிறம் (40)
தீட்டும் பகழிச் சிலை வேடர் நாட்டும்பரண் (43)
நன்னெறியே காட்டும் கருணைப்பெருமாள் (43)
தௌவைக்கு இராவணன் சீர்காட்டி (51)
மை வைத்தனைய மலர்க்குழலாய் (51)
கல்லென்ற பெண்ணை நடவென்ற மாயன் (54)
புல்லென்ற ஆடவரே இதுவோ உங்கள் போர்த்திறமை (54)
இளநெஞ்சியதைச் சேலமெடுத்து இரு செங்கையிலேந் தினள் (55)
வைப்பாய் வணங்கு வராகர் (57)
ஏந்து கச்சுத் தொடுமாமுலை (58)
ஏதாம் பிரபன்னர் ஆனையெய்தோம் என்றியம்புவதே(67)
துணை முத்தாரமும் பொரி மாப்பட்டதே (68)
வாணுள் கணவர் மருவியநாள் மடவார்க்கு (69)
வராகப்பிரான் அருள்போல் சீராய்வளரும் செழுஞ் சாலி (71)
சிறையுலர்த்தி வாராயிருக்கின்ற நாரை (71)
கபோலத்தில் கை வைத்தே மனமலைத்தே நிற்குமே தெரு வாசல் வந்தே (72)
மறங்கண்டகள்ளர் - பூதலத்தில் அறங் கண்டமாயன் (76)
காத்தவராக நிழலாய் நடந்தார் (81)
காவலன் பின்போகவோ தலைமேல் விதி (85)
இவ்வத்(த) தனிக்குத் துணை நான் ஒருத்தியிருந்தனனே(87)
புள்ளரசில் மாகத்திலே வரும் ஆதிவராகர் (92)
கற்பகாலம் கடற்புவியை வெளவின கார்வண்ணர் (93)
அருந்தாத ஆம்பல் பொது மாதர்பானம் ஆடவர்க்கு (94)
விந்தைக் கிசைதந்த மாயோன் (96)
கள்ளம் பரக்கும் கணிகையர் (98)
வேசையர்பாற் சென்ற வேட்கையர் (99)
வெளவிய காதல் மலர்மாது (101)

வருணனைச் சிறப்புக்கள்

இந்நூற் செய்யுட்களில் ஆங்காங்கு வந்துள்ள சொற் றொடர்கள் வருணிக்கும் பான்மை பாராட்டத்தக்கதாய் அமைந் துள்ளது. அஃது விவரிப்பாம்:-

கீதம் பயிலும் கிள்ளை (16)
கூர்தாங்கு முட் பொதிகள் பல வீன்ற குடக்கனி (18)
சிலையேந்து பாணம் திசைமறிந்து ஓடச் செங்காந்த ளொன்று கலையேந்த, ஒன்று கனங்குழல் ஏந்த (27)
ஞெண்டார் அலவன் பயில் வேறு கண்டு தெண்ணீர்க் கமல, வண்டார் இசைக்கும் கரந்தை (38)
தீட்டும் பகழிச் சிலை வேடர் (43)
கரிக்காளிகம் மொய்த்த அருவரை (53)
கண்ணீர் வடிக்கும் கிளி (61)
இளம்பேடும் சேவலும் இளங்காவில் இன்பமுறும் செவ்வி (63)
செய்யில் வாராய் இருக்கிற நாரை சிறையுலர்த்தும் (71)
பொன்னுடன் முத்தும் அகிலுடன் சாந்தும் பொரு தெறியும் **கன்னடியன் பெருகால்** *(73)*
மறங் கண்ட கள்ளர் - பூதலத்தில் அறங்கண்ட மாயன் (76)
மென்மரல் சாய்ந்து எட்டி வேரறத்தீய்ந்து வெள்வேல் கருகிப் புன்மரம் ஒன்றற்ற பாலை (82)
மைபோல் இருண்டது வானம் - மாரி பெய்து செய் போல் குளிர்ந்தது தேசம் (84)
முட்டையிட்ட கெவுளி பலுகு (86)
சந்தத்தனமும், பிதிர்பாலும், பாலனைத் தாங்கு கையும், சுந்தத் தளிரினும் நெய்யாடிய மெய்யும், கார்க்குழலும் கொண்டமின்னனையாள் (96)

உலக வழக்குகள் பயிலும் திறம்

இனி, சாதாரணமாக மக்களிடை உலக வழக்காக வரும் தொடர்கள் இந்நூலுள் திறம்பட அமைக்கப்பட்டுள்ளன. அவை உலக வழக்கில் பேசும் படியையும் இந்நூலகத்துப் பயின்று வந்த படியையும் காண்போம்.

பேசும் படி	நூலுட் பயின்ற படி
இவள் சிரிப்புக்கு விலை கோடி பொன் (8)	*நகை விலை கூறிடில் கோடி பொன் (8)*
இளமை நிற்காது (16)	*நிலையேது இளமை (16)*

பேசும் படி	நூலுட் பயின்ற படி
நோய்க்கு மருந்து பால் (17)	மருந்தெனப் பண்டிதன் பாலை முன்வைத்தான் (17)
கட்டியணைக்கக் குளிரும் அங்கம்(25)	ஊர்பத்திரவுகட்டி அங்கம் குளிரும் (25)
சந்திர சூரியர் ஒழிந்து போனாரோ (29)	என்றும் இந்துவும் எங்கொளித் தாரோ (29)
துணி உடுத்தத் தெரியாது, ஆள் பேச்சைப்பாரு (32)	கலைமருங்கேறுமுனே கல்விச் செல்வம் (32)
விளக்குக்கு மின்மினிப் பூச்சியா(45)	பொன்னில் குன்றிக்காயோ பதிப்பது(45)
மூதேவி பிடித்திருக்கிறது (51)	தௌவைக்குச் சீர்காட்டு (51)
நில்லென்று சொல்லி நிறுத்தி யிருக்கணும் (54)	நில்லென்று சொல்லி நிறுத்தக் கண்டேனில்லை(54)
அவன்தான் நிழல், வேறே நிழலேது (62)	தாமே நிழலன்றி வேறே நிழலில்லை(62)
நமக்குத் தெரிந்து என்ன பலன்? ராஜாவிடம் சொல்லு (66)	அரசர்க்குரைக்கில் வெகு மானம்; மகளிர் அறிந்து ஏது பலன்?(66)
ராத்திரியும் பகலுமாய்க் காணா திருக்கப்பொருள்(69)	பகலிரவாய்க் காணாதிருக்கப் பொருந்தாள்(69)
வாசனைக்குக் கூடத் துப்பு கிடைக்கலையா?(73)	உங்கள் வாசனைக் கோர் மின்னுடன் மேகஞ்செலக் கண்டதோ? (73)
செருப்படி படப்போறே(76)	கள்ளர் செருப்படி ஆங்கவை (76)
கால் கொதிக்குமே, எப்படி நடப்பாய்?(82)	இந்தப்பாலையில் கால் எப்படி வைக்குமோ?(82)
அதோ, பல்லி சொல்லுது பார் (86)	பாக கெவுளி பலுகு (86)

இந்நூலுட் காணும் இதர அம்சங்கள்

இனி, இந்நூலுள் வந்துள்ள தொனி, இறைச்சி, சொற் சுருக்கம் - பொருளாழம், பிறமொழிச் சொற்கள், அபூர்வ பிரயோகங்கள் முதலியன பற்றிக் கூறுவாம்.

(i) தொனி:- ஒரு சொற்றொடரின் மேனோக்கில் ஒரு பொருள் தோன்றினும் உள்ளுறை நோக்கின் மாணிக்கம் போல் தொனியாக வேறொரு பொருள் தோன்றும். அதற்குத் தொனிப் பொருள் என்று பெயர்.

உதாரணமாக. செய்யுட்கள் 83,84 காட்டலாம்.

செய்யுள் 83:- ''மேட்டுக் கிறைத்த புனலோ, கடற் பெய்த மழையோ, காட்டில் எறிந்த நிலவோ உனை நம்பி நான் வந்தது'' என்று தோழியை நோக்கித் தலைவி சொன்னதில், மேனோக்கில் ''உனை நம்பி வந்தது பயனின்று'' எனப் பொருள் தோன்றுமாயினும், ஓகாரங்களின் ஆற்றலால் எதிர்மறைப்' பொருள் தொனியாகக் கிடைக்கிறது. எனவே, ''உனை நம்பி வந்தது பயனுடைத்தே'' என்பது தொனி.

செய்யுள் 84:- அஃதே போல் ''இடைச்சேரியிற் போய், நெய்போல் தயிரையும் உண்ட கள்வர் வராகர் நெடுங்கிரியில் உண்மையாகவே கார் வம்பன்று, மின்னற் கொடியே'' என்ற விடத்து, வராகர் கள்வராயினும், அவர் நெடுங்கிரியில் வந்த கார் கள்ளமன்று என்பது தொனி.

(ii) இறைச்சி:- இனி ''இறைச்சி தானே பொருட் புறத்ததுவே'' (தொல்·பொரு-229) என்னும் விதியால் இறைச்சிப் பொருளுக்கு இந்நூலுள் ஓர் உதாரணம் காட்டுவல்·-

செய்யுள் 87:- ''மௌவல் கமுக மடல் மேல் படர்ந்து மலர்ந்து, வண்டு கௌவக் கமழும் கரந்தை'' என்ற விடத்து, ''மௌவல் வண்டு கௌவக் கமழும் '' என்றதால்—தலைவி தலைவன் சேர நிறம் பெறுவள் என்பதும், ''மௌவல் கமுக மடல் மேல் படர்ந்து மலர்ந்து'' என்றதால் - தலைவி, தலைவனது தோளினை யிறுகக் கட்டித்தழுவுவள் என்பதும் பொருளாகப் பெறப் படுகின்றன.

(iii) சொற்சுருக்கம்—பொருளாழம்

சுருங்கச் சொல்லிப் பொருளாழம் பெற வைத்தல் ஒரு தனி அழகு. உதாரணமாக, இந்நூலுள்:- ''விழிகளின் கவின் பெற வேண்டியன்றோ வண்டு போலக் கயலும் எப்போதும் மாதவஞ் செய்குவதே'' (11) என்றவிடத்து, தனித்தனியே வண்டு தவஞ் செய்குவது என்றும், கயல் தவஞ் செய்குவது என்றும் கூறுமல், ''வண்டுபோல் கயலும்'' என்று சொன்ன நயம் உணர்க.

அஃதே போல் ''நெய்போல் தயிருண்ட கள்வர்'' (84) என்ற விடத்து, தனித்தனியே ''நெய் உண்ட கள்வர்'' என்றும், ''தயிர் உண்ட கள்வர்'' என்றும் கூறுமல், சொற் சுருங்கக் கூறிய நயம் காண்க. அன்றியும் ''பன்னகாசனம் போல் தெரிசனந் தந்து'' (15) என்ற விடத்து, தலைவியின் இடைக்கு மேலழகும்

கீழழகும் குறிப்பிற் பெறவைத்த படியும் காணலாம். அன்றியும், ''இளநெஞ்சி'' (55) என்ற சொல்லும் பொருளாழமுடையது.

(iv) பிறமொழிச் சொற்கள்

இனி, இந்நூலுள் பிறமொழிச் சொற்கள் திசைச் சொற்களாக வந்து நயமூட்டுகின்றன. உதாரணமாக:-

''முட்டையிட்ட கெவுளி பாக பலுகு'' என்ற தெலுங்குப் பிரயோகமும்,

சந்தாடவி (3), வதனும்புயம்(7), பன்னகாசனம்(15), மகராலயம்(33), விமலநிலா (36), கமலவிலோசனர் (36), சந்தனுசலம் (37), மேகபந்தி (39), சசிவதனம் (48), நிசாசரர் (48), அமுதாசனர் (49), கோகனகம் (50), சத்சங்கம் (75) கும்போதயன் (102) முதலிய வடசொற்றொடர்களின் பிரயோகமும்,

கன்னடியன் [கால்வாய்] (73) என்ற கன்னடச் சொற் பிரயோகமும் வந்துள்ளன.

(v) அபூர்வ பிரயோகங்கள்

இனி, ஐந்து தருக்கோ (காப்புச் செய்யுள்), ஏர்தாங்கு கொம்பியர் (18), சீலத்தை ஆய்ந்த திறலாய் (37), இளநெஞ்சி (55), பணி சமுகத்தர் (57), பாக கெவுளி பலுகு (86), கமுகக் கழுத்தியர் (88). சுமுகத்தலைவர் (88), சையோக சுக போகம் (92), அருந்தாத ஆம்பல் (94), உள்ளமென்னும் பள்ளம் பரக்கும் விடாய் (98) முதலிய அபூர்வ பிரயோகங்களும் பார்க்கலாம்.

உரையாக்கம்

ஆதி வராகர் அடியிணை போற்றியே
கோதிலிக் கோவைக் குரைசெய் குவனே.

திருக்கரந்தை
ஆதிவராகப் பெருமாள்
வருக்கக்கோவை

காப்பு

திருக்கோவை யாதி வராகர்நங்
கோவைச் சிறந்தவைந்து
தருக்கோவை வாழ்வித்த சக்கரக்
கோவைத் தமிழ்மணக்கு
மருக்கோவை யாங்கரந் தைக்கோவை
சாற்றும் வருக்கமீந்தீர்
உருக்கோவைப் புள்ளர சைப்பணிந்
தேதுணிந் தோதுவனே.

குறிப்புரை:— இஃது காப்புச் செய்யுள். புள்ளரசனுகிய (பட்சி ராஜனுகிய) கருடபகவானைக் காப்பாகக் கொண்டது. திருமாலாகிய ஆதிவராகப் பெருமாள்மேல் இந்நூல் செய்யப் படுவதாதலின் அவர் ஏறும் ஊர்தி காப்பாதல் பொருந்துவதே. முருகனுக்கு மயிலைக் காப்பாகக் கூறுதலையும் ஒப்பு நோக்குக.

இச்செய்யுள் வாசகர்களை முன்னிலைப் படுத்தியதொன்று; ''வருக்க மீந்தீர்'' என்றமையால் இஃது பெறப்படும். வருக்கம்— ''அ'' முதல் ''வெள'' வரையில். இது எழுத்து வருக்கம் கோவையாய் வருவது.

திருக்கோவை, நம் கோவை, சக்கரக் கோவைப் பற்றிக் கரந்தைக்கோவையாகிய இந்த நூலைச் சாற்றும்படி வருக்கம் ஈந்தீர் என்பது பொழிப்பு.

திரு—இலக்குமிதேவி; மங்கலம் தெரிப்பது. கோ—அவளுக்குத் தலைவனாகிய விட்டுணு. கோ—தலைவன். நம் கோ—நமக்கு வகுத்த தெய்வம். சக்கரக் கோ—சுதர்சனம் என்னும் சக்கரப் படையை யேந்திய தலைவன். இத்தகைய தலைவன் யாரெனில் **ஆதிவராகர்**.

இரணியாக்கன் என்னும் அசுரன் பூமியைப் பாயாகச் சுருட்டி யெடுத்துக் கடலிற்புக, பன்றியுருவம் எடுத்துத் திருமால் அவனைத் தேடிச் சென்று கொன்று பூமியை மீட்டு வந்து மீண்டும் பரப்பிய செய்தி பிரசித்தம். திருமால் ஆதிப் பெருங் கடவுளாதலின் ஆதியாயினார். வராகம்—பன்றி: திருமால் வராகாவதாரத்தோடு சேவைசாதிக்கும் திவ்யதேசங்கள் பலவுள. திருவிடவெந்தை, திருவலவெந்தை யென்னும் மகாபலிபுரம், ஸ்ரீமுஷ்ணம் போல்வன. இங்குப் பேசப்படுபவர் **திருக்கரந்தை** என்னும் திவ்ய தேசத்தில் எழுந்தருளியிருக்கும் ஆதிவராகரைப் பற்றி. ஆதிவராகர், பூவராகர், மகாவராகர், யக்ஞவராகர் முதலாகப் பெயர்கள் வழங்குப. இந்த வராகாவதாரம் பெரிதும் கொண்டாடப்படுதற்கு முக்கிய காரணம் வராகர் பூமிப்பிராட்டியைத் தமது கோட்டில் தாங்கிக் கொண்டு மேல் வரும்போது அவளை நோக்கிச் சாதித்த சரம சுலோகமேயாகும். அச்சுலோகம் பின்வருமாறு:—

''ஸ்திதே மநஸி ஸுஸ்வஸ்தே சரீரே ஸதியோ நர:
தாது ஸாம்யே ஸ்திதே ஸ்மர்த்தா விஸ்வரூபஞ்ச மாமஜம்
ததஸ்தம் ம்ரியமாணந்து காஷ்ட பாஷாண ஸந்நிபம்
அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம்''

இதன்பொருள்: மனம் கலக்கமின்றி நிலைநிற்கையில், உடம்பு நோயற்று நன்றாயிருக்கையில், வாதம், பித்தம், சிலேஷ்மம் என்னும் மூன்று தாதுக்களும் ஓரளவாயிருக்கையில், எந்த மனிதன் — பிரபஞ்சத்தைச் சரீரமாகவுடையவனும், பிறப்பு முதலான விகாரங்கள் இல்லாதவனுமான என்னை நினைக்கிறானோ, பிற்காலத்தில் கட்டையோடும் கல்லோடும் ஒத்தவனாய் மரண மடையா நிற்கிற அந்த என் பக்தனை நான் நினைக்கிறேன். உயர்ந்த பதவிக்கு அழைத்துச் செல்கிறேன். (உயர்ந்த பதவியென்றது— தானேபுருஷார்த்த மாயிருப்பதாய், இயற்கையில் ரஸமயமா யிருப்பதாய், தனக்குமேலொன்றில்லாத பகவத் கைங்கர்ய ரூபமான பரமப்ராப்யத்தைச் சொல்லுகிறது.)

ஐந்துதரு — ஐந்து விருட்சங்கள். கற்பகம், பாரிஜாதம், அரிசந்தனம், சந்தானம், மந்தாரம். இவற்றினுக்குக் கோ— இந்திரன். திருமால் இந்திரனை அவன் பதவியிழக்காது வாழ்வித்த சந்தர்ப்பங்கள் பல; தேவாசுரயுத்தம் கண்டு தெளியலாம்.

கோவை — தமிழில் வழங்கும் ஒருவகைப் பிரபந்தம். அகப்பொருள் துறைகள் கொண்டு மிளிர்வது. மரு — வாசனை; மருமணக்கும் என மாறுக. உரு — நிறம், ஒளி-துணிவு. நம்பிக்கை பற்றியது.

நூல்

கைக்கிளை

காட்சி

1. அரவிந்த முங்குமி ழுங்கருங்
காவியு மாம்பலுந்தேன்
விரவுந் தளவமுங் கோங்கமுந்
தாங்கிவெண் சங்கமுஞ்சக்
கரமுந் தரித்தவ ராதி
வராகர் கரந்தைவெற்பில்
வரவந் தவாவிம் மலர்க்காவிற்
கற்பக வல்லியொன்றே.

கைக்கிளை — கையென்பது — சிறுமை: கிளையென்பது — உறவு; ஆகவே, ஒருமருங்கு பற்றிய கேண்மை. அதாவது ஒருதலைக் காமம்: களவுப் புணர்ச்சிக்கு முன் நிகழும். தலைவன்பால் நிகழ் வனவாகிய காட்சி, ஐயம், துணிவு போன்ற செய்திகள் இக்கைக்கிளையின்பாற்படும்.

காட்சி: காட்சியென்பது தலைவனும் தலைவியும் தெய்வ வசத்தால் எதிர்ப்பட்டுத் தம்முட் கண்ணுறுவது.

அரவிந்தம் — தாமரை: இது எதிரிற் கண்ட மாதின் முகத்தின் உருவகம். அங்ஙனமே குமிழ்-குமிழம்பூ மூக்கினுக்கும், கருங்காவி-கருங்குவளைப்பூ கண்ணினுக்கும், ஆம்பல் — அல்லிப்பூ (குமுதம்) வாயினுக்கும், தேன் — வாயிலூறும் நீரினுக்கும், தளவம் — முல்லை பல்லினுக்கும், கோங்கம் — கோங்கின் அரும்பு முலையினுக்கும் உருவகமாய் வந்தன. இவற்றைத் தாங்கி கற்பக வல்லி யொன்று இம்மலர்க் காவில் வந்தவா! என வியக்கின்றான் தலைவன். கற்பகவல்லி என்றதாலே தேவமாது என நினைத்தபடி. வந்த ஆ — வந்தவிதம்: ஆ — ஆறு என்பதன் தொகுத்தல். வெண்சங்கம் — பாஞ்சசன்னியம். இடக்கையில் தரிக்கும் சங்கு. சக்கரம் — சுதரிசனம். வலக்கையில் தரிக்கும் ஆழி: வட்டவடி

வினது. இந்த இரண்டையும் தரித்தவர் ஆதிவராகர். தரித்தல்—ஏந்துதல், ஆபரண கோடியில் சேர்வன. அவர் ''கரந்தை வெற்பில் **வர**'' என்றமையால் அவர் குடியிருப்புக்கு அவர் வருதல் சகஜம். ஆனால் அவரது மலர்க்காவிற்கு இம்மாது வந்தவாறு எப்படி எனத் தான் தலைவியைக் **கண்டு** வியந்தமை தெரிவித்தபடி. எனவே காட்சியாயிற்று.

கா — சோலை. வல்லி — வல்லிக் கொடி போன்றாளுக்கு உவமையாகுபெயர். ''ஒன்றே'' என்றதால் தனியளாய் வந்தமை பெறப்படும்.

வெற்பு — மலை; இங்கு எல்லை எனினுமாம். கரந்தை — மருஉ. ஆதிவராகர் — பாட்டுடைத் தலைவன். ஆதிவராகர் வர வல்லி வந்தவா என இயைத்துப் பொருள் காணவும்.

ஐயம்

2. ஆலோன் விழுங்குமும் மண்டல
மோகும்ப ளலயமோ
வேலோன் பொருத வியலிட
மோகன்று மேய்த்தசெங்கண்
மாலோன் கரந்தையி லாதி
வராகர் மலரணையின்
பாலோவிவர்பொற் பதத்தூளி
தாங்கிப் பயனுறலே.

ஐயம்:— ஐயம் என்பது — காட்சிக்குப்பின் ''இங்ஙனம் தோன்றுநின்ற மாது திருமகள் முதலாகிய தெய்வமோ? அன்றி, மக்கட் பிறப்பினளோ''? என்று ஐயுற்றுக் கூறுவது. இந்தச் செய்யுள் அங்ஙன் வந்த **ஐயமாம்**.

மும் மண்டலமோ ஆலயமோ வியலிடமோ! மலரணையின் பாலோ இவர் பதத்தூளி தாங்கிப் பயன் உறலே? என்ற வினு ஐயத்தின் எழுந்ததொன்று. ஐயம் என்னவெனில், இவர் தெய்வ மாதோ மானுடமாதோ என்றதாலாகியது.

ஆலோன் — ஆலினிலையில் பள்ளி கொண்டருளும் பரமன்: திருமால். ஆல் — ஆலிலைக் காகியது. அவன் சுவர்க்கம், மத்திமம், பாதாளம் என்ற மூன்று மண்டலங்களையும் விழுங்கியது மகாப்

பிரளய காலத்தில் என்க. அக்காலத்து அவையனைத்தையும் தன் வயிற்றில் அடக்கி ரட்சித்துப் பின்னர் சிருட்டிக் காலத்து வெளியிடுகின்றான் என்பது சித்தாந்தம். மும் மண்டலமும் இவர் பாத தூளி தாங்கிப் பயன் உற்றதோ என்றதால் — இவள் சுவர்க்க வாசியோ, பூலோக வாசியோ அல்லது நாகலோக கன்னிகையோ என ஐயுற்றபடி.

கும்பன் — கும்பமுனி; அகத்தியன். அவன் ஆலயம்— இருப்பிடம், பொதியமலை. பொதியமலையில் அகத்தியரைத் தரிசிக்க வரும் முனிவர் மகளோ அன்றித் தரிசிக்க வரும் தேவ மாதோ! என ஐயுற்றபடி. வேலோன் — குமரக் கடவுள். அவன் போரிட்ட பரந்த இடம் — சூரபதுமனது மகேந்திரபுரம். அங்கு வசிக்கின்ற அழகிய அசுரமகளோ இவள்; அன்றி அவனால் சிறை யிடப்பட்ட தேவமாதரில் ஒருத்தியோ? வியல் — பரந்த. இடம்— அசுரலோகம்.

ஆதிவராகர் மலரணையின்பாலோ தாங்கியது என்று கூறியதால், இவள் திருமகளோ (மகாலட்சுமியோ)என ஐயுற்ற படி. மலர் அணை — பூவாலாகிய படுக்கை. பால் — பக்கம். பதத்தூளி — அடிப்பொடி; பாததுகள். ஒருதலைக் காமம் தலையெடுத்துப் பேசுகின்ற பேச்சாதலின் இங்ஙன் அமைந்தது.

இங்கு வந்துள்ள ஓகாரங்கள் — ஐயத்தோடு வினவுவன.

கன்று மேய்த்தது — கிருஷ்ணவதார காலத்தில். செங்கண் மாலோன் — புண்டரீகாக்ஷன்.

துணிவு

3. இருங்கா வியங்கண் கயல்போ
லிமைக்கு மெழுத்துரைக்கும்
பெருங்கா மவல்லி பிணையலும்
வாடும் பெயர்த்துநடை
தருங்கான் மலருந் துழாய்மால்
வராகர்சந் தாடவிக்குள்
வருங்கா மவல்லியிம் மாதரை
யாளு மலர்விழியே.

துணிவு:— தான் காட்சியிற்கண்டு ஐயுற்றவளை மானுட மென்று தெளிந்து துணிவு (நிச்சயம்) கொண்ட தலைவன் கூற்று இச்செய்யுள்.

கண் கயல்போல் இமைக்கும்: பிணையலும் வாடும்: கால் பெயர்த்து நடை தரும்: ஆகவே, அடவிக்குள் வருங் காமவல்லி இம் மா தரை ஆளும் மலர் விழியே யாவாள் என்று மானுடம் எழுத்துரைத்தபடி.

காவி — குவளைப்பூ; கண்ணுக்கு உவமை. இருமை — பெருமை மேலது. கயல்மீன் கண்பிறழ்தற்கு உவமை. இமைத்தலால் மானுடமகள் என்று துணிந்தது. தேவமாதர் இமை கொட்டாராதலின், அவர் ''இமையோர்'' எனப்பட்டார். காமவல்லி பிணையல் — அழகிய வல்லிக் கொடியால் அமைந்த மாலை. பிணையல் — தொடுக்கப்பட்ட மாலை. மாலை வாடுவது மானுட மகளிர்க்கே. தேவ மாதர் சூடும் மாலை வாடாது. தேவ மாதர் நடை தரையில் பாவாது. ஆனால் இக்காம வல்லி நடையோ தரையில் தோய நடை தருகின்றது. பெயர்த்து — ஓர் இடம் விட்டு ஓர் இடம் செல்லுதல். பெயருங்காலை மலராக உருவகித்தது. துழாய் — துளசி: திருத்துழாய் மாலை திருமாலுக்கேயுரிய சிறந்த தொன்று. ''நாற்றத் துழாய்முடி நாராயணன்'' என்றாள் கோதையாரும். சந்த+அடவி= சந்தாடவி: வடமொழித்தொடர்: தீர்க்க சந்தி. சந்தம் — சந்தனம். அடவி-காடு. காமவல்லி-தலைவியைப் பாராட்டியபடி. மா தரை — பெரிய பூமி. மண்ணையாளுதலாவது — முதன்மைத் தானம் பெறுதல். இனி, மாதரை ஆளும் என்பது பட நின்றது தொனி; இதனைச் **சாடு** என்பர். மலர் விழி — உவமைத் தொகையன்மொழி. ''மலர்வல்லியே'' என்றும் பாடங் கொள்வர்; அஞ்ஞான்று 'வல்லி' என்பதன் புள்ளி வற்று விளச் சீராய் நின்றது என்ன வேண்டும். இஃது, மேல்வரும் புள்ளி யிடங்கட்கெல்லாம் ஒக்கும் (செய்யுட்கள்: 4, 28, 70, 75, 83). முதல் வரியில், ''எழுத்துரைக்கும்'' என வந்திருப்பது — இவள் மா தரையாளும் பெண்ணரசிதான் என்பதை எழுத்து வாங்கிக் காட்டும் என்றபடி; அதாவது படியெடுத்துக் காட்டி வெளிப்படை யாக்கும். இனி 'எடுத்துரைக்கும்' என்று பாடங் கொள்ளின் நேர் பொருள் படும்.

நடைதரும். — தா, துணைவினை.

குறிப்பறிதல்

4. ஈட்டிய நோயுமந் நோய்தீர்
மருந்து மிருந்தவத்தாற்
காட்டிய கற்பனை காரிகை
யார்கடைக் கண்ணிலுண்டாம்

சூட்டிய பச்சைத் துளவோன்
வராகன் சுரும்புவரை
கோட்டிய கும்ப முலைப்பாவை
பார்வைக் குறிப்புநன்றே.

குறிப்பறிதல்:— அஃதாவது — தலைவன் தலைவி குறிப்பினை யறிதல். குறிப்பு — மனத்தினெண்ணம். களவுப் புணர்ச்சியில் தலைவன் தலைவியைக் கூடும்போது குறிப்பறிதல் என்ற இது வேண்டும்.

நோயும் அந்நோய் தீர் மருந்தும் இந்தக் காரிகையார் கடைக் கண்ணிலுண்டாம்: இது எனக்குத் தெரிகின்றது. இவளோ இருந் தவத்தால் — யான் செய்த பெருந்தவத்தின் பயனால். காட்டிய — என் முன்னர்க் காட்டப்பட்ட. கற்பனை — அவயவங்கள் சிந்தித்துச் சிந்தித்து இயற்றப்பட்ட, காரிகையார் — அழகியாவள். இவள் கடைக்கண் நோக்கு ஒன்று எனக்கு நோயை ஈட்டியது; மற்றொரு நோக்கு அந்நோய் தீர்க்கும் மருந்தாயது. நோய் ஈட்டியது — அவளுடைய நோக்கு அன்னனுடைய காமக் குறிப்பினை வெளிப்படுத்தித் தலைவனாகிய தன் திறத்தில்தான் ஆகியது என்பதனைப் புலப்படுத்தாமையால். நோய் தீர் மருந்தாயது — மற்றொரு நோக்கு, தலைவிக்கு நேர்ந்த காமக்குறிப்பு தன்மீது அன்பு செய்யும் பொருட்டே என்பதைப் பெற வைத்தமையால்.

ஈண்டு ''இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு நோய்நோக்கொன் றந்நோய் மருந்து'' என்ற குறளாட்சி காணலாம். (குறள். 1091)

துளவோன் — துளசி மாலையையுடையவன். வராகன் — ஆதிவராகப் பெருமாள். சுரும்பு — மலை. ''சுரும்பறை மணித் தோள் (மணி: 20: வரி 107).வரை - தாழ்வரை; தாழ்விடம், அடிவாரம். சுரும்பு வரை: ஆறும் வேற்றுமைத்தொகை. கோட்டிய — சற்றுக்கோணலாய்ச் சாய்ந்துள்ள. கும்ப முலை — குடம் போற் பருத்த தனங்கள். பாவை — தலைவி. 'பார்வைக் குறிப்பு நன்றே' என்றமையால் — இவ் வருத்தம் தீரும் வாயிலும் உண்டாயிற்று என்பதாம். ''சுரும்பில் வரை'' என்று பாடங் கொள்ளின், புள்ளிவற்று விளச்சீராயிற்றென்க.

இடம் பெற்றுத் தழாஅல்

5. உரைக்குங் கிளிகள் கருங்குயில்
கூவுங்கள் ளுண்டுசுரும்
பிரைக்கும் பனிமலர் வாசங்கள்
வீசுஞ்சந் தீர்ந்தரைத்துக்
கரைக்கும் பொருநைத் துறையார்
வராகர் கரந்தையன்னூர்
வரைக்குங் குமமுலை விம்முநெஞ்
சேயிடம் வாய்த்ததின்றே.

இடம் பெற்றுத் தழாஅல்:— தலைவன் தலைவியை முகம் பெற்று அவளை உளப்படுத்திக் கூறுதல்.

தழாஅல் — தழுவுதல். 'இடம் வாய்த்ததின்றே' என்றதால் துறை வெளிப்படை.

கிளிகள் உரைக்கும்; குயில் கூவும்; கள்ளுண்டு சுரும்பு இரைக்கும்; பனிமலர் வாசங்கள் வீசும். இத்தகைய வாய்ப்பான சூழ்நிலையில், கரந்தை யன்னூர் வரை — கரந்தை நகர் போல் வளம் பெற்றிலங்கும் தலைவியிடத்து, குங்கும முலை விம்மும். ஆகவே, நெஞ்சே! நல்ல இடம் இன்று நமக்கு வாய்த்தது என்று தலைவன் தன் நெஞ்சொடு கிளத்தியது.

தலைவியைக் கரந்தை நகரோடு ஒப்பிட்டது — சகல மங்களங்களும் பொருந்தியிருத்தல் பற்றி. வரை — ஏழனுருபில் வந்தது.

உரைக்கும் — சொன்னதையே சொல்லும். சுரும்பு — வண்டுகள். இரைக்கும் — ரீங்காரமிடும். பனி — குளிர்ச்சி தெரிப்பது. பொருநையாறு சந்தீர்த்து அரைத்துக் கரைக்கும் என்க. பொருநை — தாமிரபரணி; தாம்ரபர்ணி நதி என்பது வழக்கு. சந்து — சந்தன மரங்கள். ஈர்த்து — இழுத்துக் கொண்டு வந்து. அரைத்து — (அவற்றை அங்குமிங்குமாக மோதி) அரைபடச் செய்து, கரைக்கும் — (ஆற்று நீரில்) வாசனை வீசும்படி கரையச் செய்யும். அத்தகையது துறை என்க. (அந்தத்) துறையார் — துறையில் எழுந்தருளியிருப்பவர், வராகர். விம்முதல் — புணர்ச்சிக் குறிப்பினது.

முன்னிலையாக்கல்

6. ஊர்பெற்ற பாவைய ராயம்பெற்
றீர்பந் தொடுகழங்குண்
டேர்பெற்ற வாவியும் பூஞ்சோ
லையுமுண் டெழுதரிய
கார்பெற்ற மேனித் திருமால்
வராகர் கரந்தையன்னீர்
நீர்பெற்ற தியாவர்பெற் றூர்விளை
யாட்டின்றி நிற்பதென்னே.

முன்னிலையாக்கல் — தலைவன் தலைவியை முன்னிலையாக்கிக் கூறுதல். முன்னிலையாக்கல் — எதிர்முக மாக்கல், விளித்தல். கரந்தை யன்னீர்! பெற்றீர் என்றதால் துறை விளக்கியபடி. ஆயம் பெற்றீர்: பந்தும் கழங்கும் உண்டு: வாவியும் பூஞ்சோலையும் உண்டு: நீர் பெற்றது யாவர் பெற்றூர்? (எவரும் பெற்றிலர்) அங்ஙனிருப்பவும், விளையாட்டின்றி வாளா நிற்பதென்ன காரணம் பற்றியோ? என்று முன்னிலையாக்கிக் கூறியபடி. ஊர் பெற்ற பாவையர் ஆயம் — தோழியரின் கூட்ட மிகுதி தெரிவித்தபடி. ''ஊர் பட்டபேர்'' என்ற உலக வழக்கும் காண்க. பந்து, கழங்கு — மகளிர் விளையாட்டுப்பொருள்கள். கழங்கு — கழற்சிக்காய். ஏர் — அழகு. வாவி — நீராடுதல் விளையாட்டு நிகழ்த்துதற்கு. பூஞ்சோலை — பூப்பறித்து விளையாடுவதற்கு. கார் பெற்ற மேனி - மேகம் போன்ற திருவுடம்பு. திருமால் மேக வண்ணர் என்பது பிரசித்தம். எழுதரிய — ஓவியத்தெழுத வொண்ணுதபடி அரிய. பெற்றது + யாவர் = பெற்ற**தியாவர்**: குற்றியலிகரம்: இஃது இங்கு அலகு பெறவில்லை. என்னே — விளையாடுங்கள் என்ற குறிப்பினது.

வறிது நகை தோற்றல்

7. எல்வந் தரும்பு மணிமேக
வண்ணத்தி லிந்திரவான்
வில்வந் தரும்ப வருவார்
வராகர்பொன் மேருவெற்பில்

வல்வந் தரும்பு மணிமுலை
யாள்வத னும்புயத்தில்
அல்வந் தரும்பு நிலாப்போ
னகைவந் தரும்பியதே.

வறிது நகை தோற்றல்:— தலைவி முகிழ் நகை சிறிது தோற்று வித்தல். வறிது — சிறிது. ''மெல்ல நகும்'' என்றார் வள்ளுவரும். (குறள் 1094).

இனி, ''வறிது நகை தோற்றல்'' என்ற துறையில் ''நகை தோற்றல்'' என்றிருப்பினும், நகை வெளியாய்த் தோன்றியது என்னல் பொருந்தாது. என்னை? தலைவன் முன் நாணுடைய யளாதலின் பல் தோன்றச் சிறு முறுவல் தோன்றலும் அமையாது; அமையாதாயின், வறிது நகை தோற்றல் என்னும் கிளவிப் பொருள் பொய்க்குமே எனின்? — அற்றன்று. ''முகை-மொக்கு ளுள்ளது நாற்றம்போற் பேதை, நகைமொக்கு ளுள்ளதொன் றுண்டு'' (குறள். 1274) என்பதனால் நகை வெளித் தோன்றா தென்பது கூறியவாறு உணர்க. நகை தான் தோன்றுமாறென்னை யெனின்? தலைவன் சொற்கு வேட்கை யாலுடன்பட்டு மகிழ்ச்சியான் முகம் மலர்ந்தது; அம்மலர்ச்சி குறிப்பினான் நகை யெனத் தோற்றுவித்த வாறென்றுணர்க'' என்று தஞ்சை வாணன் கோவையுரைகாரர் கூறியது ஈண்டு நோக்கத் தக்கது. இந்நூலாசிரியரும் ''நகை வந்து **அரும்பியதே**'' என்றதும் குறிக்கொள்ளத் தக்கது.

பொன் மலை யென்னப்படும் மேருமலை போன்ற (கரந்தை) மலையிடத்து, வராகர் வருவார். (வருவார் — வருவது வழக்கம்). அவர் ஒளி பொருந்திய நீலமணி போன்ற மேகத்தின் வண்ண முடையவர். எல் — ஒளி. அரும்பு — துளிக்கின்ற, பொருந்தியுள்ள. வந்து — சொல் விழுக்காடு. மணி — நீல மணி. இந்திரவான் வில் - இந்திர தனுசு. வானவில் (Rain-bow) ''மேக வண்ணத்தில் இந்திர வான்வில் அரும்ப வருவார்'' என்றது — நீலமேக சியாமள மேனியில் யக்ஞோபவீதம் (முப்புரிநூல்) விளங்க எழுந்தருளுவார் என்றபடி. மார்பில் தரித்து மின்னும் பூணூலுக்கு இந்திர வானவில் ஒப்பு.

வல் — சூதாடு கருவி: முலைக்கு ஒப்பாவது. அணி — அழகு; ஆபரணமுமாம். வதன + அம்புயம் = வதனம்புயம். தீர்க்க சந்தி பெற்ற வடமொழித் தொடர். முகமாகிய தாமரை.

அந்த முகத் தாமரையில் நகை வந்து அரும்பியது. அரும்பிய நகை — அல் வந்தரும்பிய நிலாப்போன்றது. அல் — இருட்டு. நிலா — குறுநிலா. இருட்டில் குறு நிலாவும் ஒளி மிகுத்துக் காட்டும். குறு நிலாக் கீற்று முகிழ் நகைக்கு ஒப்பாகியது என்றபடி.

முறுவற் குறிப்புணர்தல்

8. ஏர்முத் தமிழ்தங்கு மெங்க
ணுமேபண் டிடைச்சியர்வாய்ச்
சீர்முத் தமுதஞ்செ யாதி
வராகர் சிலம்பிலிரு
பேர்முத்த மும்பெறச் செய்வாய்
பவளம் பிறங்குநகை
கூர்முத்த வாணகை கோடிபொன்
னேவிலை கூறிடிலே.

முறுவல் குறிப்புணர்தல்— தலைவன் தலைவி செய்த முறுவலின் குறிப்பறிதல். (முறுவல் — புன்சிரிப்பு).

பண்டு — கிருஷ்ணவதார காலத்தில், இடைச்சியர் — கோபியர்கள். வாய்ச்சீர் முத்து அமுதம் செய் — வாயமுதத்தைப் பருகிய. சீர் — பிரேமையிலாயது. முத்து — முத்துப்போன்ற பற்கள். அவைகளிலூறும் நீரினைக் காட்டியது, மேல் ''அமுதம் செய்'' என வருதலேக்கி. ''அவர்கள் முகந்தொறும் எச்சி லாக்கினன்.'' என்றான் சிசுபாலனும் (வில்லி. சபா: இராயசூயச்: செ. 119). பின் அவதார நிகழ்ச்சியை முன் அவதார ஆதி வராகருக்கு ஏற்றிக் கூறியது — அவதரித்த இருவரும் ஒருவரே என நிறுத்துதற்கு. மேல்வரும் அவதார நிகழ்ச்சிகளையும் இங்ஙனமே கொள்க. சிலம்பில் — வரையிடத்து. இந்தச் சிலம்பில் எங்கணுமே ஏர் முத்தமிழ் தங்கும் எனக் கூட்டுக. பொருநை பாயும் பிரதேசமாதலின் முத்தமிழ் தங்குவதியல்பே. அகத்தியர், நம்மாழ்வார், மணவாள மாமுனிகள், மதுரகவி இவர்கள் திகழ்ந்த பிரதேசமாகும்

இரு பேர் முத்தமும் பெறச் செய்வாய் — இரண்டு பெரிய முத்தங்களையும் (முத்துக்களையும்) யான் பெற்று மகிழும்படி செய்வாய். அவை:— (1) பவளம் பிறங்கு நகை. (2) கூர்முத்த வாணகை. பவழம் போற் சிவந்த அதரத்திடத்தே விளங்கும் ஒளி; அதனைப் பெறுதலாவது, உதடு பொருத்துகை. கூர் முத்த வாள்

நகை — சிறந்த முத்துக்கள் போன்ற பற்களிடத்தே மிக்கு விளங்கும் ஒளி; அதனைப் பெறுதலாவது — எயிறதுக்குதல். இரு முத்தமும் கூறவே — தலைவன் வராகர் போல் வாய்ச்சீர் முத்த முதஞ் செய்ய விரும்பி வேண்டியபடி. அவன் விருப்பத்தின் பெருக்க அளவைக் குறிக்க வந்த ஆசிரியர், இருபெரு முத்த நகையும் விலை கூறிடில் கோடி பொன்னுக்குப் போகும் என்றார். பொன்னே — ஏகாரம் தேற்றம்.

தலைவி நகை செய்தமை கூறியமையால் தலைவன் அவள் செய்த முறுவற் குறிப்புணர்ந்தான் என்பது பெறப்பட்டது.

இனி, பொன்னே! என்பதை விளியாக்கி(நீ) செய்வாய் என வினை முடித்தலுமாம். அஞ்ஞான்று ''விலை கூறிடில் கோடி'' என நிற்கும். கோடி — கோடிப் பொன் என உரை காணலாம்.

மற்றும், ''செய்'' என்பதை மட்டும் முன்னிலை வினையாக்கி, வாய் — வாயிடத்து, பவளம் பிறங்கு நகை எனினுமாம்.

இச்செய்யுளில் ''இடைச்சியர் வாய்ச்சீர் முத்தமுதஞ் செய் ஆதி வராகர்'' என்றது கருத்துடையடைகொளியணி.

இரந்து பின்(னிலை) நிற்றல்

9. ஐந்தாரு வேந்தனு மம்புயத்
தோனு மமரர்களும்
பைந்தார் கொடுபணி யாதி
வராகர் பழனவயற்
செந்தா மரையன மேயும
தேவல் செயவறிவேன்
வந்தாள வென்று விலையோலை
வாங்கு மனந்துணிந்தே.

இரந்து பின்னிலை நிற்றல்:— தலைவன் தலைவியை இரந்து வழிபட்டு நிற்றல். பின்னிலை நிற்றல் — பின்னிற்றலைச் செய்தல். பின்னிற்றல் — வழிபடல். இரந்து நிலை பின்னிற்றல் என மாற்றுக.

ஐந்தாரு — பஞ்ச தருக்கள்: ஐந்து விருட்சங்கள்: முன்னரே காப்புச் செய்யுளிற் குறித்தாம். அவற்றிற்கு வேந்தன் — இந்திரன். அம்புயத்தோன் - தாமரையிலெழுந்தருளியிருப்பவனுன பிரமன். அமரர்கள் — பிற தேவர்கள்; கின்னரர், கிம்புருடர், வித்தியாதரர் போன்ருேர். பைந்தார் — பசிய திருத்துழாய் மாலே. கொடு — கொண்டு, தொகுத்தல். பணி — வணங்குகின்ற. பழனவயல் — மருத நிலத்தைச் சார்ந்த கழனி. பழனம் — மருத நிலம். ''கண்பு மலி **பழனம்** கமழத் துழைஇ''. (மலேபடு: 454). வயலில் செந்தாமரை பூத்திருப்பது வளமிகுதிகாட்ட வந்தது. அனமே — அன்னமே, தொகுத்தல். தலேவியை இங்கு இலக்குமிக்கு உவமித்தபடி. அன்னம் நடைக்கு உவமையாவது. ஏவல்— இட்ட பணிகள். என் மனம் துணிந்து, வந்து ஆள என்று — நீ என்னே வந்து அடிமை கொண்டு ஆளுவாயாக என்று, விலே — விலேக்குத் தன்னே. ஓலே வாங்கும் — பட்டயஞ் செய்து எழுதிக் கொடுக்கும். அஃதாவது — முற்றிலும் தன்னே அடிமையாக்கிக் கொள்ளும் என்றபடி. ஓலே வாங்குதல் - எழுத்துப்படுதல். இங்ஙனம் கூறுதல் தலேவனுக்கு இழுக்கன்ருே என்னில், தலேமகளாற் புணரும் புணர்ச்சியில் இரந்து பின்னிற்கின்ருனுதலின் இழுக்கன்று என்க.

மெய்தொட்டுப் பயிறல்

10. ஒண்போ தலருந்தி யாதி
வராக ருயர்வரையின்
பண்போ திசைகள் பயில்வண்டு
காளிடை பார்த்துமின்ஞர்
கண்போல் விளங்கியுங் காவியந்
தேறியுங் கண்மலருந்
தண்போது சென்று பரிசாரஞ்
செய்தல் தகாதுமக்கே.

மெய்தொட்டுப் பயிறல் — தலேவன் யாதுமொரு வியாஜமாக (நிமித்தமாக)த் தலேவியின் மெய்யினேத் தீண்டிப் பயின்று நிற்கும் நிலேமை. பயிறல் — நெருங்குதல்.

இத்துறைக்கு, வண்டை முன்னிலேயாகப் பாடுவது மரபு. அதன் படியே இங்கும் வந்துளது. திசைகள் பயில் வண்டுகாள் — எல்லாத்திக்குகளிலும் சஞ்சரிக்கின்ற வண்டுகளே! என விளித்தது. நீங்கள் மின்ஞர் கண்போல் விளங்கியும் காவியந் தேறியும்

இருந்தும், கண்மலருந்தண் போது (அதாவது விடியற் காலத்தே) சென்று, இடை பார்த்துப்பரிசாரஞ் செய்தல் உமக்குத் தகாது. ஏனெனில், எனது தலைவிக்கு இடை உங்கள் பாரத்தினுல் நில்லாது முறிந்துபோம் என்ற கருத்தினது.

மின்னுர் — பெண்கள். கண் போல் விளங்குதல் — வண்டுகள் கருமையாய் அவர்கள் கருவிழி போல் இருத்தல். ''நல்லார் விழி போலிருந்தும்'' என்றது தஞ்சை வாணன் கோவையும். காவியந் தேறுதல் — இரட்டுறமொழிதல்: கா — சோலைகளில், வியந்து — (கண்டோர்) அதிசயிக்கும்படி, ஏறுதல் - மரங்களிலும் செடிகொடி களிலும் ஏறுதல். காவியந் தேறுதல் — அறிவு படைத்திருத்தல், என்ற **பாவமும்** உளப்படுத்தியபடி. மகளிர் விழி போல் இருந்தும், அறிவு படைத்திருந்தும், தலைவியது இடையொடித்தல் தகாது என்றபடி. கண் மலர்தல் — விழித்தெழுந்திருத்தல். தண் போது- குளிர்ச்சி பொருந்திய காலைப் பொழுது. சென்று - இடை பார்த்துச் சென்று; சமயம் பார்த்துச் சென்று, இடுப்பைப் பார்த்துச் சென்று என்று இரு பொருள் பட நயமுற நின்றது. இடை — சமயம், இடுப்பு.

பரிசாரம் செய்தல் — கைங்கரியம் செய்தல், அதாவது பணி செய்தல்; தொண்டாற்றுதல், தொழில் புரிதல். இது வைணவர் பேச்சு. இடையில் தொழில் புரிதலாவது - ஏறியிருந்து பாரத்தால் முறியச் செய்தல். இச்செயல் உமக்குத்தகாதது மட்டுமன்றி, வராகர் உயர்வரையிற் செய்யக் கூடிய பண்புடைச் செயலு மாகாது என்றபடி.

ஒண்போது அலர் உந்தி — ஒளி பொருந்திய தாமரைப் பூ அலர்ந்த கொப்பூழ். ஆதிவராகர் உந்தியில் பிரமனைத் தோற்று வித்ததைக் குறிக்க வந்தது.

''தகாது உமக்கே'' எனக் கூறியதனுல், அத்தலைவியது இடையைத் தொட்டு வண்டுகளை அப்புறப்படுத்தினுன் என்பது பெறப்படும். எனவே — மெய்தொட்டுப் பயிறல் ஆகும்.

பொய் பாராட்டல்

11. ஓலக் கடற்பள்ளி கொண்டோன்
வராகனெட் டோடையொக்கு
நீலக் கருங்குழ னேரிழை
யீருங்க ணீள்விழிகள்

போலக் கவின்பெற வேண்டியன்
றேவண்டு போற்கயலுஞ்
சீலப் புவனத்தி லெப்போது
மாதவஞ் செய்குவதே.

பொய் பாராட்டல்:— தலைவன் தலைவியைப் பொய் செய்யாநின்று புனைந்துரைத்தல்.

''சிறப்புடைப் பொருளைத் தானெடுத்து மொழிதல்'' என்ற தந்திர வுத்தியின்படி ஈண்டு நீலக் கருங்குழலையும் நீள் விழிகளையும் பாராட்டியபடி.

ஓலம் — ஒல் — ஒலி; ஒலி செய்வது கடலுக்கு இயல்பாத லின், ஆர்கலி எனப்படும். கடல் - ஈண்டு திருப்பாற்கடல். பள்ளி - சயனம். நெடு + ஓடை = நெட்டோடை. ஓடையின் நீண்ட நீரொழுக்கை. ஒக்கும் — ஒத்திருக்கின்ற. நீலக் கருங்குழல் — நீல நெய்ப்போடு கறுத்த கூந்தல். நேரிழையீர் — தலைவியை நோக்கிய விளி. உங்கள் — உயர்வுப் பன்மை யொருமை. கவின் — அழகு. வண்டு மாதவம் செய்குவது - கருமை நிறம் மேலும் பெறுதற்காக. கயல் மீன் மாதவம் செய்குவது — பிறழ்ச்சிக் கவினை மேலும் பெறுதற்காக. வண்டும் கயலும் என்னுது, 'வண்டு போற் கயலும்' என்றதன் சொற் சுருக்கமும், பொருளாழமும் சுவைக்கத் தக்கன. வராகன் பள்ளிகோளை விட்டுப் புவனத்தில் வந்திருத்த லால், **சீலப் புவனம்** ஆயிற்று. சீலம் — மேன்மை.

உள்ளக் கருத்தை வள்ளலறிதல்

12. ஔவியந் தீர்ப்பவ ராதி
வராக ரணிவரையார்
நௌவியங் கண்ணி லமுதளித்
தார்வெண் ணகையளித்தார்
திவ்விய கொங்கை திறந்துமுத்
தாரந் திருத்தினரால்
துவ்வியன் காவி லிசையுங்கொல்
லோதுணிந் தோர்மனமே.

உள்ளக் கருத்தை வள்ளல் அறிதல்:— *தலைவியின் மனத்து நிகழுங் கருத்தைத் தலைவன் அவள் செய்கைகளால் அறிதல்.*

ஔவியம் — மனக் கோட்டம். அணிவரை — அழகிய மலையிடத்து. ஆர் — பொருந்தியுள்ள. நௌவி — நவ்வி: மான்; மான் போன்ற தலைவிக்கு உவமையாகுபெயர். தலைவியை மானாக உருவகித்தார். அம் கண்ணில் — அழகிய கண் பார்வையால். அமுதளித்தார் — மகிழ்ச்சி விளைவித்தாள். வெண் நகை அளித்தார் — வெள்ளிய பற்களால் முறுவல் காட்டி மகிழ்வித்தாள். திவ்விய— புனிதமான: வைணவப் பேச்சு. முத்து ஆரம் — முத்துமாலை. திருத்துதல் — சரி செய்தல், சீர்பெறச் செய்தல். ஆல் — அசை. இனி, ஆதலால் எனினுமாம். துவ் வியன்காவில் — பரிசுத்தமான விசாலமான சோலையிடத்து. தூ — து எனக்குறுகியது. இனி, து — அனுபவித்தற்குரிய எனினுமாம். துவ்வுதல் — அனுபவித்தல். துணிந்து — களவுப் புணர்ச்சி நிச்சயித்து, இசையும் கொல் — உடன் படுவளோ. கொல் — ஐயப்பொருளில் வந்த இடைச்சொல். ஓ — அசை. மனமே! ஓர் — ஆராய்ந்து பார். தலைவன் தன் மனத்தை நோக்கி ஆராயச் சொன்னமை — தான் தலைவியின் உள்ளக் கருத்தினை அவள் செய்த செய்கைகளால் அறிந்தமை பற்றி.

வழிபாடு மறுத்தல்

13\. *கனங்கொண்ட கார்வண்ண ராதி*
வராகர் கரந்தைவெற்பில்
வனங்கொண்ட சோக மடைந்துநிற்
பீரும்மை வந்தடைந்தேன்
இனங்கொண்ட சோக மெளியேனெய்
தாம லிடந்தருவீர்
முனங்கொண்ட மாதவி காளளி
கூரு முகமலர்ந்தே.

வழிபாடு மறுத்தல்:— *தலைவன் செய்த வழிபாடுகளைத் தலைவி மறுத்தல். முனம் கொண்ட மாதவிகாள் — முன்னம் அறிந்த மாதவிக் கொடிகளே என விளி. முனம் — முன்னம்: ''இன்னார்க் கின்னுழி யிதுபயக்கு மெனும், முன்னம் தருவது முன்னமாகும்'' என்பது விதி. எனவே, முன்னம் — குறிப்பு. அளி கூரும் — கருணை புரியுங்கள். ''முகம் மலர்ந்தே'' என்றதால் — உள்ளூர மன முவந்து என்றபடி.*

கனம் கொண்ட - மேன்மை தங்கிய. வெற்பில் - மலையிடத்து. வனம் கொண்டு — புனத்தை இடமாகக் கொண்டு. அசோகம் அடைந்து நிற்பீர் — அசோக மரத்தை அடைந்து (தழுவி) நிற்கின்றீர்; (ஆனல் நானே) உம்மை விரும்பி வந்தடைந்தேன். இனம் — இன்னம் என்பதன் தொகுத்தல். இன்னமும் நான் கொண்ட சோகம் (துன்பம்) எளியேன் எய்தாமல் (அடைந்து அனுபவியாதபடி) இடம் தருவீர். இடம் — வாய்ப்பு.

சோகம் எய்தாமல் இடம் தருவீர் என்று வேண்டுதலால் தலைவன் வழிபாடுகளைத் தலைவி மறுத்தாள் என்பது பெறப்பட்டது.

மாதவிக் கொடிகளைப் பார்த்து ''ஏ! கொடிகளே! என் தலைவிதான் என் சோகத்தை ஆற்றுவதற்கு இடம் தரவில்லை; நீங்களாவது ஒதுங்குவதற்கு இடம் தந்து என் சோகத்தை ஆற்றுவீராக'' என்று கூறியதால் தலைவி உடன்படாத தன்மையும் விளங்கும். **அசோக** மரத்தையடைந்து தழுவி நிற்பீர் என்று கொடிகளைக் கூறியதால், அவற்றின் சோகமின்மை கருதியபடி. (அ + சோகம் — சோகமின்மை, அசோகமரம் என இரு பொருள் பட்டது) அசோக மரம் — குறிஞ்சிக் கருப்பொருள்.

மறுத்தெதிர் கோடல்

14\. காமக் கனலிற் பெருவாரிக்
கோடங் கருமெழுகால்
வாமத் தமைத்துக் கடப்பதொப்
பாமுந்தி வந்தகஞ்சப்
பூமற் கருளுங் கரந்தை
வராகர் பொதியமன்ன
தாமத் தடம்புயத் தார்தமை
நாணிற் றகைவதுவே.

மறுத்தெதிர் கோடல்: முன்னர் வழிபாடு மறுத்த தலைவி தலைவனை ஏற்றுக் கொள்ளுதலை விரும்பல். (இதுபோது புணர்ச்சி விரும்பியதால் என்க.)

உந்தி — கொப்பூழ். வந்த — தோன்றிய. கஞ்சப்பூ — தாமரைப் பூ; மன் — தலைவன். தாமரைப்பூ வந்த தலைவன் — பிரமன். பூ மற்கு — (பூமனுக்கு) பூமன் + கு = நான்கனுருபுவிரி. வராகர் பிரமனுக்கு அருள் புரிந்த வகை — தமது சிருட்டித்

தொழிலை அவனிடம் ஒப்படைத்தல். அவ் வராகருடைய எல்லைக் குட்பட்ட பொதிய மலை போன்ற விசாலமான ஒளி பொருந்திய தோள்கள் தலைவனது தோள்கள் என்று குறித்தபடி. தாமம் — ஒளி; தடம்புயம் — உரிச்சொற்றொடர். அத்தோள்களில் அணிந்த தார் — மாலை. அந்த மாலையைத் தலைவன் தலைவிக்கு அளித்த போது அவளது தனம் நாணத்தினால் அணிதற்குக் கூசி எதிர்கோடல் மறுத்துத் தகைந்தது. (தகைதல் — தடுத்தல்). இச்செயல் மனப்பூர்வமாகச் செய்யப்பட்ட தொன்றன்று என்பதைத் தலைவி ஓர் அரிய **உவமையால்** தெளியக் காட்டி, அஃது பயனின்றிக் கழிதலையும் பெற வைக்கின்றாள்.

அந்த உவமை பின் வருமாறு :— தலைவனது தடம்புயத் தாரை (மாலையை)த் தனம் நாணினால் தகைவது — காமக் கனலாகிய பெருங்கடலைக் கடத்தற்கு ஒரு ஓடத்தைக் கரு மெழுகினால் பக்கமெல்லாம் பூசி அமைத்து அதனைக்கொண்டு கடப்பதனை ஒப்பதாகும். மெழுகெல்லாம் உருகிப் போய்க் கடக்க முடியாது வற்றும். அஃதே போல் தாரைத் தனம் நாணில் தகைகின்ற இச்செயலும் காமக் கனலிற் பட்ட எனக்குப் பயனற்றதே யாகும். இதனால், முன்னர் தலைவனது வழிபாடு மறுத்த தலைவி இப்போது புணர்ச்சி விருப்பத்தால் அவனை எதிர் கொள்கின்றாள். ''உயிரிற் சிறந்தன்று நாணே'' யாதலின், அது தகைந்தது.

நாணின் — இன், ஐந்தனுருபு ஏதுப்பொருளது. தகைவதுவே குற்றியலுகரம் கெடாது புணர்ந்து உடம்படுமெய் பெற்று வந்தது. காமக் கனல் — உருவகம். வாரி — கடல். வாரிக்கு ஓடம் — வாரி நீக்குதற்கு ஓடம்: நான்கனுருபு நீக்கற் பொருளில் (ஒழித்தற் பொருளில்) வந்தது; ''பித்தத்துக்கு இஞ்சி'' ''ஆதவத்துக் கருநிழல்'', ''மறத்திற்கும் அஃதே துணை'' என்பன போலக் கொள்க.

இடையூறு கிளத்தல்

15\. கிரிசனுந் தானு மிரண்டாயொன்
றாய்நின்ற கேண்மைவிடாப்
பரிசனஞ் சூழுங் கரந்தைப்
பிரான்பன்ன காசனம்போற்
றெரிசனந் தந்து கடலடைத்
தீர்வெற்புஞ் சேர்த்தணைத்தாய்
வருசன னத்திலி ராமனென்
றேசொல்ல லாமும்மையே.

இடையூறு கிளத்தல் — தலைவி, கூட்டத்திற்கிடையூறாக நிகழ்த்தியவற்றைத் தலைவன் சொல்லல். அதாவது, தலைவி நாணிக் கண், தனம் இவற்றைப் புதைத்ததனால் எழுந்த துன்பத்தைக் கூறுதல்.

கிரிசன் — சிவன்: கைலாயகிரியுடையவன். தானும் இரண்டாய் — விஷ்ணு, சிவன் என்று இரண்டு தனிப்பட்ட மூர்த்தங்களாய் விவஹரிப்பதுண்டு. இனி, ஒன்றாய் — இருவரும் ஒன்றே என்று கொண்டு ஒரே மூர்த்தமாய் விவஹரிப்பதுமுண்டு. இப்படிப்பட்ட கேண்மை — நட்புறவு, **நின்ற** கேண்மையாகும். அதாவது எஞ்ஞான்றும் நிலைத்து நிற்கின்ற உறவு முறையாகும். இந்த உறவு முறைமையை அறிந்த பரிசனம் — பக்தகோடிகளிற் சேர்ந்த மக்கள், விடா — இருவரையும் விடாமல், சூழும் — பின் தொடர்ந்து சூழ வருவர். இரு தெய்வங்களையும் ஒரு நிகராக் கொண்டு வழிபடுவர். அப்படிப்பட்ட சிறப்புடையது கரந்தை. அந்தக் கரந்தையில் பிரானாய் (முழுமுதலாய்) எழுந்தருளியிருப்பவர் ஆதிவராகர். இங்குள்ள கோபுர அமைப்பு சைவ வைணவ ஒற்றுமையை உணர்த்தும் வகையில் அமைக்கப் பட்டுள்ளது என்ப — ஈண்டு —

''தாழ்சடையும் நீண்முடியும் ஒள்மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்னாணும் தோன்றுமால் — சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் **எந்தைக்கு**
இரண்டுருவும் ஒன்றா யிசைந்து''

(மூன்றாம் திருவந்தாதி செ: 63)

''பொன்திகழு மேனிப் புரிசடையம் புண்ணியனும்
நின்றுலகம் தாய **நெடுமாலும்** — என்றும்
இருவரங் கத்தால் திரிவரேலும் ஒருவன்
ஒருவனங்கத் தென்று முளன்''.

(முதல் திருவந்தாதி செ: 98)

இப்பாசுரங்களை நினைக.*

*இந்தப் பாசுரங்களில் வந்துள்ள ''எந்தைக்கு'' என்ற சொல்லும், ''நின்றுலகம்தாய **நெடுமாலும்**'' என்ற அடைமொழிச் சொற்களும் விட்டுணுவின் பரத்துவத்தைக் காட்டி, அவனே சரீரி — ஏனையோர் சரீரம் என்பதைத் தெரிவிக்கும்.

கரந்தைப்பிரான் — ஆதிவராகப் பெருமாள்.
பன்னகாசனம் — பாம்பிருக்கை;

ஆதிசேடனாகிய ஆசனம். ''இருந்தால் சிங்காசனமாம்'' என்றார் பொய்கையாழ்வாரும் (செ. 53). பன்னக + ஆசனம் —

பன்னகாசனம்: தீர்க்க சந்தி பெற்ற வடமொழித் தொடர். பந்நகம் என்ற வடசொல் — பத்+நகம் என்று பிரிந்து கால்களால் நடவாத தென்றும், பந்நம்+கம் என்று பிரிந்து வளைந்து செல்வ தென்றும் பொருள்படும். ஆதிசேடன் போல் தரிசனம் தந்து என்று தலைவியைச் சொன்னது - அவளது படவரவு போன்ற அல்குலை நோக்கி.'' அரவு அல்குல் புனமயிலே'' என்றாள் **ஆண்டாளும்**. உயர் பொருளை இழி பொருட்கு உவமை கூறுதல் இழுக்கன்றோ என்னில், சொல்லுவான் குறிப்பினால் இழுக்கன்று என்க; கடல் அடைத்தீர் — கடல்போற் பரந்து விசாலமாயுள்ள கண்களைப் புதைத்தீர். ''கடலினும் பெரிய கண்கள்'' என்றாள் சூர்ப்பணகையும். வெற்பும் சேர்த்து அணைத்தாய் என்றது — பருத்த முலைகளையும் கைசேர்த்துப் புதைத்தபடி. ஒருகையால் கண்களையும், மற்றொரு கையால் தனங் களையும் புதைத்தீர். எனவே, தலைவன் இடையூறு கிளத்தியபடி காண்க.

வரு சனனத்தில் — எடுத்து வந்த இந்தப் பிறவியில்; தலைவி யாகிய உம்மை, இராமபிரான் என்றே சொல்லிவிடலாம். இரு வருக்கும் கடலடைத்தலிலும், வெற்பு சேர்த்து அணைகட்டியதிலும் சாம்யம் உண்டு. இருவர் காரியங்களும் ஒரு நிகரனவே. இராம பிரானது சேதுபந்தனம் பிரசித்தம். இங்ஙனம் கூறித் தலைவன் அசதியாடியபடி என்க.

ஈர், ஆய் — இரண்டும் முன்னிலை வினைமுற்று விகுதிகள். இரண்டாய் ஒன்றாய் — முரண். விடா — ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். கடல் கண்ணுக்கும், வெற்பு நகிலுக்கும் இலக்கணை. வருசனனம் — (தன்னை நோக்கி) வந்த சனனம்: ''வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை'' என்ற விடத்துப் போல.

நீடுநினைந்திரங்கல்

16. கீதம் பயிலுங் கிளையார் வராகர் கிரியினின்றேன்
ஏதம் பயில வெழில்சிறந் தீர்நிலை யேதிளமை
வேதம் பயில்தமிழ் நாலடி யாருள் விதித்ததன்றோ
காதம் பயில்விழி யீரென்று கூடிக் களிப்பதுவே.

நீடு நினைந்திரங்கல் - புணர்ச்சியெய்தாமையான் இவளுள்ளம் எஞ்ஞான்றியையுங் கொல்லோ எனக் காலநெடிதாகத் தலைவியை நோக்கி நினைந்திரங்கிக் கூறல்.

கீதம்பயிலும கிளை — கிள்ளை — கிளி; இடைக்குறை. கிளியார் என உயர்திணையாக் கூறியது, அது கீதம் பயிலும் சிறப்புநோக்கி; திணைவழுவமைதி. கிளிகளே கீதம் (சங்கீதம்) பயிலுவதென்றால் அவ்வராகர் வரைப்பில் வாழும் பெண்டிரின் பேச்சினிமையின் திறம் வியந்தபடி. கிரியில் நின்றேன் — வரைப்பகுதியில் புணர்ச்சி எய்தப்பெறாமல் வறிதே நிற்கின்றேன். (நீரோ) ஏதம் பயில எழில் சிறந்தீர் — (படைத்துள்ள அழகுக்குக்) குற்றமுண்டாகும்படி மேலும் அழகு மிகுந்து சிறந்து விளங்குகின்றீர். [''மிகு நலம் பெற்றாள் தமியள் மூத்தற்று'' (குறள் — அதிகாரம் 101, 7) என்பது போலேயும், ''குமரி மூத்தவக் கொடுங்குழை நல்லாள்' (மணிமேகலை) என்பது போலேயும் ஆயினீர்]. இளமை நிலை ஏது — இளமை ஒரே நிலையில் நிற்பதேது? இளமை நிலையாது கழிந்து கொண்டேயிருப்பது என்ற உண்மை நாலடியாருள்ளும், ''இளமை நிலையாமை'' அதிகாரத்துள் விதிக்கப்பட்டுள்ளதன்றோ! வேதம் பயில் — வேதக் கருத்துக்கள் பயில்கின்ற; அதாவது உண்மையான தத்துவக்கருத்துக்கள் பயில்கின்ற என்றபடி. நாலடியார் (அவைதிக) சமண முனிவர்களால் தமிழில் இயற்றப் பட்ட தெனினும் வடமொழி வேதங்களிற்பயிலும் உண்மைகள் அதனில் விதிக்கப்பட்டுள்ளன என்பதறியவேண்டுவது. தலைவி சங்க நூற்பயிற்சியுடையவள் என்றும் தெரிவித்தபடி. காதம் பயில் விழியீர் — காதளவோடிய கண்ணாய் என்று விளித்தபடி. காது — அம் சாரியை பெற்றுக் 'காதம்' என வந்தது. ''என்று கூடிக்களிப் பதுவே'' என்றதால் — தலைவன் புணர்ச்சி நிகழாது பொழுது நீண்டதற்கு இரங்கலும் பெறவைக்கப்பட்டது. என்று — எக் காலமோ! என்பது நீடுநினைந்திரங்கலைக் குறிக்கும். களிப்பதுவே — குற்றியலுகரம் கெடாது புணர்ந்து உடம்படுமெய் பெற்று வந்தது. நாலடியாரை எடுத்தது இருவர் இளமைநிலையாமையும் குறித்தற்கு.

முயங்குதலுறுத்தல்

17. குருந்திடைக் கோவியர் கூறைகொண்
டேறிய கோவியர்தம்
அருந்தவந் தேற விருந்தார்
கரந்தையி லன்னமன்னார்
பொருந்திய நன்னய மென்னேய்
தணியென்று போனவற்கு
மருந்தெனப் பண்டிதன் பாலைமுன்
னேவைத்த வாறொக்குமே.

முயங்குதலுறுத்தல் — தலைவன் தனது முயங்குதல் விருப்பத்தை வலியுறுத்திக் கூறல், முயங்குதல் — கட்டியணைத்தல். குருந்து — குருந்தமரம். கோவியர் — கோபியர்: ஆயர் பாடியிடைப் பெண்கள். கூறை — புடைவை முதலிய ஆடைகள், கண்ணபிரான் நீராடப் பொய்கைக்கரைக்கு வந்த கோபகன்னியரின் கூறைகளைக் கவர்ந்து குருந்த மரத்திலேறி அவைகளை வைத்தமை பிரசித்தம்.

''குருந்திடைக் கூறைபணியாய்'' என்றது நாச்சியார் திருமொழி. பின்னர், அ — அந்த. கோவியர்தம் — கோபியருடைய, அருந்தவம் — மனோரதம், தேற — ஈடேற, இருந்தார் — [அவரிடை குரவைபிணைத்துக் கூத்தாடி] எழுந்தருளியிருந்தார். அத்தகைய திருமால் இதுபோது கரந்தையில் ஆதிவராகராகக் கோயில் கொண்டுள்ளார். அவர் வரைப்பில் அன்னம் அன்னார் — அன்னப் பறவை போன்ற நடையழகினையுடைய என்தலைவி, பொருந்திய— மேற்கொண்டு நிற்கின்ற, நன்னயம் — நல்ல இணக்கநிலை [எங்ஙனம் இருப்பதென்னில்] — என் நோயைத் தணிப்பாய் என்று சொல்லிக் கொண்டு போன நோயாளிக்கு வைத்தியன் அதற்கு மருந்து பாலாகும் என்று சொல்லி, பாலை முன்னே கொணர்ந்து வைத்தது போலாகும்.

பாலோ நல்ல உணவு: அதனையே மருந்தாகக் கொடுத்தால் அது மேலும் வரவேற்கத்தக்க இணக்கமாகின்றது: எனவே நன்னயமாகும்.

ஆக, தலைவி பொருந்திய நன்னய நிலை — தலைவனின் காம நோய்தணிப்பதற்கு இணங்கி நிற்பதோடு மேலும் அவன் இறுகக் கட்டியணைத்தற்கும் இணக்கமாகின்றது எனக் குறித்தபடி, பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல. இங்கு வந்துள்ள உவமை உலக வழக்குப்பற்றியது.

புணர்ச்சியின் மகிழ்தல்

18. கூர்தாங்கு முட்பொதி கட்பல
வீன்ற குடக்கனியுஞ்
சீர்தாங்கு வாழையும் தேமாங்
கனியுஞ் சிறிதினிக்கும்
பார்தாங்கு செச்சைய ஞாதி
வராகர்பைங் காவினிற்கும்
ஏர்தாங்கு கொம்பியர் செவ்வாய்
நறுங்கனிக் கீடலவே.

புணர்ச்சியின் மகிழ்தல் — *தலைவியின் குறிப்பறிந்து புணர்ந்த தலைவன் அப்புணர்ச்சியினை மகிழ்ந்து கூறல்.*

பலவு - பலாமரங்கள், ஈன்ற - உண்டாக்கித்தந்த, கூர்தாங்கும் முள் பொதிகள் — கூரிய முட்களைக் கொண்ட தொகுதிகள் நெருங்கியுள்ள, குடக்கனியும் — பலாப்பழமும், வாழைக்கனியும் தேமாங்கனியும் சிறிது இனிக்கும். முக்கனிகளும் இனிப்பது சிறிதே. ஆனால் என் தலைவியின் சிவந்த கொவ்வை வாய்க்கனி யினிப்பதோ பெரிது. எனவே அம்முக்கனியும் இந்தச் செவ்வாய்க்கனிக்கு ஈடல. மேலும், இந்தக் கோவை வாய்க்கனி நறுமணம் வீசுவது. சந்தனக் குழம்பு பூசிய ஆதிவராகர்க்குரிய பசிய சோலையில் அழகிய கொம்பினில் தோன்றுவது இக்கனி.

பார்தாங்கு — காத்தற்றொழில் குறிப்பது. செச்சை — சந்தனக் குழம்பு; மங்களம் தெரிப்பது. திருமாலுக்குச் சந்தனக் காப்பு இடுதல் மிகவும் உகந்தது. ஏர் — அழகு, கொம்பியர் — பூங்கொம்பு போன்ற ஒல்கியொசியும் [இடையையுடைய] தலைவி; ''அர்'' விகுதி'' உயர்வு குறிப்பது. செவ்வாய் — பண்புத்தொகை. கனி — கோவைக்கனி; ''கோவை வாயாள் பொருட்டு'' என்றார் **நம்மாழ்வாரும்**. *கனி அதரத்துக்காவதுமாம். ''வாய்க்கனிக் கீடலவே' என்றமையால், தலைவியை முயங்கித் தலைவன் மகிழ்ச்சி யடைந்தமை பெற்றும். எனவே, புணர்ச்சியின் மகிழ்தல் ஆகும்.*

புகழ்தல்

19. கெண்டையங் கண்மயி லேமதிக்
கீற்றுங் கிரணமுத்துந்
தொண்டையுஞ் செண்பக முங்கரு
நீலமுந் தோற்றிலவாற்
கண்டையங் கட்செவிப் பாயார்
வராகர் கரந்தைவெற்பி
லுண்டையந் தாமரை நின்வாண்
முகத்தினுக் கொப்பெனவே.

புகழ்தல்: *தலைவன் தலைவியது அழகைப் புகழ்தல். மயிலே! மதிக்கீற்றும், கிரணமுத்தும், தொண்டையும், செண்பகமும், கருநீலமும் ஐயம் கண்டு தோற்று இலவாயின. தாமரை மட்டும் நின் வாண்முகத்தினுக்கு ஒப்பு எனவே ஐயம் உண்டு என்பது பொழிப்பு.*

இதனால் தலைவியது புருவம், பல், வாய், மூக்கு, கண் இவற்றிற்கு ஒப்புடைப் பொருள் கூறப்புக்கு ஐயம் விளைந்து அவை நிகராகாமல் தோற்று வராகர் வெற்பிலேயே இல்லாது போயின. முகத்தினுக்கு மட்டும் தாமரை மலரை ஒப்புடைப் பொருளாகக் கூறும் ஓர் ஐயம் விளைந்தது. இதனால் தனித் தனியாக நோக்கின், தலைவியின் அங்க அழகினுக்கு வழக்கமாக ஒப்புச் சொல்லும் பொருள் ஏதும் ஒப்பாகாது என்பதும், சமுதாய சோபையாக ஒப்பு நோக்கும்போது முகத்தினுக்கு மட்டும் செந்தாமரைப்பூவை ஒப்புச் சொல்லலாம் என்பதும் பெறவைக்கப் பட்டது.

இதனால், தலைவியின் அழகினைப் புகழ்ந்தது துறை விளக்கம். கெண்டை மீன் கண்ணுக்கு ஒப்பு. மதிக்கீற்று — புருவங்களுக்கு ஒப்பு. கிரணமுத்து — ஒளி வீசுகின்ற முத்துக்கள் — பல் வரிசைக்கு ஒப்பு. தொண்டை — தொண்டைக் கனிக்குச் சினையாகுபெயர்: வாயினுக்கு ஒப்பு. (தொண்டை — கோவைக்கனி). செண்பகப்பூ மூக்கினுக்கும் கருநீலப்பூ கண்ணுக்கும் ஒப்பு. ஐயம் கண்டு தோற்று இலவால் என மாறுக. ஐயம் காணல் — சந்தேகம் விளைவித்தல். கட்செவி — பாம்பு. இங்கே ஆதிசேடன். அவனைப் பாயாக உடையவர் வராகர். ''பணிபதி: சய்யாசனம்'' என்றார் ஆளவந்தாரும்.

வன்புறை

அணிந்துழி நாணிய துணர்ந்து தெளிவித்தல்

20\. கேதந் தொடுக்கத் தகாதினி
நீரென் கிளிமொழியே
நாதந் தொடுத்த மணிப்பூணுஞ்
சூட்டு நவமணிமேல்
காதந் தொடுக்குந் துளவார்
வராகர் கரந்தையிலுன்
பாதந் தொடுத்தணிந் தேன்பண்டு
போலவைம் பான்வரையே.

வன்புறை: வற்புறுத்துதல், வன்பு-திடம், வலி; உறை — உறுத்தல். வன்பினையுறுத்தல் என விரியும். தலைவி ஐயுறவு தீரத் தலைவன் வற்புறுத்தல். தலைவன் 'பிரிந்திடுவனோ' என்று தலைவி ஐயுற்ற போது, தலைவன் அவளது ஐயந்தீர வற்புறுத்திக் கூறும் அகத்துறைப் பகுதி. இந்த வன்புறை ''ஐயந் தீர்த்தல்,

பிரிவறிவுறுத்தல்'' என இருவகைத்தாகும். அவற்றுள் 1. அணிந்துழி நாணியதுணர்ந்து தெளிவித்தல். 2. பெருநயப்புரைத்தல் 3. தெய்வத்திறம் பேசல் இம் மூன்று துறைகளும் ஐயம் தீர்த்தலின் விரியாகும். இவை முறையே செய்யுட்கள் 20, 21, 22-இல் கூறப்பட்டுள்ளன. இனி 1. பிரியேனென்றல் 2. பிரிந்து வருகென்றல். 3. இடமணித்தென்றல் இம் மூன்று துறைகளும் பிரிவறிவுறுத்தலின் விரியாகும். இவை முறையே செய்யுட்கள் 24, 25, 26-இல் கூறப்பட்டுள்ளன என்பது உணரவேண்டுவது.

இனி அணிந்துழி நாணியதுணர்ந்து தெளிவித்தல்: தலைவன் புணர்ச்சியில் வேறுபட்ட அணிகளைத் திருத்தியபோது தலைவி நாணியதை அறிந்து அவளைத் தெளிவித்தல்.

காதம் தொடுக்கும் துளவு — காததூரம் மணம் கமழும் திருத்துழாய்: ''நாற்றத்துழாய் முடி நாராயணன்'' என்றாள் **ஆண்டாளும்.** திருத்துழாய் அங்குரிக்கும் போதே நறுமணம் விஞ்சிக் கிடக்கும். உன் பாதம் தொடுத்து — உன் பாதம் முதற் கொண்டு, ஐம்பால் வரை — கூந்தல் வரை, (அதாவது தலைபரியந்தம்). பண்டுபோல — புணர்ச்சி நிகழ்த்துதற்கு முன்னர் இருந்ததுபோலவே, அணிந்தேன் — (வேறுபட்டுக் கலைந்திருந்த) அணிகளைத் திருத்திச் சமைத்தேன். (இதனால் தலைவி நாணியதை அறிந்து) என் கிளி மொழியே! — இனி நீர் — இனி நீரே, நாதம் தொடுத்த மணிப் பூணும் — ஒலி செய்யும் மணியாரத்தையும், நவமணிமேல் சூட்டு — நவமணி மாலையின் மேல் தரித்துக் கொள்; (ஆகவே) கேதம் தொடுக்கத் தகாது — (என் மேல் இனி) குற்றம் ஏறிட்டுச் சொல்லத் தகாது; (நான் பண்டு போலவே உன்னைத் திருத்திச் சரிசெய்து விட்டேன் என்றபடி.)

ஐம்பால் — கூந்தல்: ஐந்து பகுதிப்பட்ட தலைமயிர். (குழல், பனிச்சை, கொண்டை, அளகம், துஞ்சை என்பன).

பெருநயப்புரைத்தல்

21. கைத்தலஞ் சேர்சக்க ரத்தார்
வராகர் கரந்தைவெற்பிற்
கொத்தலர் தேடித் திரிவண்டு
காள்கொழுந் தேறலன்றி
முத்தலங் கார முகிண்முலை
யாள்முகத் தாமரைபோற்
புத்தமு தூற்றுங் கமலமுண்டோ?
வுங்கள் பூந்தடத்தே.

பெருநயப்புரைத்தல்: *தலைவன் தன் மாட்டுள்ள மிகுந்த விருப்பத்தைக் கூறுதல். நயப்பு — விருப்பு. கைத்தலம் — இருபெயரொட்டு. சக்கரம் — திகிரி; சுதர்சனம். கொத்து அலர் — பூங்கொத்துக்கள். வண்டுகாள் — விளி. உங்கள் பூந்தடத்தே, கொழு — கொழுவிய, வளமுள்ள. தேறல் அன்றி — தேனைச் சொரிதலல்லாமல், முலையாள் முகத்தாமரை போல் — தலைவியது முகமாகிய தாமரைப் பூப்போல, புது அமுதம் ஊற்றும் — புத்தம் புதிய அமுதம் போல் இனிமையைச் சுரந்து சொரியும், கமலம் உண்டோ — தாமரைப்பூ உளதோ? இலையே, இங்ஙனம், வினவியதால் தலைவன் தன் பெருநயப்பினை வெளிப்படுத்தியமை யுணர்க.*

முத்து அலங்கு ஆரம் முகிழ் முலையாள் — முத்துக்கள் அசைகின்ற ஆரத்தை யணிந்த இளங் கொங்கைகளை யுடைய தலைவி. முகத்தாமரை — உருவகம். புத்தமுதம் ஊற்றுதலாவது — முகப் பொலிவினால் பெருங்களிவரச் செய்தல்.

இச்செய்யுட் பொருளோடு ''கொங்கு தேர் வாழ்க்கையஞ் சிறைத்தும்பி!'' என்று தொடங்கும் குறுந்தொகைச் செய்யுட் பொருளை ஒப்பு நோக்குக. கமல முண்டோ — வேற்றுமையணி பட நின்றது.

தெய்வத்திறம் பேசல்

22. கொற்றஞ் செலுத்திய செங்கோ
னளனுங் குனிபுருவ
விற்றங் கியதம யந்தியும்
போல்வெள்ளி வெற்பிலெழு
பெற்றந் தழுவும் பெருமாள்
கரந்தைப் பிரானருளே
யிற்றங்கு நம்மை யிசைத்தாற்
பிரிப்ப தெவர்சொலுமே.

தெய்வத்திறம் பேசல்: *தலைவன் ஊழின் கூறுபாட்டைப் பேசுதல் [தெய்வம், ஊழ், பால் வகை, விதி என்பன ஒரு பொருட் கிளவிகள்.]*

நாணியது உணர்ந்து தெளிவித்தும் பெருநயப்புரைத்தும் தலைவி தெளிந்திலளாதலின் ஊழ்வலியின் திறத்தைக் கூறித் தெளிவித்தல்.

வெள்ளி வெற்பில் — கைலாய மலையைப் போல அசைக்க லாகா வலிய, எழுபெற்றம் தழுவும் — ஏழு எருதுகளைத் தழுவி வலியொடுங்கச் செய்த, பெருமாள் — கண்ணபிரானுகிய, கரந்தைப் பிரானின் — ஆதிவராகப் பெருமானின், அருளே — கிருபையே, இல் தங்கும் நம்மை – இல்லறத்தில் தங்கவிருக்கும் நம் இருவரையும், இசைத்தால் — சேர்த்துப் பிணைத்து வைத்தால், பிரிப்பது எவர் சொலுமே — எவருமிலர் என்றபடி.

நளனும் தமயந்தியும் போல் பிரிப்பது எவர் என்றதால் இல்லறத்தில் தங்கியிருந்த அவ்விருவரையும் பன்னிரண்டு வருட காலம் கலி புருஷன் பிரித்து வைத்தான். பின்னர் கலி நீங்கக் கூடினர். ஆனுல் நாமோ கரந்தைப்பிரான் அருளே இசைத்து வைக்கக் கூடியுள்ளோம். எனவே கலி புருஷன் அண்ட மாட்டான்.

கொற்றம் — வெற்றி. செங்கோல் நளன் — ''மாதர் அருகூட்டும் பைங்கிளியும் ஆடற்பருந்தும், ஒரு கூட்டில் வாழுமுலகு'' (**நளவெ.: சுயம்வர:** செ. 21).

வளைந்த புருவத்திற்கு வில் உவமை கூறுவது மரபு. குனி புருவ தமயந்தி என்றது — புருவ நெரிப்பினுலேயே வேடனையும் எரிக்கும் சக்தியுடையவள் எனத் தெரித்தற்கு. வெற்பில் — இல்— ஐந்தனுருபு ஒப்புப் பொருளது. ஏழு எருதுகளுக்கும் வெள்ளி வெற்பை உவமித்தது — அவற்றின் மிக்க வலியும் வெள்ளை நிறமும் பெற வைத்தற்கு.

கண்ணபிரான் நப்பின்னையை மணஞ் செய்து கொள்ளும் பொருட்டு ஏழு எருதுகளைத் தழுவி வலியொடுக்கி அடர்த்தமை பிரசித்தம். ''இமிலேற்று வன்கூன் கோட்டிடையாடினை கூத்து அடலாயர்தம் கொம்பினுக்கே'' என்ருர் நம்மாழ்வாரும். (**திருவிருத்தம்**: செ. 21.) திருமால் அருள்கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே என்பது தேற வேண்டிய தத்துவார்த்தம். சொலுமே— தொகுத்தல். பெற்றம் — பொதுப்பெயர். ஈண்டுச் சிறப்பாக எருதுகளைக் குறிக்க வந்தது.

நளனையும் தமயந்தியையும் சிறப்பாக எடுத்துக்காட்டி அவர் களைப்**போல்** பிரிப்பதெவர் என்றதால், இருவரும் தம்மில் ஒத்த தலைவனும் தலைவியுமாவர் என்று உணர்த்தப்பட்டது. (அது போலே நாமும் என்றபடி]. இதனை ''செம்மனத்தான் தண்ணளியான்..... உனக்கு''; ''நாற்குணமும் நாற்படையா...... அரசு'' என்ற நளவெண்பாச்செய்யுட்களால் அறியலாம். கலி நிர்ப் பந்தத்தாலே அவர்கள் தாற்காலிகமாகப் பிரிய நேரிட்டபோதும்

பின்னர் இரண்டாம் சுயம்வரம் என்ற போலி வியாஜத்தாலே பிரியாது கூடியமை இங்கு நோக்கு.

பயந்தோர்ப்பழிச்சல்

23. கோடாத நீதி யளகா
புரியிற் குபேரனைப்போற்
பீடார் தனமும் பெருங்கிளைக்
கூட்டமும் பெற்றுமுத்தி
நாடாளுஞ் செல்வக் கரந்தை
வராகர் நறுங்கிரிமேல்
வாடா மலர்க்கொம்பைத் தந்தா
ரிருவரும் வாழியவே.

பயந்தோர்ப்பழிச்சல்: தலைவியின் பெற்றோரைத் தலைவன் வாழ்த்துதல். பயந்தோர் — பெற்றோர். பழிச்சல் — வாழ்த்துதல்.

முத்தி நாடு — வைகுந்தம்; நித்ய விபூதி. வாடா மலர்க் கொம்பு - தலைவி. வாடா - ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். கொம்பு — கொம்பு போன்றாளுக்கு உவமையாகுபெயர். கிரிமேல் கொம்பைத் தந்தார் — மலைமேல் கொம்பு பயில்வது இயல்பு. தந்தார் — தலைவியைப் பெற்றோர்கள்.

குபேரனைப் போல் தனமும் கிளைக் கூட்டமும் பெற்று வாழியவே என வாழ்த்தியபடி. கோடாத — கோணாத: நேர்மையான. அளகாபுரி — குபேரனது பட்டணம். குபேரன் — செல்வம் படைத்தோரில் மிக்கவன்.† பீடு ஆர் தனம் பெற்றவன் — பெருமை பொருந்திய சங்கநிதி பதுமநிதி என்னும் இரண்டும் பெற்றவன். பெருங்கிளை — மிக்க சுற்றத்தார். குபேரன் சுற்றம் யக்ஷர்கள். வாழியவே — வியங்கோள் வினைமுற்று.

பிரியேனென்றல்

24. கௌவும் புலிநிகர் கூற்று
மிராக்கதக் கள்வரெனுந்
தெவ்வும் பதறு திகிரி
வராகர்செந் தேன்கிரிவாய்

† கல்லிடைக் குறிச்சியிலுள்ள ஸ்ரீ ஆதிவராகப் பெருமாளைக் குபேரன் பிரதிஷ்டித்தான் என்பர்; எனவே, தலையாய தேவபிரதிஷ்டையாகும்.

வெளவும் புயலென யான்பிரி
யேனும்மை வாரிதியு
குவ்வும் பிரியினுந் தான்குன்ற
வாணர் குலமயிலே.

பிரியேனென்றல்: தலைவன் பிரிவுண்மை கேட்டு வருந்திய தலைவியை நோக்கி ''நான் நின்னிற்பிரியேன்'' என்று கூறுதல்.

குன்றவாணர் — குறிஞ்சிநில வாழ்நர். குலமயில் — சிறந்த மயில். மயில் போன்ற சாயலையுடைய தலைவிக்கு உவமையாகு பெயர். வாரிதியும் — கடலும், குவ்வும் — பூமியும், பிரியினும் — (ஒருகால்) பிரிய நேரிட்டாலும், யான் உம்மைப் பிரியேன். ''பிரியி**னும்**'' — உம்மை பிரியாமை குறிப்பது. ''கடல் சூழுலகம்'' ''தெண்கடல் வளாகம்'' என்ற வழக்குகள் காண்க. வராகருடைய சிவந்த தேனையுடைய மலையிடத்து, வெளவும் — சூழக் கவிந்து கொண்டிருக்கும், புயல் என — மேகம் போல. இவ்வுவமையால், எப்போதும் பிரியாது புயல் கவ்வினபடியே இருக்கும் என்பது குறிக்கப்பட்டது.

கூற்று — யமன். தெவ் — பகைவர். புலியையொத்த யமன் என்றது — பிடித்தலைத்தலில். இராக்கதக் கள்வர் — இராவணன் போன்ற இராக்கத வஞ்சகர்கள். பதறு — பதறும்படி செய்கின்ற, திகிரி — சக்கரம்; ஏனைய ஆயுதங்கட்கும் உபலட்சணம். கூற்று பதறும் என்பதை ''திறம்பேன்மின் கண்டீர் திருவடிதன் நாமம், மறந்தும் புறந்தொழா மாந்தர் – இறைஞ்சியும், சாதுவராய்ப் போதுமின்களென்றான் நமனும்தன், தூதுவரைக் கூவிச் செவிக்கு'' (நான்முகன் திருவந்தாதி. செ. 68) என்ற **திருமழிசையார்** வாக்காலும் அறியலாம். வாணர் – வாழ்நர் — மரூஉ. தான் — அசை. மயில் — குறிஞ்சி நிலப் பறவை. தெவ் — பகைமை: பகைவர்க்குப் பண்பாகுபெயர்.

பிரிந்து வருகென்றல்

25. சங்கந் தரித்த கரத்தா
னிருபெண்க டாள்வருட
பொங்குங் கடற்றுயி லாதிவரா
கன்பொதி யத்திலியா

னெங்குந் திரியினு நின்கொங்கை
யூர்பத் திரவுகட்டி
யங்கங் குளிருமென் னுருயி
ராவந் தணைதருமே.

பிரிந்து வருகென்றல்: தலைவன் நான் நின்னிற்சிறிது பிரிந்து மீட்டு வருவேன் என்று கூறுதல். — வருகு — வருவேன்.

சங்கம் — சங்கு; பாஞ்சசன்னியம். கரம் — கை. இருபெண்கள் — ஸ்ரீதேவி, பூதேவி, ''வடிவிணையில்லா மலர்மகள் மற்றை நிலமகள் பிடிக்கும் மெல்லடியை என்றார்'' நம்மாழ்வாரும். (**திருவாய்மொழி**, 9-2-10) தாள் வருட — நாச்சிமாரும் கூசிப்பிடிக்கும் மெல்லடிகள் என்பது வியாக்யாந பங்க்தி. கடல் — திருப்பாற்கடல். துயில் — யோகத்துயில் ''யோகு செய்த பரமன்'' என்றார் **நம்மாழ்வார்**. யான் எங்கும் திரியினும் நின் கொங்கை என் ஆருயிரா வந்து அணைதரும் என இயையும். ''ஆருயிராவந்து'' என்றதால், நம்மிருவருயிரும் ஒருயிராய் இருப்பது என்றான். அணைதரும் — அணைக்கும்; தா—துணைவினை. இந்த அணைப்பின் செறிவினை விளக்குதற்கு ''ஊர்பத்து இரவு கட்டி அங்கம் குளிர்வதை'' எடுத்துரைத்தான். அதாவது, ஊர் — மனையிடத்து, பத்து இரவுகள் ஒரு சேரக் கட்டிக் கிடந்து (காமவெப்பம் முற்றும் நீங்கி) அங்கமெல்லாம் தணிந்து குளிர் வதையொப்பப் பிரிவினும் வந்து அணைந்து குளிரச் செய்யும் என்றபடி. இதனால் நெஞ்சினால் பிரிவின்மை வலியுறுத்தியபடி. தாள்வருட அவன் துயின்றான், கொங்கை வருட நீ துயின்றாய் என்பதுதொனி. பொதியத்திலியான் — ''தன்னொழி மெய்ம்முன் யகரவர இகரம் துன்னிற்று.

இடமணித் தென்றல்

26\. சாதிக் குகந்த கரந்தை
வராகப்பன் சந்நிதியி
னுதிக்குஞ் சங்கங் கலியாணப்
பந்தர்க்கு நாதமென்றே
யோதிக் கடிமணப் பார்கணிப்
பார்க்குநும் மூரவர்கள்
பேதிக்குந் தூரமுண் டோமயி
லேயிரு பேருக்குமே.

இடமணித் தென்றல்: (இடம் அணித்து என்றல்). தலைவன் தன்னூர் அணித்தாயுள்ளதென்று தலைவிக்குக் கூறுதல், (அணித்து-கிட்டேயுள்ளது, இனி அழகாயுள்ளது என்றலுமாம்).

சாதிக்கு உகந்த பலவகைச் சாதியினரும் விரும்பி வழிபடு கின்ற. மேலைச் செய்யுள் 57 ஒப்புக்காண்க.† நாதிக்கும் — நாதம் செய்யும், ஒலிக்கும் என்றபடி. சங்கம்—சங்கத்வனி; சங்கிறெலிக்கு இலக்கணை. விடியற்காலையில் புள்ளரையன் சந்நிதியினின்று சங்கொலிப்பது மரபு, மங்களம் தெரிப்பதற்காக''. ''புள்ளரையன் கோயிலில் வெள்ளை விளி சங்கின் பேரரவம் கேட்டிலையோ'' என்றாள் **ஆண்டாளும்.** அந்தச் சங்கநாதம் ''கலியாணப் பந்தர்க்கு நாதம் என்றே ஓதிக் கணிப்பார்'' — அதாவது, ஜாதகம் பார்த்து முகூர்த்தம் கணிக்கும் சோதிடர், இந்த வராகர் சந்நிதியினின்றெழும் சங்க நாதத்தையே கலியாணப் பந்தர்க்கால் நாட்டுதற்கமைந்த நல்ல சூசகமான நாதம் என்றே சொல்லிக் கணிப்பது வழக்கம். நமது கடிமணத்தில் கலியாணப் பந்தர்க்கால் நடுவதற்கும் இவ்வொலியே பயன்படும். அப்படிச் சங்கொலி கேட்கும் தூரமே அண்டி அணித்தாயிருப்பவும், நும் மூரவர்கள் — தலைவியாகிய உன் ஊரிலேயிருக்கும் பெரியோர்கள், பேதிக்கும் — (தமக்குள்) விவாதித்துக் கொள்ளும், தூரம் உண்டோ — இல்லையே என்றபடி. (மேலும்) மயிலே — மயில் போன்ற சாயலையுடைய தலைவியே! இருபேருக்குமே — நம் இருவ ரிடையிலுமே (இருக்கும் தூரம்) நும் மூரவர்கள் பேதிக்கும் தூரம் கூடக் கிடையாது. அதாவது, நாம் இருவரும் கிட்டி நெருங்கி யிருப்பது போலவே என் ஊரும் மிகவும் கிட்டியே யுள்ளது எனத் துறை விளக்கஞ் செய்தவாறு. ''இதுவன்றோ எழிலாலி என்றூர் தாமே'' என்று என் காலைக் காட்டினார் என்ற பெரியவாச்சான் பிள்ளை உரைநயம் ஈண்டு நினைக.

கடிமணம் பார் கணிப்பார்க்கு — கடிமணம் - திருமணத் திற்கான, பார் - நாள், நட்சத்திரம், லக்கினம் முதலிய வற்றைப் **பார்த்து**, கணிப்பார்க்கு - நிர்ணயிக்கும் சோதிடர்க்கு. பார் - பார்த்தல்; முதனிலைத் தொழிற்பெயர். ''சொல்லி'' என்னாது ''ஓதி'' என்றது - வராகன் சந்நிதி சங்கொலியாதலின்.

---

† திருக்கரந்தை யென்ற பெயரில் கல்லிடைக் குறிச்சியிலுள்ள இக் கோவிலையடுத்துப் பல தெருக்களும் அக்ரஹாரமும் உண்டு. அவைகள்—கரந்தை வண்ணார் குடித்தெரு, செட்டிபிள்ளைமார்தெரு, இடைக்குடித்தெரு, தொண்டைமான்தெரு, ஆசாரிமார்தெரு, பாளையம்கிராமம் (அக்ரஹாரம்) என வழங்கப்படுகின்றன.

இனி, சாதிக்குகந்த கரந்தை வராகப்பன் என்பதை ச (ஸ:) + ஆதிக்கு + உகந்த + வராகப்பன் என்று பிரித்து, ''ஆதி'' என்ற சப்தத்தோடு கூடியிருத்தற்கு மிகவும் ஏற்ற வராகப்பன் எனப் பொருள் படுத்தி ''ஆதி வராகர் சந்நிதி'' என்னவுமாம். அதாவது, யாரும் பிரார்த்தனை செய்யாதிருக்கச் செய்தே கவர்ந்து போன வேதங்களைத் தாமாகவே லோகக்ஷ ரக்ஷணார்த்தமாக மீட்டு வந்து வெளியிட்டமையால் 'ஆதி' என்ற சொல் அவ்வராகற்கே பொருந்தும்.

(பிரிவுழி மகிழ்ச்சி) செல்லுங்கிழத்தி செலவு கண்டு உளத்தொடு சொல்லல்

27. சிலையேந்து பாணந் திசைமறிந்
தோடச்செங் காந்தளொன்று
கலையேந்த வொன்று கனங்குழ
லேந்தக் கவிகையென்ன
மலையேந்து செங்கைய ராதி
வராகர் மலையமென்ன
முலையேந்து மாருயிர் செல்லுநெஞ்
சேநெடு மூச்செறிந்தே.

பிரிவுழி மகிழ்ச்சியாவது:- தலைவி பிரிந்து செல்லும் வழித் தலைவன் மகிழ்தல்.

இங்ஙனம் இடமணித்தென்று கூறித் தலைவன் நீங்குவன்; எவ்விடத்து நீங்குவனோ என்னில், தலைவி யாற்றுவாள் கொல்லோ, ஆற்றாள் கொல்லோ என்பது அறிதுமென்று தலைவி காணாததோர் அணிமைக்கண் தான் மறைந்திருந்து தலைவியை நோக்கி யிருப்பானெனக் கொள்க.

செல்லும் கிழத்தி செலவு கண்டு உளத்தொடு சொல்லல்:- அணிமைக்கண் நின்ற தலைவன் புணர்ச்சிக் களத்தினின்றும் போகுந் தலைவியின் செல்லுகையைக் கண்டு தன்னுளத்தொடு கூறுதல்.

கவி கை என்ன - குவிந்த கையென்று சொல்லும்படியாக, மலை ஏந்து - மலை போன்ற கதையை யேந்தியுள்ள, செங்கையர் - சிவந்த (செந்தாமரை போன்ற) கையை யுடையவராகிய, ஆதிவராகர் எழுந்தருளியுள்ள, மலையம் என்ன - பர்வதம் போல்

(பருத்தெழுந்த) முலேயேந்தியுள்ள, ஆருயிர் - அரிய உயிராகிய என் தலேவி, நெஞ்சே! நெடுமூச் செறிந்தே செல்லுகின்ருள். செல்லும் - செய்யுமென்முற்று. நெடு மூச்சு விடுதல் - புணர்ச்சிக்குப் பின் விளைந்த ஆயாசத்தால்.

அவள் செல்லும் பாங்கு எங்ஙனுள்ள தென்னில் - சிலே யேந்து பாணம் - வில்லேந்திய அம்பு, திசைமறிந்து ஓட — திக்கு மாறி யோடவும், செங்காந்தள் ஒன்று கலேயேந்தி யிருப்பவும், மற்ருெரு செங்காந்தள் கனங்குழலேந்தி யிருப்பவும் செல்லுவது போலும். சிலே என்பது புருவத்திற்கும், பாணம் என்பது கண்ணுக்கும், செங்காந்தள் என்பது கைகளுக்கும் காட்டாக வந்து சிறந்தன. பாணம் திசை மறிந்து ஓடல் - கண் முன்னும் பின்னும் பிறழ ஓடுதல். ஏனெனில், ஆயக்கூட்டத்தார் வந்தால் களவு புலனுகுமேயென்று கருதி முன்னும் பின்னும் திசை மாறி மாறி மருண்டு பார்த்தல். சரியாகத் துகிலு டாமலும், கூந்தல் முடியாமலும் கைகளால் அவற்றை ஏந்திக் கொண்டு வந்தது - புணர்ச்சிக் களத்து நின்று நீங்கிப் போய்த் துகிலுடுக்கவும் குழல் முடிக்கவும் நினைத்து வந்தமை.

சிலே, பாணம், காந்தள் - இலக்கணையாக வந்து ஏற்ற அவயவங்களேக் காட்டின. கனம் குழல் - மேகம்போற் கரிய கூந்தல். கனம் - மேகம். மலே - கதைக்கு உவமையாகுபெயர். திருமாலின் கதை கௌமோதகீ எனப்படும். தலேவியை ''ஆருயிர்'' என்றது அன்பின் மிகுதி பற்றி.

பிரிவுழிக் கலங்கல்

ஆய வெள்ளம் வழிபடக் கண்டிது மாயமோ வென்றல்

28. சீரோங்கு செல்வக் கரந்தை
வராகர் சிலம்பில்மட
வாரோங்கு வெள்ளத்தின் வாரோங்கு
கொங்கை மடவனமோ
போரோங்கு வேள்பொரும் புண்ணுற்ற
வென்றிந்தப் பூந்தடத்தே
யேரோங்கு நன்மணம் போற்கன
வோநமக் கெய்தியதே.

பிரிவுழிக் கலங்கல்:- தலேவி பிரிந்த வழித் தலேவன் மனம் கலங்கிக் கூறுதல்.

ஆய வெள்ளம் கண்டு இது மாயமோ வென்றல்:- தலைவன் தலைவியது ஆய வெள்ளத்தின் பெருக்கையும் அவர்கள் அவளுக்குச் செய்யும் வழிபாட்டையும் கண்டு இவளை யான் பெற்றது [என்னைத் தனித்து வந்து கூடியது] என்ன மாயமோ வென்று வியந்து கூறல். (இது, மருளுற்றுரைத்தல்).

சீர் – வைணவ ஸ்ரீ. மடவார் – ஆய மகளிர், வெள்ளம் – பெருங்கூட்டம். அக் கூட்டத்தினைச் சேர்ந்த வாரோங்கு கொங்கை மடவனமோ புண்ணுற்ற என்று இந்தப் பூந்தடத்தே நமக்கு எய்தியதே என முடியும். வார் - கச்சு. அனம் - அன்னம்: இடைக்குறை. புண் - தலைவனுக்கு மன்மதாவத்தையால் ஏற்பட்ட துன்பம். வேள் - மன்மதன், காமத்தை விளைவிக்கும் கடவுள். போர் ஓங்கு வேள் - மடவாரைச் சேனையாக் கொண்டு காமப்போர் விளைவிப்பவன் மன்மதன். பூந்தடம் - பூஞ்சோலை; அன்னத்திற்கேற்பத் ''தடம்'' [தடாகம்] என்றது.

புண் ஆற்ற என்று - காம நோயாலேற்பட்ட துன்பத்தைப் போக்குதற் கென்று, நமக்கு எய்தியது - வந்து நம்மைக் கூடியது. ஏர் ஓங்கு நன் மணம் போல் கனவோ - அழகிற் சிறந்த நல்ல மணம் போல யாது மாயமோ? இதனுல் பெற வைப்பது - மடவார் வெள்ளத்துள்ளாள் அதற்கு ஏரோங்கு நன்மணம் அளித்துச் சிறப்பிப்பது போல இங்கே வந்து எனக்கும் வேதனை மாற்றி என்னைக் கூடியது என்ன மாயமோ? கனவு போலுள்ளதே! என வியந்தவாறு.

கண் படைபெருது கங்குனேதல்

29. சுருள்கொண் டமாலைத் துழாய்மால்
வராகர்தண் சோலைவெற்பிற்
பொருள்கொண் டபூண்முலை மேவிய
நாளவர் பூங்குழற்கு
வெருள்கொண் டகன்றது போய்ப்பிரிந்
தாரென்று வெவ்விடம்போ
லிருள்கொண் டதோகங்கு லெங்கொளித்
தாரென்று மிந்துவுமே.

கண்படை பெருது கங்குல்நோதல்:- தலைவன் தலைவி மேற்கொண்ட வேட்கையால் நித்திரையின்றி இரவில் வருந்தல். (-இது தெருளுற்றுரைத்தல்).

கங்குல் அவர் பூங்குழற்கு வெருள் கொண்டு போய் அகன்றது; (பின்னர்) பிரிந்தாரென்று விடம் போல் இருள் கொண்டது; என்றும் இந்துவும் எங்கு ஒளித்தார்? என்பது பொழிப்பு. என்று - சூரியன். இந்து - சந்திரன்.

சுருள் - வட்டம்: ''**சூழ்ந்த** துழாயலங்கல் சோதி மணி முடிமால்'' (மூன்றும் திரு: 50). பூண் முலை - ஆகுபெயர்: தலைவிக்கு வந்தது. ''பொருள் கொண்ட முலை'' என்றது - ''தனம்'' என்றொரு பெயர் படைத்திருத்தல் குறித்து. மேவிய நாள் - என்னைப் பொருந்திய அஞ்ஞான்று, அவரது கூந்தல் கருநிறத்திற்கு வெள்கி வெருண்டு கங்குல் போய் அகன்று விட்டது என்றதால் தலைவியின் கூந்தல் கருநிறத்தின் மிகுதி பெற வைக்கப்பட்டது. பின்பு, தலைவி பிரிந்து விட்டாள் என்று கண்டவுடனே அந்தக் கங்குலிருள் வெவ்விய விடம் வருத்தஞ் செய்தல் போல என்னை வருத்தத் திரண்டது என்று தலைவன் நித்திரை கொள்ளாமல் இரவு முற்றும் நொந்து கிடந்தான். பொழுது விடிய வில்லையே என்றும் வருந்தினன்.

இடந்தலைப்பாடு
தந்த தெய்வம் தருமெனச் சேறல்

30. சூட்டுந் துளவத் திருமால்
வராகர் சுரும்பிலின்பம்
பூட்டுங் களபப் புணர்முலை
யாளைப் புதுமலரோன்
றீட்டுந் தலையிற் பொறிபோன்முன்
னூட்டந்த தெய்வமின்னுங்
காட்டுந் தனிநெஞ் சமேயெழு
வாய்மலர்க் காவகத்தே.

இடந்தலைப்பாடு என்பது:- தலைவன் முன்னாட் கூடின இடத்திலே வந்து தலைவியை யெதிர்ப்படுதல் என்று பொருள் படும். இது இயற்கைப் புணர்ச்சிக்குப் பின் நிகழுங் கூட்ட மென்பது தொல்காப்பியனார் கொள்கை; இயற்கைப்புணர்ச்சி நிகழ்ந்து தலைவனும் தலைவியும் பிரிந்த பின்னர் ஆற்றாது வருந்தி நின்ற தலைவன் தலைவியை மறுநாளும் கூட எண்ணி ''விதியாலே அவளை யெய்தின நான் அவ்விதி தருமேல் இன்றுங் காண்பேன்'' என்று முன்னாளில் அவளைக் கண்ணுற்ற பொழிலிலே

புக்காளுக, தலைவியும் தன் ஆய வெள்ளத்தோடும் விளையாடி ஆங்கு வருகின்றவள் ஆயங்கள் முன்னுளிற் போலவே பிரிய நெருநலில் தலைவனை வழிபட்ட இடம் எதிர்ப்பட்டுத் தலைவனைக் கண்டாளே போலப் பரவசமாக நின்றுளாக, தலைவனும் தனியளாய் நின்ற தலைவியை எதிர்ப்பட்டுப் புணர்வனென்க. இதுவே இடந்தலைப்பாட்டுப் புணர்ச்சி யெனப்படும். இவ்விடந்தலைப்பாடு தலைவன் தானே சென்று கூடுவது.

தந்த தெய்வம் தருமெனச் சேறல்—

முன்னர்க் கூட்டி வைத்த விதியே பின்னுங் கூட்டி வைக்குமென்று போதல்.

சுரும்பு - மலை, புது மலரோன் - பிரமன், மலருக்குப் புதுமையாவது - திருமாலின் நாபியில் பூத்தமை, பொறி - விதி, தலையிற் பொறி - தலைவிதி. பிரமன் சீவகோடிகளின் தலையில் எழுதி விதி நிர்ணயிப்பவன் ஆதலின் அவனை 'விதி' என்றே பெயரிட்டழைப்பர். "நான்கு தலைமகனுர் வாளா தலைக்கு மேல் எழுதுகின்றுர்" என்றது அழகர் கலம்பகம் "அவன் கால் பட்டழிந்தது இங்கென் தலைமேல் அயன் கை யெழுத்தே" என்றது கந்தலரங்காரம். தெய்வம் - ஊழ்வினை, விதி. தனி நெஞ்சம் - என்னை விட்டுத் தனிப்பட்டு வருந்தும் நெஞ்சம். "அப்புள்ளின் பின் போன தனி நெஞ்சம்" என்றுர் **நம்மாழ்வார்** *(திருவிருத்தம் 3). 'எழுவாய்' என்றதால் நெஞ்சம் அழுங்கியமை பெற்றும்.*

பாங்கற் கூட்டம்
தலைவன் பாங்கனைச் சார்தல்

31. செங்கட் கருங்கொண்ட லெங்கோனெங்
கோனென்று சிந்தைசெய்வார்
தங்கட்கு முன்வந் தருள்மால்
வராகர் தடஞ்சிலம்பில்
அங்கட்கு முச்சுட ராதர
வாமது போலநெஞ்சே
நங்கட்கு முச்சுடர் நண்பனுண்
டேயுள்ள நள்ளிருட்கே.

பாங்கற் கூட்டம் :- *பாங்களுல் தலைவன் தலைவியைச் சென்றெய்துதல் என்பர் ஒருசாரார். மற்றொரு சாரார் தோழியிற் கூட்டம் போலப் பாங்கன் தலைவனுக்கு இடைநின்று*

உரையாடிக் கூட்டாமையின், அது பொருளன்று: இடந்தலைப் பாட்டிற்குப் பின்பு தலைவன் பாங்கனைக் கூடும் கூட்டம் என்பர்.

தலைவன் பாங்கனைச் சார்தல்:- தலைவன் வாயில் விரும்பிப் பாங்கனைக் கிட்டுதல். தலைவன் இவ்வேட்கை நோய் பாங்கனாலன்றித் தீராதென்றெண்ணிப் பாங்கனைச் சார்தல். செங்கண் கருங் கொண்டல் - ஆதிவராகர், கொண்டல் - மேகம். மேக நிற வண்ணர் வராகரை, எம்கோன் எம்கோன் என்று - எங்கள் தலைவராகிய முழுமுதற் கடவுள் என்று, சிந்தை செய்வார் தங்கட்கு - தியானிக்கும் பக்தர்களுக்கு, முன் வந்து அருள்வர் - தாம் முற்பட்டு வந்து அருள் செய்வர். மால் - திருமால்: பெருமை, சிலம்பில் – மலையிடத்து. அங்கண் + கு: அங்கட்கு: அங்கண் - பரந்த இடத்துக்கு [வெளிச்சம் கொடுப் பதற்கு] முச்சுடர் - சூரிய சந்திர அக்னியர், ஆதரவாமது போல - பாதுகாப்பாவது போல, நெஞ்சே! - நங்கட்கு - நமக்கு, [ஆதரவாக] உள்ளம் நள் இருட்கே - மனத்திலுள்ள செறிந்த வேட்கை நோயாகிய இருளைப் போக்குதற்கு, முச்சுடர் நண்பன் - மேற் குறித்த முச்சுடரும் ஒருசேர உதவுவதற்கு அமைந் தாற் போன்ற பாங்கன், உண்டே - இருக்கின்றானே! (அவனைச் சென்றெய்துவோம் என்றபடி). இதனால் துறை விளக்கம் தெளிவு.

செங்கட் கருங் கொண்டல் - உருவகம்: முரணழகு காண்க. எங்கோன் எங்கோன் என்ற அடுக்கு - பக்தி மிகுதி தெரிவிப்பது. முன் வந்தருள்மால் - திருமால் தாமே வலியச் சென்று மேல் விழுந்து பக்த சேதநனை ஏற்றுக் கொள்வன்; ஏனெனில், சேதநலாபம் ஈசுவரனுக்கேயாம். அங்ஙனம் ஏற்றுக்கொள்ளப் பட்டவர்கள் குகனும் அநுமனும் ஆவர்.

அங்கட்கு - அங்கண்மா ஞாலத்திற்கு: அங்கண் – இடம், இடத்திலுள்ளார்க்கு இடவாகுபெயரென்னவுமாம்: நான்கனுருபு பெற்றுவந்தது. புறவிருள் துரக்க முச்சுடர் ஆதர வாவது போல, அகவிருள் துரப்பதற்கும் முச்சுடராக உதவும் நண்பனை நாடியபடி. நண்பன் முச்சுடராக ஒருசேர உதவு வது - உள்ளம், உரை, செயல் மூன்றினாலும் ஒருசேரத் தலைவனது வேட்கை நோய் தணிக்க முயலுதல் பற்றி என்க. செங்கண் + கருங்: செங்கட்கருங் -''ணன வல்லினம் வரட்டறவும்'' - நன்னூல். சூ. 209. தங்கள் + கு:- தங்கட்கு -''லள வேற்றுமை யில் றடவும்'' - நன்னூல். சூ. 227.

உற்றது வினுதல்

32. சேர்க்குங் கலைமருங் கேறுமு
　　னேகல்விச் செல்வரெண்ணிப்
பார்க்குங் கலைகள் படித்தறிந்
　　தாய்முல்லைப் பாடியிற்பால்
வார்க்குங் கலசங் கவர்ந்தார்
　　வராகர் வரையிலின்னம்
பார்க்குங் கலைகளுண் டோமெலி
　　வேதுசொல் பார்மனனே!

[பாங்கன் தலைவனை] **உற்றது வினுதல்**:- பாங்கன் தலைவனது உள்ளமும் அங்கங்களும் மெலிந்து வாடிய வேறுபாடு கண்டு காரணம் வினுதல்.

சகலகலா வல்லவனுயிருந்தும் மெலிவது என்னே, சொல் என்று பாங்கன் வினுயினுன் என்பது துறை விளக்கம்.

சேர்க்கும் கலை - ஆடை. மருங்கு - இடுப்பு. ஏறும் முன்னே என்றதால், சிறு பிராயத்தில் செல்வன் ஆடை இடுப்பில் கட்டத்தெரிவதற்கு முன்னேயே, கல்விச் செல்வர் - வித்துவான்கள், எண்ணிப் பார்க்கும் கலைகள் - சிறப்பாக மதிக்கின்ற கலைஞானங்கள் அனைத்தும்; படித்து அறிந்தாய் - நீயே படித்தும் பெரியோர் பால் கேட்டும் முற்றும் அறிந்துள்ளாய், முல்லைப்பாடி - முல்லை நிலத்து ஆயர்பாடியில்; கோகுலத்தில்.

பாற்குடங்களைத் திருடினுர் கண்ணபிரானுய் அவதரித்த வராகர்; மேலும் பால் வார்க்கும் கலசம் - பூதனையின் முலையை அவள் உயிர் செகக் கவர்ந்து உண்டவர் என்பது த்வனி. இன்னம் நீ படித்தறிந்து பார்க்க வேண்டிய கலைகள் எதுவுமே இல்லை. அப்படிப் பேரறிவு படைத்துள்ள நீ உடலும் உள்ளமும் மெலிதற்கு யாது காரணம். பார் மனனே! சொல் என்று வினுயது. மனன்-மன்னன் என்பதன் தொகுத்தல். முதலடியில் உலக வழக்கு பயின்றது.

தலைவன் உற்றது உரைத்தல்

33. சையோக மோகாதி யையனை
　　யாளொரு தையனல்லாள்
ஐயோ கடிமலர்க் காவினின்
　　ருண்மக ராலயம்போல்

மெய்யோன் கரந்தையில் ஞானப்பி
ரான்வெற்பில் வேற்கடைக்கண்
மையோ குருங்குழ லோமையல்
பூட்டி வரவிடுமே.

தலைவன் உற்றது உரைத்தல்:- *தலைவன் தனக்குற்ற வேறுபாட்டின் காரணத்தைப் பாங்கனுக்குக் கூறுதல்.*

சையோகம் மோகம் ஆதியையனையாள் - கலவியின்பம், மோகம் முதலாயவை ஓர் வடிவெடுத்து வந்தாள் போல்வள்: தையல் - அழகு. தையல் நல்லாள் - அழகி. நின்றுள்: ஐயோ! - என்றது. அவள் அழகு இன்னபடித்தென விவரிக்க முடியாத வியப்புச்சொல். மகராலயம் - கடல். கடல் நிறவண்ணன் ஞானப்பிரான் - ஆதிவராகர். ஞானப்பிரான் - ஞானபூர்த்தியையுடையனுய் ஸ்வாமியான ஸ்ரீமந்நாராயணன். இதனை:-

''எறிதிரை வைய முற்றும் ஏனத்துருவாய் இடந்தபிரான்...... ஞானப்பிரானையல்லால் இல்லை நான் கண்ட நல்லதுவே'' (திரு விருத்தம் 99) என்ற **நம்மாழ்வார்** *வாக்குக் கொண்டும், ''ஞானத்தினுருவாகி நிலமங்கை யெழில் கொண்டான்........ ஞானத்திஞெளியுருவை நினைவார் என் நாயகரே''* **(பெரிய திருமொழி** *2-6-3) என்ற திருமங்கை மன்னன் வாக்குக் கொண்டும் தெளியலாம். மை மையல் பூட்டுவதை ''அஞ்சனமென வாளம்புகளிடையே நஞ்சினையிடுவார்'' என்று கம்பன் குறித் தலாலும் அறியலாம். குருங்குழல் - ''குருவும் கெழுவும் நிறனு கும்மே'' (தொல்காப்பியம்): கரிய நிறம் கெழுமிய கூந்தல் மையல் பூட்டுவதைக் - ''கொய்தாம வாசக்குழல் நிழற்கீழ் ஆறேனே வெய்தாமக் காமவிடாய்'' என்ற நளன் பேச்சினுலும் அறிக. மையல் - காமமோகம், தலைவியின் கரிய மைதீட்டிய கண்ணும் கரியகுழலும் தனக்குற்ற வேறுபாட்டினுக்குக் காரணம் காட்டினுன் தலைவன். ''கருங்குழலோ'' என்றும் பாடமிருக்கலாம்.*

கற்றறி பாங்கன் கழறல்

34\. சொற்பா வலன்பின் பணிப்பாய்
சுருட்டிச் சுமந்துசென்ற
கற்பா வலனெங் களாதி
வராகர் கரந்தைநகர்

வெற்பா வலனென் றுனைத்துதித்
தோமொரு மின்னனையாள்
பொற்பா வலனென்ப தோவினி
மேலென் புரவலனே.

கற்றறி பாங்கன் கழறல்:- பாங்கன் தலைவனைக் கண்டித்துக் கூறல். (கண்டித்துக்கூறல் - உறுதிச்சொல் கூறல்).

சொற்பாவலன் - **திருமழிசையாழ்வார்**, பணிப்பாய் - ஆதிசேடனாகிய பாம்புப்படுக்கை. ''கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி மணிவண்ணா நீ கிடக்க வேண்டா - துணிவுடைய செந்நாப்புலவனும் போகின்றேன் நீயுமுன்றன் பைந்நாகப் பாய் சுருட்டிக்கொள்'' என்று ஆழ்வார் பாட, அவர் கூறியபடி திருவெஃகா எம்பெருமான் பணிப்பாயைச் சுருட்டித் தலையில் சுமந்து எருத்தலைப்பச் சென்ற வரலாறு உட்கொண்டது இங்கு. கல் பாவலன் - அர்ச்சையிலேயே பாட்டறிதலில் வல்லவன். ஆதிவராகரும் சொன்ன வண்ணஞ் செய்த பெருமாளும் ஒருவரே. வெற்பா! - தலைவனை நோக்கிய விளி. வலன் என்று - எல்லாவற்றிலும் வல்லவன் என்று, சகலத்திலும் வல்லமை பெற்றவன் என்று, உனைத்துதித்தோம். துதித்தல் - கொண்டாடுதல். அங்ஙனிருப்ப, இனிமேல் - என் புரவலனே - என் தலைவனே! ஒரு மின் அனையாள் பொற்பு - மின்னல் போல் பிரகாசிக்கின்ற ஒரு தலைவியின் பொலிவழகு ஆ! வலன் என்பதோ! - ஹா! ஹா! என்ன வல்லமையுடையது! எனத் துதிப்பதோ. வலம் - வலன், மகர னகரம் மாறி வருஞ்சொல். இனி ஆவலன் என்றே எடுத்து ''ஆவலம்'' - செருக்குமிக்கது என்பதோ! எனினுமாம்.

தம்மிற்றாமே யொத்த தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் எதிர்ப்படுவர் என்பது மரபு. அங்கேயும் ''இறையோனுயரினுங் குறைவின்றென்மனார்' என்பது விதி. அதற்கு மாறாக இனிமேல் இங்குத் தலைவியின் பொற்பு விஞ்சிநிற்பதோ'' எனப் பாங்கன் கழறியவாறு.

கழற்றெதிர் மறுத்தல்

35. சோலை மலைச்செம்மல் வேங்கட
மாமலைத் தோன்றலிலை
மாலை மலையும் வராகப்
பிரான்றென் மலையனையார்

வேலை மலையும் விழிவலைக்
கேபட்டு மீண்டவராார்
ஆலை மலையை யலரையுற்
றுரை யறிந்துரையே.

கழற்றெதிர் மறுத்தல்:- தலைவன் பாங்கன் கண்டித்ததை மறுத்துக் கூறுதல்.

சோலை மலைச் செம்மல் - திருமாலிருஞ்சோலைமலை அழகர்; வேங்கடமாமலைத் தோன்றல் - திருவேங்கடமுடையான்; ஸ்ரீநிவாசர், இலைமாலை - பச்சைத்தழை மாலையை, மலையும் - சூடும், வராகப்பிரான் இவர்கள் மூவரும் ஒருவரே. வராகப்பிரான் தான் செம்மலாகவும் தோன்றலாகவும் காட்சியளிப்பவர். அப்படிப்பட்ட வராகர் எழுந்தருளியிருக்கும் தென்மலை - அழகிய மலையை, அனையார் - ஒத்த என் தலைவியின், வேலை மலையும் விழிவலைக்கே - வேலாயுதத்தோடு மாறுபடும் கூரிய விழிகளாகிய வலையிலே, பட்டு - அகப்பட்டு (த்தப்பி), மீண்டவர்ஆர் - மீண்டவர் எவருமிலர்: [எப்படி என்று பாங்கன் கேட்கத் தலைவன்], ''ஆலை மலையை அலரை உற்றுரை அறிந்து உரை'' என்றான். அதாவது திரிமூர்த்திகளைப் பார்த்து அறிந்து அவர்கள் செயல் கண்டபின் உரை செய்வாய் என்றான். அவர்கள் செயல் முறையே விட்டுணு ஆலிலையில் சேர்ந்ததும், சிவபிரான் வெள்ளி மலையில் சேர்ந்ததும், பிரமன் தாமரை மலரிற் சேர்ந்ததும் ஆகும். இங்ஙனம் மும்மூர்த்திகளும் தத்தம் இருப்பிடத்திற்கு விரைந்து உற்றதற்குக் காரணம் இவள் விழிவலைக்குட்பட்டால் மீளமுடியாதே என்ற கருத்துப் பற்றி: மும்மூர்த்திகளின் கதியே இதுவாயின் 'என்னைக் கழறலென்' என்று கிழவோன் கழற்றெதிர் மறுத்தபடி. ஆகவே நீயும் அவளைக் காணாத தன்மையால் இவ்வாறு கூறினாய் என்று கூறியவாறும் குறிப்பிற் பெறவைக்கப் பட்டது].

செம்மல், தோன்றல் - ஆண்பாற்சிறப்புப் பெயர்கள். (பி - ம்) தோன்றல்குலை.

இரவுக் குறியிடையீடு

தலைவன் வருந்தொழிற் கருமை சாற்றல்

36. ஞமலி குரைக்குமென் றுயுறங்
காளிந் நகர்முழங்கும்
விமல நிலாவுக்கு மூர்காவ
லர்க்கும் விளக்கமுண்டு

கமல விலோசன ராதி
வராகர் கரந்தையன்னீர்
அமர்செயுஞ் சேவற் குடினைஞெயென்
ஞமிங் கவர்வரவே.

இரவுக் குறியிடையீடு:- அஃதாவது இரவுக்குறிக்கண் வந்த தலைவன் (1) அல்லகுறிப்படுதலாலும் (2) வருந்தொழிற் கருமையாதலாலும் இடையீடு பட்டுப்போதல். இவற்றுள், (1) **அல்ல குறியாவது** - தலைவனால் நிகழ்த்தப்படுவனவாகிய புள்ளெழுப்பல் முதலியன பிறிதொன்றினான் நிகழ்தல்.

(2) **வருந்தொழிற் கருமையாவது** - தலைவன் இரவுக் குறியிடத்துக்கு வர முடியாதபடி அதற்கு இடையூறாக நிகழும் நிகழ்ச்சிகளாம்.

[அல்லகுறியில் தலைவனும் தலைவியும் தாம் குறியிடத்து வந்து நின்றும் தம்முட் சந்தியாமற் போவர் எனவும், வருந் தொழிற்கருமையில் குறியிடத்து அத்தலைவனது வருகையே நிகழாது எனவும் பேதங்காண்க.]

இச்செய்யுளில் தலைவன் வரமுடியாதபடி நிகழும் நிகழ்ச்சிகள் ஏழும் கூறப்பட்டுள்ளன. ஞமலி - நாய். என் தாய் உறங்காள் - தூங்காது விழித்துக் கொண்டுள்ளாள். இந்நகர் முழங்கும் - பெருவிழாக் கொண்டாடுதலால் இந்த ஊரார் தூங்காது ஒலியெழுப்புகின்றனர். விமல - மாசு மறு வற்ற, நிலாவுக்கு -, விளக்கம் உண்டு - பிரகாச முண்டு; (அதனோடு) ஊர் காவலர்க்கும் - நகர் காப்போர்க்கும், விளக்கம் உண்டு - கையில் வெளிச்சத்தின் பொருட்டு விளக்கு உண்டு. (மேலும்) சேவல் குடினை - கோழியும் கூகையும், அமர் செய்யும் - தம்முள் மாறுபட்டுப் போரிடும். [ஆகவே, இத்தனை இடையூறுகளிருப்பதால்] இங்கு அவர் வரவு என் ஆம் - இந்த இரவுக் குறியிடத்து அவர் வருதல் எப்படி முடியும்? எனத் தலைவனின் வருந்தொழிற்கருமை சாற்றியவாறு காண்க. சாற்றியவள் தோழி. தலைவியைக் ''கரந்தை யன்னீர்'' என்று விளித்தலால் இஃது பெறப்பட்டது. (முன்னர் செய்யுள் 6 - உம் காண்க). எனவே என் தாய் என்றது - செவிலித் தாயைக் காட்டும். நற்றாயுமாம்.

கமல விலோசனர் - தாமரைக் கண்ணன்; புண்டரீகாக்ஷன்.

நாய் துஞ்சாமை, தாய் துஞ்சாமை, ஊர் துஞ்சாமை, நிலவு வெளிப்படுதல், காவலர் கடுகுதல், கோழி குரல் காட்டு தல், கூகை குழறுதல் என்ற ஏழு நிகழ்ச்சிகளும் ஈண்டு ஒரு சேரக் கூறப்பட்ட நயம் போற்றத்தக்கது.

தாய் துஞ்சாமை:- தலைவன் இரவுக்குறி வந்து ஒழுகா நின்ற காலத்து ஒரு நாள் தாய் நித்திரை கொள்ளாதவ ளாகி, மகளை அறிவும் ஆசாரமும் கற்பித்தற்பொருட்டாக இருக்கும்; இருந்தகாலத்து அது கூட்டத்திற்கு இடையீடா மென்பது.

நாய் துஞ்சாமை:- ஆள் நடமாட்டம் கண்டால் இரவில் குரைப்பது இயல்பு.

ஊர் துஞ்சாமை:- நாய் துஞ்சினும் ஊரிலுள்ளார் துஞ்சாதிருத்தல். ஊர் - இடவாகுபெயர். ஊரார் கொண்ட பெருவிழா நாளாகித் துயிலாராதல். அந்நாளில் தலைவன் குறியிடஞ் செல்லலுறின் களவு வெளிப்படுமாதலிற் செல்லானும். ஆகவே அதுவும் தடையா மென்பது.

காவலர் கடுகுதல்:- நகர் காப்போர் துடியடித்துக் கொண்டு ஊர் சுற்றிக் கடுகிவருதல். நகர்காவலர் ஊரிடங் களின் பகுதிகளைக் காத்தற் பொருட்டு விளக்கினோடு இரவிற் செல்பவராய் அச்சேரிப்பக்கலில் உலாவி வருதல்.

நிலவு வெளிப்படுதல்:- இஃது 16 நாழிகைக்கு மேல் (12.24 a.m.) அதாவது நள்ளிரவுக்குச் சேரக் கூறப்படுவது ஓர் மரபு.

கூகை குழறுதல்:- கோட்டான் குழறலைக் கேட்ட தலைவி அஞ்சுதலால் ஏற்பட்ட இடையீடு.

கோழி குரல் காட்டுதல்:- கோழி கூவி ஊரை யெழுப்பு தலால் ஏற்பட்ட இடையீடு. [இரவுக்குறியிடையீட்டில் வருந்தொழிற் கருமை ஏழினுக்கும் ஒவ்வொன்றும் நந்நான்கு நாழிகையாகக் கொள்வது என்பதும் உண்டு]

பாங்கன் தலைவனைத் தேற்றல்

37. ஞாலத்தை வாழ்வித்த ஞானப்பி
ரான்சந்த ஞசலத்தின்
நீலத்தை நேரும் நெடுங்கா
வியங்க ணிரைவளையார்

கோலத்தை நான்சென்று கண்டுவல்
லேவந்து கூறுமட்டுஞ்
சீலத்தை யாய்ந்த திறலாய்
திருவுளந் தேறிநில்லே.

பாங்கன் தலைவனைத் தேற்றல்:- பாங்கன் குறை முடிப்பல் என்று தலைவனைத் தெளிவித்தல்.

ஞாலத்தை வாழ்வித்த ஞானப் பிரான் - பூமியைப் பாயாகச் சுருட்டி யெடுத்துப் போன இரணியாக்கனைக் கொன்று பூமியைக் கொணர்ந்து பழைய படியே விரித்தருளியும், பூமிக்கு நேர்ந்த பிரளயாபத்தைப் போக்கியருளியும் வாழ்வித்தவன் ஆதிவராகன். ''பாசிதூர்த்துக் கிடந்த பார் மகட்கு'' என்றபடி அண்ட பித்தியில் ஒட்டிக் கொள்ளுதலால் நிலைமை மாறி அழகு அழிந்திருந்த பூமிப் பிராட்டியின் அழகை மறுபடியும் பழைய படியே நிலைநிறுத்தினன். ''ஏனத்தினுரு வாகி நிலமங்கை யெழில் கொண்டான் ஞானத்தினொளியுரு'' என்றும், ''திருவுருவம் பன்றியாகி, இலங்கு புவிமடந்தைதனை யிடந்து புல்கி எயிற்றிடை வைத்தருளிய எம்மீசன்'' என்றும் **திருமங்கையாழ்வார்** கூறியன அறிக. ஸ்ரீ வராகப்பெருமானுக்கு ஞானப்பிரான் என்று திருநாமம் வழங்குதல் ஸம்ப்ரதாயம்.

சந்தன + அசலம் = சந்தநசலம். தீர்க்க சந்தி பெற்ற வடமொழித் தொடர். சந்தன மரங்கள் அடர்ந்த மலை. நீலத்தை - நீலநிறப்பூவை, நேரும் - ஒத்திருக்கின்ற, நெடுங்காவி அம் கண் - நீண்ட குவளைப்பூப் போன்ற அழகிய கண்ணையுடைய, நிரை வளையார் - வரிசையாகக் கையில் வளையல்களையணிந்துள்ள தலைவியின், கோலத்தை - உடலினழகினை, வல்லே - விரைவாக; குறிப்பிடைச்சொல். 'கண்டு வந்து கூறு மட்டும் உளந்தேறி நில்லே' என்றதால் தேற்றிய படி; துறை விளக்கம் செய்தவாறு. 'திருவுளம்' என்றது 'வழிநிலை பிழையாது' என்றதற் கேற்ப. சீலத்தை ஆய்ந்த திறலாய்! - விளி **கருத்துடை யடைகொளி**. சீலம் - நற்குணங்கள். நற்குணங்கள் இன்னவை என ஆய்ந்தறிந்துள்ள நீ இங்ஙனம் உளந்தேறா திருத்தல் நன்றன்று என்ற கருத்தினது.

பாங்கி மதியுடம்பாடு

"பாங்கி மதியுடம்பாடு — தலைவி வேறுபாட்டைக் கண்டு புணர்ச்சியுண்மை யறிந்து ஆராய்ந்து பாங்கி தன் மதியை யுடன்படுத்தல்"

தோற்றங் கண்டு ஐயுறல்

38. ஞெண்டா ரலவன் பயில்வேறு
கண்டுதெண் ணீர்க்கமல
வண்டா ரிசைக்குங் கரந்தை
வராகன் வரையிவர்க்குத்
தண்டா ரளகமுந் தானையுங்
கொங்கைத் தடமுவெவ்வே
றுண்டா கியகுறி கண்டே
வெருண்டதென் னுள்ளமின்றே.

தோற்றங் கண்டு ஐயுறல் :- தோற்றமாவது - கூட்டத்தாற் பிறந்ததோரழகு; - தந்நிலை திரிந்து வேறுபட்டுக்காட்டும் தோள், முலை, கண் முதலிய உறுப்புக்களின் பொலிவு. (இது முன்னுறவுணர்தலின் பாற்படும்). தலைவியினிடத்து இந்த வேறுபாட்டைக் கண்டு பாங்கி ஐயுறல்.

ஞெண்டு - நண்டு. இங்கு இது பெண் நண்டைக் காட்டுவது, மேல் "அலவன்' என ஆண் நண்டைக் குறித்திருத்தலின். பெண் நண்டு 'நள்ளி' எனப் படுவதையும், ஆண் 'அலவன்' எனப்படுதலையும் "பள்ளிக் கமலத்திடைப்பட்ட பகுவாய் அலவன் முகநோக்கி, நள்ளியூடும் வயல் சூழ்ந்த நறையூர் நின்ற நம்பியே"(பெரியதிரு: 6-7-6) என்ற திருமங்கை மன்னன் வாக்கினலறியலாம்.

அலவன் பயின்றதால் (புணர்ந்ததால்) ஞெண்டினிடத்து ஏற்பட்ட, வேறு கண்டு - வேறுபாட்டினைக் கண்டு, தெள் நீர் கமலம் வண்டு - தெளிந்த நீரிற் பூத்த தாமரையில் தேனுண்ண வந்த வண்டானது, இசைக்கும் - (யாவரும் அறிய) அலர் தூற்றும், கரந்தை வராகன் வரை - வரைப்பில், வரையிடத்து; இவர்க்கு - இத்தலைவிக்கு, தண் தார் அளகமும் - குளிர்ந்த மாலையைச் சூடியுள்ள கூந்தலும், தானையும் - ஆடையும், கொங்கைத் தடமும் - முலைத் தடங்களும், வெவ்வேறு

உண்டாகிய குறி கண்டே - தனித்தனியே ஒவ்வொன்றுக்கும் ஏற்பட்ட வேறுபாட்டுக் குறிகளைக் கண்டு, என் உள்ளம் - என் மனது, இன்றே - இப்போதே, வெருண்டது - கிலேச மடைந்தது.

வேறு - வேறுபாடு. பாங்கியுள்ளம் வெருண்டதற்குக் காரணம் - குறி வேறுபாடுகளைக் கண்டு நற்றாய் செவிலி வினவில் என் செய்வது என்ற கவலையால். ஞெண்டார், வண்டார் - மென்றொடர்க் குற்றியலுகரங்கள் 'அர்' போலி பெற்று வந்து நீண்டன. ஞெண்டு - நண்டு என்பதன் போலி.

பிறை தொழுகென்றல்

39. ஞொள்காத கேள்வியர் கேண்மையு
மிங்கித நோன்மையுநேர்
வெள்காது யாரும் விரும்பு
வராற்கரு மேகபந்தித்
தெள்கா மணக்குங் கரந்தை
வராகர் சிலம்புமின்னே
எள்காது நாமுந் தொழவே
தகுமிவ் விளம்பிறையே.

பிறை தொழுகென்றல்:- தலைவியை நோக்கிப் பாங்கி வழக்கம் போல் இந்தப் பிறைச் சந்திரனைத் தொழுக என்று கூறல்; அது கேட்ட தலைவி, பின்னர், மேற்கொள்ளும் ஒழுக்கம் நோக்கி பாங்கிக்கு ஐயந்தீர்தல் நிகழும். [அதாவது களவுப் புணர்ச்சி நிகழ்த்திய தலைவனை யன்றிப் பிறிது ஒன்றையும் தெய்வமெனத்தொழாதவளாகையால் சந்திரனைத் தொழாமல் போகவே ஐயந்தீர்வள் என்றபடி.]

ஞொள்காத - சுருங்காத. ஞொள்குதல் - சுருங்குதல், மெலிதல், குறைவு படுதல். கேள்வியர் - அறிவு படைத்தவர். (அன்னாருடைய) கேண்மையும் - நட்பையும், இங்கிதம் சமயோசித ஒழுக்கத்தையும், நோன்மையும் - பொறுக்கும் வலிமையையும். நேர் வெள்காது-நேரே கூச்சப்படாமல், யாரும் விரும்புவர் - எல்லோரும் மகிழ்ச்சியோடு வரவேற்பர் [அது போல], மின்னே! — மின்னலைப் போல் பிரகாசிக்கின்ற தலைவியே! இந்த இளம் பிறையும் நாமும் எள்காது [இகழ்ந்து வெறுக்காமல்] தொழவே தகும் என்றாள் பாங்கி.

இளம்பிறை சிவபிரானுர் கேண்மையினைப் பெற்று, இங்கித மறிந்து சரண் புகுந்து, தனக்கு நேர்ந்த (க்ஷயரோக) சாபத்தைப் பொறுக்கும் வலிமை பெற்றுத் திகழ்ந்ததால் அந்தப் பிறையும் வெள்காது யாவராலும் விரும்பித் தொழத்தகுவதாயிற்று என்பது ஈண்டு அறிய வேண்டுவது.

கருமேக பந்தி - கரிய மேக வரிசைகள். தெள் - தெளிந்த, கா - சோலையிடத்து, மணக்கும் - சேரும், கரந்தை வராகர் சிலம்பிடத்து மின்னே என இயையும். சிலம்பு - மலை; இதன்பின் ஏழனுருபு தொக்கது. எள்குதல் - இகழ்தல். விரும்புவரால்- ஆல் அசை. தெள் கா - காவுக்குத் தெளிவாவது பல்வகை மரங்கள் அடர்ந்திருப்பினும் ஒழுங்கு காணப்படுதல். தெள்குதல் - தேங்குதலுமாம். திரை நீர்த்தெள்கி (**திவ்**: பெரிய திருமொழி 3,4,7).

சுனை வியந்துரைத்தல்

40. தடந்தா மரைபல காரொன்று
பூத்துச் சமுத்திரத்தே
கிடந்தா லனையவ ராதி
வராகர் கிரியுவந்த
மடந்தாய் பயோதரங் கண்வாய்
குழைதிரு வாணிநிற
நடந்தா டினுர்க்குத் தருமோதெய்
வீக நறுஞ்சுனையே.

சுனை வியந்துரைத்தல்:- இவ்வேறுபாடு தருஞ்சுனையை யானும் ஆடிக் காண்பேன் எனப்பாங்கி கூறல் [அதாவது, அச்சுனை வியப்பை யானும் ஆடிக் காண்பேன் என்று கூறல்]. [சுனையாடுதல், நீராடுதல் என்பன - மறைமுகமாகப் புணர்ச்சியைக் குறிக்கும் குறிப்பு மொழிகளாகும்.]

காரொன்று (ஒரு மேகமானது) தடந் தாமரை பல பூத்துச் சமுத்திரத்தே (திருப்பாற் கடலிலே), 'கிடந்தாலனைய - படுத்துக் கிடந்தது போல்பவர் ஆதிவராகர் என்று அவர் திருமேனி சௌந்தரியம் வர்ணித்த படி. ''கரு முகில் தாமரைக்காடு பூத்து'', ''கார்க் கடல் கமலம் பூத்தது'' என்ருர் கம்பரும். ஈண்டு, ''கண் கை கால் தூய செய்ய மலர்

களாச் சோதிச் செவ்வாய் முகிழதா......தாமரை நீள் வாசத் தடம் போல் வருவானே'', (8-5-1) "மணித்தடம் தாமரைக் காடுகள் போல் திருமார்வு வாய் கண் கை உந்தி காலுடை யாடைகள் செய்ய பிரான் திருமால்'' (8-9-1) என்ற நம்மாழ்வார் ஸ்ரீ ஸூக்திகளும் ஒருசார் ஒப்பு.

உவந்த - மகிழ்ச்சியோடு வந்தடைந்த, மடந்தாய்! - தலைவியை நோக்கிய விளி!. தெய்வீக நறுஞ்சுனையே ஆடினார்க்கு நிறம் தருமோ என முடிபு காண்க. எந்த நிறங்களைத் தருமோ எவற்றிற்குத் தருமோ என்ற வினாக்களுக்கு விடையிறுப்பது போல, ''குழை திரு வாணி நிறங்களை முறையே பயோதரம், கண், வாய், இவற்றிற்குத் தரும்'' என்றாள். சுனைநீரில் துளைந்து நீராடினால், வாய் வெளுக்கும்; கண் சிவக்கும்; முலை குழைந்து பசந்து காட்டும். வாணி - சரசுவதி; அவள் நிறம் வெண்மை. திரு - இலக்குமி - அவள் நிறம் - சிவப்பு, செம்மை. குழை - காதணி. அது ஆகுபெயராய் அதனையணிந்த பார்வதிக்கு வந்தது. அவள் நிறம் பச்சை. ''பச்சைக் கொடிவிடையான் ஒரு பாகந் திறை கொண்டாள்'' என்றார் வில்லியும். [இனி ''உமை'' என்றும் பாடமிருக்கலாம்.] நடந்து - இடைப் பிறவரல். மூன்றாம் அடியில் நிரணிறைப்பொருள்கோள். (பி - ம்) கிரியில் வந்த.

நாண நாட்டம்

41. தாருங் குழலுஞ் சரிமே
கலையுமுத் தாவலியும்
வாருந் தனமுந் திலகமுஞ்
சாந்தமு மாயனெங்கோன்
சேருங் கரந்தையன் வீர்நனை
யாமற் றிரும்பிவந்தீர்
ஆரும் பெறலரி தாஞ்சுனை
யாட லதிசயமே.

நாண நாட்டம்:- தலைமகள் நாணமடைவதைக் கண்டு உண்மை ஆராய்தல். [நாட்டம் - நாடுதல்; ஆராய்தல்.]

தலைவியை நோக்கிப் பாங்கி ''தார் குழல் முதலியன நனையாமல் சுனையாடித் திரும்பி வந்தீர்; அதிசயமே'' எனக் கூறி, அவள் நாணுவது கொண்டு நாடியது எனத்துறை விளக்கம். முன்னரே குறித்தபடி, ''சுனையாடல்'' என்பது

கூட்டம், புணர்ச்சி [சம்ச்லேஷம்] இதனைக் குறிக்குமோர் கவர் மொழியாகும்.

மாயன் - அகடிதகடநா சாமர்த்திய முடையவன்; அதாவது, கூடாததையும் கூட்டுவிக்குந்திறமுடையவன்; எனவே, திருமாலை மாயன் என்றது. கரந்தை யன்னீர் - தலைவியை நோக்கிய விளி.

தார் - மாலை, குழல் - கூந்தல், சரி மேகலை - சரிந்து விழும் இடையணி. முத்தாவலி - முத்துச்சரம். வார் - கச்சு. தனம் - கொங்கை. திலகம் - நெற்றிப்பொட்டு. சாந்தம் - (பூசியுள்ள) சந்தனம். இவை நனையாமல் சுனையாடித் திரும்பி வந்தது அதிசயமே; இது ஆரும் பெறலரிது. இதனைக் கேட்ட தலைவி, தான் தலைவனோடு கூடியதைப் பாங்கியுணர்ந்தனளோ என நாணங் கொண்டு நிற்பளாதலின், அந்த நாணம் நாடிப் பாங்கி மதியுடம்படுதல்.

யாரேயிவர் மனத்தெண்ணம் யாதெனத் தேர்தல்

42. திருவாளன் செல்வக் கரந்தை
வராகன் சிலம்பனையீர்
வருவா ரொருவர் வழிகேட்பர்
மீள்வர் வயக்களிறு
பொருவாளி கொண்டிங்கு வந்ததுண்
டோகலை போனதுண்டோ
வொருவார்த்தை சொல்லுமென் பாரென்கொ
லோவிவ ருட்கருத்தே.

யாரே இவர், மனத்தெண்ணம் யாது எனத் தேர்தல்:- தோழி தலைவனை இவர் யார், இவர் எண்ணம் யாது என்று மனத்தினுலாராய்தல்.

திருவாளன் - இலக்குமி நாயகன். வராகன் சிலம்பனையீர்- பாட்டுடைத்தலைவன் மலையொடிணைத்துத் தலைவியைக் கொண்டாடியபடி. ஒருவர் வருவார் - நாம் காக்கும் தினைப்புனம் பக்கம் வருவார்; வழி கேட்பர் - ''புதியேன் நான் மிக இப்புனத்திற்கு; செல்லும் வழி சொல்வீர்'' எனக் கேட்பர். மீள்வர் - போவது போல் சிறிது தூரம் போய்த் திரும்பி வருவர்; வந்து, வலி மிக்க ஆண் யானை உடம்பில் அம்பு தைத்திருப்ப இந்தப் பக்கம் வந்த துண்டோ? என வினவுவர்.

வயக் களிறு - உரிச்சொற்ருெடர். 'வயவலியாகும்', மேலும், கலை - கலைமானென்று, போனதுண்டோ - இந்தத் தினைப் புனம் பக்கமாய்ப் போனதுண்டோ? - ஒரு வார்த்தை சொல்லும் - பேசாமல் மௌனமாய் இருக்கிறீர்களே! ஒரு வார்த்தை யாவது பேசுங்கள், என்பார் - என்று வழி வினுதல், கெடுதி வினுதல், மொழியாமை வினுதல் செய்து போருவர். இவர் உட்கருத்து என்சொல் - இவர் மனத்தினெண்ணம் யாதோ?

''ஊர் பெயர் கெடுதியோடு ஒழிந்தவும் வினுவழி யாரே இவர் மனத்தெண்ணமியாதெனத் தேர்தல்'', பாங்கிக்கு நிகழும். இவை யனைத்தும் பாங்கி மதியுடம்பாட்டில் குறையுறவுணர்தலின் பாகுபாடாகும்.

வறுங்கள நாடி மறுகல்

43. நீட்டும் பகழிச் சிலைவேடர்
தங்க டினைப்புனத்தில்
நாட்டும் பரணிலெந் நாள்வரு
மோவென்று நன்னெறியே
காட்டுங் கருணைப் பெருமாள்
வராகர் கரந்தைவெற்பிற்
கோட்டுஞ் சிறையளி காள்! குன்ற
வாணர் குலமணியே.

(தலைவன்) வறுங்கள நாடி மறுகல்:- தலைவி நீங்கிய தினைப்புனத்திலே தலைவன் அவளைத் தேடி வருந்தல்; அல்லது தலைவி யில்லாத தினைப்புனத்தை நோக்கி வருந்தல்.

தலைவன் இங்கு வண்டுகளை முன்னிலைப் படுத்திச் ''சிறையளிகாள்! குன்ற வாணர் குலமணி வேடர் தினைப் புனத்தில் நாட்டும் பரணில் எந்நாள் வருமோ? என்று வினவியதால் வறுங்கள நாடி மறுகினுன் என்ற துறை விளக்கம் பெறப்படும்.

வென்று - துரியோதனுதியர் போன்ற துஷ்டர்களாகிய பகைவர்களை வென்று, நன்னெறியே காட்டும் - கீதோபதேசம் போன்றவற்ருல் நல்ல மார்க்கங்களையே காட்டுகின்ற, கருணைப் பெருமாள் வராகர். கோட்டும் - கூட்டமாகச் சஞ்சரிக்கும். சிறை - சிறகு, அளி - வண்டு. 'சிறையளி' என்றது - எங்கும் பறந்து செல்லும் உங்கட்குத் தெரிந்திருக்குமே குலமணி வரும் நாள் என்பது **பாவம்**. வாணர் - வாழ்நர் என்பதன் மரூஉ.

பகழி - அம்பு. தீட்டுதல் - கொடுந்தொழிற்குச் சித்தரா யிருப்பவர். சிலை - வில். பரண் நாட்டுவது - தினைப்புனங் கவர வரும் புள்ளினங்களை யோப்புவதற்கு மேலேறிக் கவண் எறிதற்கு. இதனை ''ஆயாலோட்டுதல்'' என்பர். (பி-ம்) குலவல்லியே.

தலைவியை யுயர்த்தல்

44. துன்னார் குறும்பு துளைத்தான்
வராகன் றுவரையிடை
மின்னாரை மேவின னன்றியும்
மீசன் வியன்கடல்வா
யன்னாட் பரத்தியைக் கொண்டா
னதன்றி யவன்மகனு
முன்னாட் குறத்தியை வேட்டா
னமக்கென்ன மோசமின்றே.

தலைவியை யுயர்த்தல்:- தலைவன் தான் விரும்பிய தலைவியை யுயர்த்திக் கூறல். [பாங்கியைப் பார்த்துக் கூறுவன் என்க].

துன்னார் - பகைவர். குறும்பு - குற்றரண்கள். துளைத்தல் - அழித்தல். துவரை - துவாரகை. கண்ணபிரானின் இராசதானி யான ஊர். (அங்கு) இடை மின்னாரை இடைச்சியராகிய மகளிரை; மின்னல் போன்ற இடையை யுடைய யாதவ மகளிரை எனினுமாம். மேவினன் - மணந்தான். துவரை - யாதவர்களின் இருப்பிடம். [யாதவர் - இடையர். கண்ணன் யாதவன்]. ஈசன் - சிவபிரான். வியன் கடல் வாய் - பரந்த கடலிடத்து, அந்நாள் - வலை வீசி மீன் பிடிக்க வலைஞனாக வந்த அக்காலத்து, பரத்தியை - [ஆங்கு வசித்து வந்த வலைஞனொருவனின் பெண்ணாகிய] வலைச்சியை, கொண்டான் - மனைவியாகக் கொண்டான். அம்பிகை ஒரு வலைஞன் திருமகளாக வளர்ந்து வந்தமையின் அவளை மணஞ் செய்து கொள்ளச் சிவபெருமான் வலைஞராயினார். இவ்வரலாறு திருவிளையாடற் புராணத்து வலை வீசின படலத்தால் அறியலாம். அதன்றி - அதனோடு நில்லாமல், அவன் மகனும் - முருகனும், முன்னாள் - சூரசம்ஹாரம் செய்து தணிந்திருந்த முன்னைய நாளிலே, குறத்தியை - குற மாதாகிய வள்ளியை, வேட்டான் - விரும்பினான்; இங்ஙனம் கண்ணபிரான், சிவபிரான், முருகன்

போன்றவர்களே இடைச்சியரையும், வலைச்சியரையும், குறத்தியரையும் சேர்ந்த குலப் பெண்களை மேவி யிருப்ப, என் தலைவி அவர்களினும் உயர்ந்தவளே; அவள் குன்றவாணர் குலமணியன்றே! ஆதலின், நமக்கு இன்று ஒரு மோசமும் (இழுக்கும்) வந்ததில்லை. அவளையடையப் பெறின் என்று தலைவன் பாங்கியை நோக்கிக் கூறியபடி. நமக்கு என்றது - பாங்கியையும் உளப்படுத்தியபடி. வியன் கடல் - உரிச்சொற்றொடர். நமக்கு என்ன மோசம் - உலக வழக்கு.

குலமுறை கிளத்தல்

45\. தூயோர் குலத்துக் கிசையுங்கொல்
லோபொன்னிற் றுன்றுகுன்றிக்
காயோ பதிப்பது காவல
னேதென் கரந்தைநகர்
மாயோன் வரையின் மடமங்கை
யோவரை வாணர்மங்கை
நீயோ நரபதி நானோ
வுனக்கு நிகழ்த்துவதே.

(பாங்கி) குலமுறை கிளத்தல்:- பாங்கி தலைவனுக்குத் தலைவியின் குல முறை கூறி, நின் கருத்து இயையா தென்றல்.

காவலனே! - தலைவனை நோக்கிய விளி; அவன் பெருமை தோற்ற விளித்தமை காண்க. மாயோன் - வராகன். மட மங்கையோ - தலைவியோ, வரை வாணர் மங்கை - குன்றில் வசிக்கும் குறவர் பெண். நீயோ -, நரபதி - மனித்தரிற் சிரேட்டன். நரர்க்கு அதிபதி, அரசனுவாய்: எனவே தூயோர் குலத்துக்கு இசையுங் கொல் - பரிசுத்தமான மேலான நின் குலத்துக்கு இஃது பொருந்துவதோ? (பொருத்த மின்று). எங்ஙன் என்னில், பொன்னில் - பொன்னின் மேல், துன்று - நெருங்கிய, குன்றிக்காயோ பதிப்பது - குன்றி மணிகளையா பதிக்க வைப்பது? விலையுயர்ந்த பொன்னின்மேல் நல்ல ஒளி வீசும் மணியை யன்றி, ஒளியற்ற குன்றி மணிகளை (குருவிந்தக்கல் போல் ஒளி குன்றியவற்றை)ப் பதித்து நகை .செய்பவருளரோ? நானோ - பாங்கியாகிய நானோ! நிகழ்த்துவது - சொல்லுவது. இங்ஙன் பாங்கி குல முறை கூறி மறுத்தாள்: இஃது, தோழி பெருமையினகற்றல் எனவும் படும். பொன்னிற் குன்றிக் காயோ பதிப்பது என்ற சிறப்புப்

பொருளைக் காட்டி ''தூயோர் குலத்துக்கு இசையாதே'' என்ற பொதுப்பொருளைச் சமர்த்தித்ததால் இது **வேற்றுப் பொருள் வைப்பணி.**

காமக் கிழத்தியைக் கண்டமை பகர்தல்

46. தெருவூடு சேய்விளை யாடச்சென்
றூன்வந்து சேர்த்தெடுத்துன்
னுருவூ டறிந்தன்னை யானுமென்
றுள்விண்டு ராதனைமுன்
கருவூடு காத்த திருமால்
வராகர் கரந்தைவெற்பில்
மருவூடு தாரண்ண லேயெங்கை
யோவந்த மங்கையுமே.

தலைமகள் காமக்கிழத்தியைக் கண்டமை பகர்தல்:- நீ பொய் கூற வேண்டா; யான் நின் பரத்தையைக் கண்டேன் என்று தலைமகள் கூறல். [காமக்கிழத்தி - ஒருவனுக்கு உரிமை பூண்டவளாய்க் காமத்தின் பொருட்டு வரையப் பட்டவள்.]

சேய் - நமது பிள்ளை, தெருவூடு விளையாடச் சென்றான். (அப்போது) உமது காமக்கிழத்தி ஆங்கு வந்து அவனைச் சேர்த்தணைத்தெடுத்து, உன் உரு ஊடு அறிந்து - உம்மைப் போலவே உருவம் இருத்தலை யறிந்து, யானும் - நானும், அன்னை - உனக்குத் தாய் தான், என்றாள் -; (ஆகவே) மருவூடு தார் அண்ணலே - வாசனை ஊடாடுகின்ற மாலையை யணிந்த பெரியோரே! வந்த மங்கையும் - வந்த பெண்ணும், எங்கையோ - எனக்குத் தங்கை முறையினளோ? (எனக்குப் பின் வந்தவளோ) என்று காமக் கிழத்தியைக் கண்டமை சொன்னாள். இதனைக் கேட்ட தலைவன் முன்னர் அவளிடம் ''யான் அங்கவர் யாரையும் அறியேன்'' என்று கூறியதற்கு ஒடுங்குவன்.

விண்டுராதன் - அபிமன்யுவின் புத்திரனை பரீட்சித்து. விஷ்ணுவால் ஆபத்தினின்றும் காப்பாற்றப்பட்டவன்; விஷ்ணுவால் கொடுக்கப் பட்டவன். அசுவத்தாமன் அபாண்ட வாஸ்திரம் விடுத்துப் பாண்டவர் அனைவரையும் ஒழிக்கப் பார்த்த போது, அபிமன்யுவின் மனைவி உத்தரை வயிற்றிலிருந்த

குழந்தை பரீட்சித்தைக் கணை செகுத்திடா வண்ணம் கண்ணபிரான் காப்பாற்றினான்.

எங்கை - என் தங்கை என்பதன் மரூஉ. ''அப்பனைப் போலே பிள்ளை'' என்பதும் உலக வழக்கு. '' ''தந்தை யரொப்பர் மக்கள்'' என்றபடி , தந்தையரோடு மைந்தர் வடிவத்திற் சிறிதும் வேறுபாடின்றி விளங்குவதற்குச் ''சுடரிற் கொளுத்திய சுடரனையார்'' என வில்லிபுத்தூரர் கூறிய உவமை நயமும் ஈண்டு நினைக.

பாங்கி யறியாள் போன்று வினாதல்

47. தேர்கொண்ட வீதிய ராதி
வராகர்தெண் ணீர்ப்பொருநை
நீர்கொண்ட கால்குடை வார்கழங்
கம்மனை நித்திலப்பந்
தேர்கொண்ட காவி லெறிவா
ரிவரி லெவருரையாய்
தார்கொண்ட தோளண்ண லேயமை
யாமய றந்தவரே.

பாங்கி யறியாள் போன்று வினாதல்:- என்னுடைய தோழியர் பலர் உளர்; அவருள் நின்னை வேட்கை யுறுவித்தவள் யாரென்று தோழி அவளையறியாள் போன்று தலைவனை வினாதல். [இது, பாங்கியிற் கூட்டத்தின்பாற்படும்]

பொருநை - தாமிரபர்ணிநதி ''தேரோடும் வசந்த வீதி'' என்பது மரபு; அஃது பற்றிக் கூறியது. கால் – வாய்க்கால்கள் - (Canals), கன்னடியன் கால்வாய் போல்வன (செ: 73). குடைவார் - நீரில் திளைத்து நீராடுபவர் பல பெண்கள். அவர்கள் பலரும் கழங்கு அம்மனைக்காய் முத்துப் பந்து இவற்றை வீசியெறிந்து அழகு பொருந்திய சோலையில் விளையாடுவர். கழங்கு - கழற்சிக்காய். நித்திலம் – முத்து: முத்துக்களாலாகிய பந்து. இவர்களுள் அண்ணலே! அமையா - நீங்காத, மயல் தந்தவர் எவர் - காம மயக்கத்தை (நும்பால்) விளைவித்தவள் எவள்? உரையாய் - (என்னிடம் வெளிப்படையாய்ச்) சொல்வாயாக என்று பாங்கி தெரியாதவள் போன்று வினவினாள்.

தோள் அண்ணலே என்றது - ஆடவர்க்குச் சிறந்த உறுப்பு தோளாதலின். அமையா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். மயல் + தந்தவரே - மயறந்தவரே - ''னலமுன் றனவும்...தநக்கள் ஆயுங்காலே'' என்றது நன்னூல். முதலடியால் தேர்விழாக் காண்பவர் ஆதிவராகர் என்பது தெரிகிறது. பின்னர் செய்யுள் 92-இல் கருட சேவை குறிக்கப்பட்டிருத் தலும் காணலாம்.†

இறைவியின் தன்மை இயம்பல்

48. தைக்குங் கணைவிழி சாபம்
புருரஞ் சசிவதன
நெய்க்குங் குழல்மழை நித்தில
மூர ணிசாசரரைக்
கைக்குந் திகிரிய ராதி
வராகர் கரந்தைவெற்பில்
எய்க்குங் கொடியிடை யேந்திள
நீர்தன மென்னுயிர்க்கே.

(இறையோன்) இறைவியின் தன்மை இயம்பல்:- தலைவன் தோழிக்குத் தலைவியுடைய இலக்கணம் கூறுதல்.

என் உயிர்க்கு - என் உயிராகிய தலைவிக்கு, விழி - கண், தைக்குங்கணை - பொத்துகின்ற அம்பு. [கண்டாரை வருத்தும்] புருரம் - புருவம், சாபம் - வில். [வில் போல் வளைந்திருந்து நெரித்துக் கண்டாரை வருத்தும்]. வதனம் - முகம். சசி - சந்திரன். சந்திரன் போன்று குளிர்ச்சியான மகிழ்ச்சியைத் தரும். நெய்க்கும் குழல் - எண்ணெய் பூசப்பட்டுப் பளபளக்கும் கூந்தல், மழை - மேகம்; [மேகம் போற் கருமையும், குளிர்ச்சியும் வழங்கும்]. மூரல் - புன்சிரிப்புச் செய்யும் பற்கள், நித்திலம் - முத்துக்கள். [முத்துக்கள் போல் வெண்மை காட்டி ஒளிரும்]. இடை - மருங்குல். எய்க்கும் - துவள்கின்ற, கொடி - [கொடி போல் ஒல்கி ஒசியும்]; தனம் - கொங்கை, ஏந்து இள நீர் - பருத்த இளநீர்த் தெங்கு [தாபம் தீர்த்து விடாய் தணிக்கும்].

† கல்லிடைக் குறிச்சியில் சித்திரா பௌர்ணமி பிரமோத்ஸவத்தில் ஸ்ரீ ஆதிவராகப் பெருமாளுக்குப் பத்தாம் நாள் உற்சவத்தன்று மாலையில் தேர் வடம் பிடிக்கின்றனர் தென்னூர் கிராமத்தார் என்பர்.

நிசாசரரை - இராக்கதரை, கைக்கும் - முனியும், திகிரி - சக்கரப்படை. நிசாசரர் - இரவில் சஞ்சரிப்பவர் என இராக்கதர்க்குக் காரணக்குறி.

வரைந்து கொள்ளென்றல்

49\. தொடிவைத்த தோளண்ண லேயோமத்
தீவலஞ் சூழ்ந்தமிமேல்
அடிவைத்து மாலை யணிந்தல்ல
வோவமு தாசனரைக்
குடிவைத்த வேதிய ராதி
வராகர் குருங்கைவெற்பிற்
பொடிவைத்த செப்பென்ன பூண்முலை
யாரைப் புணர்வதுவே.

வரைந்து கொள்ளென்றல்:- தலைவனை நோக்கிப் பாங்கி தலைவியை வதுவைச் சடங்கோடு பொருந்த மணஞ் செய்து கொள்ளுமாறு கூறுதல்.

''வரைவெனப் படுவது உரவோன் கிழத்தியைக் குரவர் முதலோர் கொடுப்பவும் கொடாமையும் கரணமோடு புணரக் கடியயர்ந்து கொளலே'' என்பது விதி. அதாவது, வரை வென்று சொல்லப்படுவது - தலைமகன் தலைமகளைக் குரவர் முதலாயினர் உடன்பட்டுக் கொடுப்பவும் கொடாதொழியவும் வேள்விச்சடங்கோடு பொருந்த மணஞ் செய்து கோடல் என்றவாறு.

தொடி - அங்கதம்: தோள் வளை. ஓமத்தீ வலம் சூழ்ந்து - வேள்விச்சடங்கில் வளர்க்கப்படும் ஹோமாக்னியில் தம்பதியராய்ப் பிரதட்சிணஞ் செய்து, (பின்னர்) அ(ம்)மி மேல் அடிவைத்து - அம்மிக் கல்லின் மேல் கிழத்தியின் வலக்காலைப் பிடித்துத் தலைவனை மேல் வைக்கப் பணித்து. மாலை யணிந்து - மணமாலைகளைப் பரிமாறிக் கொண்டு, அல்லவோ - அப்படியல்லவோ, பூண் முலையாரைப் புணர்வது - வரைவுக்குரிய மகளிரைச் சேர மணப்பது. ஆதலின், அண்ணலே! அங்ஙனம் சடங்கொடு வரைந்துகொள் என்று பாங்கி கூறியது துறைவிளக்கம். அமி - அம்மி, இடைக்குறை. மாலைமாற்றல், அக்னி வளர்த்துச் சூழ வலம் வருதல், அம்மி மிதித்தல், முதலியன ஏனைய பொரி முகந் தட்டல்,

கைத்தலம் பற்றல், அருந்ததி காட்டல் போன்ற விவாகச் சடங்குகளுக்கும் உபலட்சணம் என்க.

அமுதாசனர் - தேவர்: அமுத + அசனர்: தீர்க்க சந்தி பெற்ற வடமொழித்தொடர். அமுதம் - தேவாமிர்தம். அசனம் - உணவு. குடிவைத்த வேதியர் - அசுரர்களிடமிருந்து காப்பாற்றி வாழ வைத்த திருமாலாகிய ஆதிவராகர். குருங்கை - நிறமுற்ற கற்கள்: குரு - நிறம்; ''குருவும் கெழுவும் நிறனா கும்மே'' (தொல்). பூண் முலைக்குப் பொடி வைத்த செப்பினை உவமை கூறியது - மேல் பொன்னிறப் பசலை யூர்ந்திருத்தல் நோக்கி. புணர்வதுவே - குற்றியலுகரம் கெடாது உடம்படுமெய் பெற்று வந்தது.

தலைவி கையுறை யேற்றமை, பாங்கி தலைவற்குரைத்தல்

50. தோடுண்ட மாலைச் சொருக்கூ
டிருக்குஞ் சுகந்தமெல்லாங்
கோடுண்டு நாணிக் குலைந்தன
போலுஞ்செங் கோகனகக்
காடுண்ட கார்க்குன் றனையார்
வராகர் கரந்தைநின்கை
யேடுண்ட பூந்தழை யேந்திழை
பாற்பெற்ற வீறுகண்டே.

தலைவி கையுறை யேற்றமை பாங்கி தலைவற்கு உரைத்தல்:- முதன்முதலில் பாங்கியிடம் தலைவன் கையுறை கொடுத்து அவள் மூலம் தலைவியை ஏற்கச் செய்ய வேண்டு வன்; ஆதலின், அத்தலைவி தலைவன் கொடுத்தனுப்பிய கையுறையை ஏற்ற நற்செய்தியைப் பாங்கி தலைவற்கு உரைத்தல் என்பது துறை விளக்கம். (இது குறைநயப் பித்தலின் பாற்படும்).

[கையுறை - கையிலுறைதலின் கையுறை ஆயிற்று. கையிலுறுத்துவது, கையிற் கொடுப்பது; ஒருவரைக் காணப் போவோர் அவரைத் தம்மாட்டு முகஞ்செய்தல் காரணமாக அவர் கையிற் கொடுக்கும் பூ, தழை முதலியன என்பர்].

செங்கோகனகம் - செந்தாமரை மலர்கள். காடு உண்ட - காடு போற்செருகுதியாகப் பூத்துள்ள, கார்க்குன்று அனையார் - கருங்குன்று போல் [கரிய] மேனி படைத்த

ஆதிவராகர். இஃது **இல்பொருளுவமையணி.** நின் கையால், ஏடு உண்ட - எடுக்கப் பெற்ற. பூந்தழை - கையுறை. தலைவி ஏற்றுக் கொண்டதால் அது வீறு [தனிப் பெருமை] பெற்றது. அது பெற்ற தனி ஏற்றத்தைக் கண்டு அவளணிந்த மாலையூடிருக்கும் சுகந்தம் [வாசனை] எல்லாம் நாணிக் குலைந்தன. நாணுதல் - நமக்கு இந்த வீறு இல்லையே என்றதால் வந்த கோட்டம் (மாறுபாடு). கோடுண்டு - கோட்ட முண்டு, மாறுபட்டு, தோடு - இதழ்கள். சொருக்கூடிருக்கும் - செருகிக் கிடக்கும். போலும் - ஒப்பில் போலி (பி.ம்.) வேற்றங் கண்டே.

தலைவன் இயைதல்

51. தௌவைக் கிராவணன் சீர்காட்டித்
தாமரைத் தையலுடன்
கௌவைப் படாதுல கங்காத்த
கண்ணன் கரந்தைவெற்பில்
மைவைத் தனைய மலர்க்குழ
லாயுன் மணிமுலைமேற்
கைவைத் ததுமதன் கண்ணேறு
பட்டது காப்பதற்கே.

தலைவன் இயைதல்:- தலைவன் பொருந்தி மகிழ்தல். ''ஆடமைத் தோளியை ஆர்வமொடு அணைதல்'' என்றது தணிகைப் புராணம்.

தௌவை - மூத்தவள்: மூதேவி. இராவணன் சீர் மூதேவிக்குக் காட்டி என்றதால் - அவனும் அவன் செல்வமும் அடியோடு அழிந்தமை குறித்தபடி. தாமரைத் தையல் - இலக்குமி, இங்குச் சீதாப்பிராட்டிக்கு வந்துள்ளது. கௌவைப் படாது - பழிச்சொல் நேராதபடி. ஒரு வண்ணான் ஏதோ பழிச்சொல் சொன்னானாயினும் அதையும் ஒரு பொருட்டா மதித்துத் துடைத்து மாசு மறுவற்று உலகம் காத்தவன் இராமபிரான் என்பது பிரசித்தம். அவ்விராமபிரானே கிருஷ்ணாவதாரத்தில் 'கண்ணன்' என்று பேர் பெற்றான். அவன் இப்போது கரந்தையில் ஆதிவராகனாக எழுந்தருளியுள்ளான். மை - கருமைக்கு எடுத்துக்காட்டு. மதன் - மன்மதன். கண்ணேறு - கண்திருட்டி; கண்ணெச்சில். மன்மதனின் திருட்டி தோஷம் உன் மணி முலைமேல் பட்டது: அது நீங்கிப் போகவும் அவன்

கண்பார்வை படாது காப்பதற்காகவும் நான் அதன்மேல் கை வைத்து மறைத்தது என்று தலைவன் தலைவி இயைந்ததற்கு மகிழ்ந்தான் என்பது துறை விளக்கம். ஈற்றடி சேரி மொழியிற் கிளந்தபடி.

தௌவை - தவ்வை என்பதன் போலி. தவ்வை - தமக்கை, மூத்தவள்: திருப்பாற்கடல் கடைந்த காலத்து மூதேவி இலக்குமிக்கு முன்னே பிறந்தாள்; அதனால், முறையே மூதேவிக்கு மூத்தவளென்றும், இலக்குமிக்கு இளையவளென்றும் பெயர். 'தவ்வைக்கு இராவணன் சீர் காட்டி' என்ற விடத்து ''செய்யவள் தவ்வையைக் காட்டிவிடும்'' என்ற குறட் சொற் பிரயோகங் காண்க. (குறள் - அழுக்காறுமை -7).

அறத்தொடு நிற்றல்
புனல் தரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல்

52. நறைதாங்கு மோதியை நன்னீர்ப்
பொருநை நதிபுரட்டி
யிறைதாங் கிடாதுகொண் டேகையி
லேயெடுத் தானெவனோ
பிறைதாங்கும் வண்ண மருப்பார்
வராகர் பெருங்கடற்கே
துறைதாங்கு பார்மகள் சோராமற்
றூங்கிய தோற்றமென்றே.

அறத்தொடு நிற்றல்:- அறனழியாமல் நிற்றல். (அறன்-கற்பு) கற்பின்றலை நிற்றல் என்பது பதப்பொருள். இங்குக் களவை முறையே வெளிப்படுத்தி நிற்றலாவது - தலைவி பாங்கிக்கு அறத்தொடு நிற்கும்; பாங்கி செவிலிக்கு அறத்தொடு நிற்கும்; செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்கும்; நற்றாய் - தந்தை தன்னையர்க்கு அறத்தொடு நிற்கும்.

புனல் தரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல்:- புனல் தரு புணர்ச்சியாவது - ''யாம் ஆற்றின் நீராடுகையில் தலைவி நீரா லிழுக்கப்பட்டு அமிழ்ந்தனளாக அது கண்டு காமனை யொத்த தோன்றல் ஒருவன் ஆங்குத் திடீரென்று வந்து நீரில் இழிந்து அவளைத் தழுவி யெடுத்து உயிர் காத்தான். அவன் மெய்யுற்ற வதனால், கற்புக் கெடாமைப் பொருட்டு அத்தோன்றற்கே மணம் நேர எண்ணி வருந்தாநின்றாள்'' என்று கூறிக் குறிப்பாற் களவினை யுணரச் செய்தல்.

பிறை தாங்கும் வண்ணம் - பிறை போன்று வளைந்த அழகினையுடைய, மருப்பு ஆர் வராகர் - எயிறு கொண்ட ஆதி வராகப் பெருமாள். பெருங்கடற்கு - பெரிய சமுத்திரத்தினின்று, துறை தாங்கும் பார் மகள் - பல நீர்த்துறைகளையும் கொண்டிலங்கும் பூமி தேவியை, சோராமல் - (சிறிது கூடச்) சோர்வு கொள்ளாதபடி, தாங்கிய தோற்றம் -, என்றே - என்று ஒப்புச் சொல்லலாம்படி, ஓதியை எவனோ எடுத்தான். ஓதி - கூந்தல். கூந்தலையுடையாளுக்குச் சினையாகுபெயர்; அன்மொழித் தொகையுமாம். நறை தாங்கும் - வாசனை பொருந்திய. இறை - சிறிது போதும், தாங்கிடாது கொண்டு - தங்குதலின்றி அடித்துக் கொண்டு, ஏகையிலே - தன்வழியே போகையிலே, எவனோ எடுத்தான் - எவனோ ஓர் ஆடவன் இவளைத் தூக்கி எடுத்துக் காப்பாற்றினன். அது முதற்கொண்டு இவள் அவனையே எண்ணி மாற்ற முற்றாள் எனத் தோழி அறத்தொடு நிற்றல்.

''திருவுருவம் பன்றியாகி, இலஙகுபுவி மடந்தை தனை யிடந்து புல்கி எயிற்றிடை வைத்தருளிய எம்மீசன்'' (பெரிய திரு: 7-8-4) என்றும்;

''படும்ப ணிக்கயத் தரும்புமோர் பங்கயம் பிடுங்கிக்
கடந்தி ரைத்தெழு கருங்கவுட் களிறெழுந் தென்னத்
தடங்கொள் வெண்மலை யெனவலை தவழ்கடல் கவிழ்ந்த
நெடுந்திண் பார்கொடு நிவந்தது நீண்மருப் பேனம்.

[பாகவதம் - ஆதிவராகர்நிலையுரைத்த அத்தியாயம் - செய்யுள்-4] என்றும் வந்துள்ளவற்றை ஈண்டு நினைக.

விலக்கல்

53. நாளிக மொத்த நறுங்குழை
யாளை நயந்துகரிக்
காளிக மொய்த்த வருவரைச்
சார லரையிருள்வாய்க்
காளிக மர்த்தனஞ் செய்தார்
வராகர் கரந்தைவெற்பில்
வாளிகள் மொய்த்தவில் லாயெம்மை
வேண்டில் வருவதன்றே.

விலக்கல்:- கங்குலில் வரும் வழியுளதாம் ஏதம் கூறித் தலைவன் வருதலைப் பாங்கி விலக்குதல். இங்ஙனம் விலக்கி

வரைவு கடாயினுள் என்க. நாளிகம் - வள்ளை, தாமரை. குழை - காதணி.

கரிக்காளிகம் - கரிய மணத்தக்காளி: இஃதோர் செடி வகை. அரையிருள் - நடுநிசி. காளிக மர்த்தனம் செய்தார் - காளியன் என்னும் பாம்பின் படத்தின் மேல் பாதங்களை வைத்து ஆடித்துகைத்து அதன் வலியை யொடுக்கினவர். கிருஷ்ணு வதாரத்தில் நிகழ்த்திய அருஞ்செயல். அதனை ஈண்டுக் குறித்தது இப்போதும் வராகர் வரையில் பாம்புகள் இரவில் சஞ்சரிக்கும் என்ற உட்குறிப்பினது.

வாளிகள் - அம்புகள். வில்லாய் - விளி; தலைவனை இங்ஙன் விளித்தது - வில்லின் வலிமையை நம்பி நீ இரவு வருதல் வேண்டு வதின்று என்ற குறிப்பினது. எம்மை வேண்டில் - எம்மை விரும்பி, வருவது - (இருள்வாய்) வருதல், அன்று - தகாது. இங்ஙன் வழியிடை ஏதம் கூறி விலக்கல் துறை காண்க.

தாய் அலரொடு புலம்பல்

54. நில்லென்று சொல்லி நிறுத்தக்கண்
டேனில்லை நேரிழையைச்
செல்லென்று வேடுவர் செப்புமப்
போதுசெஞ் சேவடியாற்
கல்லென்ற பெண்ணை நடவென்ற
மாயன் கரந்தைவெற்பில்
புல்லென்ற வாடவ ரேயிது
வோவுங்கள் போர்த்திறமே.

தாய் அலரொடு புலம்பல்:- நற்றாய் தன் மகளாகிய தலைவியைப் பற்றிப் பிறர் கூறுகின்ற பழி மொழிக்கு வருந்தித் தனிமையில் நைதல். 'புலம்பே தனிமை' (தொல்). அலர் - பழி மொழி - களவுக்குரியது: ''அம்பலும் அலருங் களவு'' என்றது களவியற் சூத்திரம். அலர் என்பது - இன்னுனோடு இன்னுளிடை இது போலும் பட்டது என விளங்கச் சொல்லி நிற்பது. ''பலரறிந்தலர் தூற்றல்.....அலர்'' என்றது பிங்கலந்தை.

நேரிழையை - தலைவியை [என் மகளை], வேடுவர் - என் ஐமார்கள், செல் என்று செப்பும் அப்போது - (தினைப் புனத்தைக் காக்கப்) போவாய் என்று சொன்ன அந்தச் சமயம், நில்லென்று சொல்லி - 'நீ போக வேண்டாம்; மனையிலேயே நில்' என்று

சொல்லி, நிறுத்தக் கண்டேன் இல்லை - நிறுத்ாது போயினேன் (நான்); அது நான் செய்த தவறு; [அதனை வாய்ப்பாகக் கொண்டு], கரந்தை வெற்பில் -, புல் என்ற ஆடவரே! - முளைத் திருக்கின்ற புல்லுக்குச் சமானமான அற்பத் தன்மை கொண்ட ஆண் மகனாகிய தலைவனே! உங்கள் போர்த் திறமே இதுவோ - உனது போரிடும் சாமார்த்தியம் களவிலே கலவிப் போர் [என் மகளோடு] நிகழ்த்துவது தானோ! [அஃது இதுபோது அலராகு வதே! எனப் புலம்பியது]. மாயன் - இராமபிரான். கல் லென்ற பெண்ணை - கல்லாய்ச் சமைந்திருந்த அகலிகையை, சேவடியால் - (தன்) திருவடித்துகளால், நட என்ற மாயன் - (சாபம் நீக்கிக் கௌதம முனிவன்பால்) போவாய் என்று சொல்லிச் சேர்த்து வைத்த இராமபிரான்.

ஒரு பெண்ணுக்கு நேர்ந்த பழிச்சொல்லை நீக்கிய மாயன் வெற்பில் ஓர் ஆடவன் ஒரு பெண்ணுக்குப் பழிச்சொல் விளைவிப் பதே! என்ன அற்பத் தன்மை! என்று அலரோடு நைந்து நற்றாய் புலம்பியபடி.

பூத்தரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல்

55. நீல மெடுத்தொரு தோன்றனின்
 றுனிள நெஞ்சியதைச்
சேல மெடுத்திரு செங்கையி
 லேந்தினள் சென்றிறந்த
கால மெடுத்த பெருமாள்
 வராகர் கரந்தைவெற்பில்
ஆல மெடுத்த கணுளரும்
 பாவைக் கணியவென்றே.

பூத்தரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல்:- பூவைக் கொடுத்ததனுற் புணர்ந்த களவை வெளிப்படுத்திக் கூறல்.

பூத்தரு புணர்ச்சி:- வினவிய செவிலியை நோக்கிப் பாங்கி ''நின் மகளும் நானும் சோலையில் விளையாடிய காலையில் ஒரு தோன்றல் நின் மகளுக்கு நீலப்பூக் கொடுத்துப் போயினான். இஃது அறியாக் காலத்து நிகழ்ந்தது. அதனை இன்று நின் மகள் நெஞ்சிற் கொண்டு மெலியா நின்றாள். இது யானறிந்தது என்று தோழி அறத்தொடு நிற்றல்.

இறந்த காலம் - கழிந்த [யுகங்களில் ஒன்றாகிய] மஹா பிரளய காலத்தில், எடுத்த - கோட்டினால் பூமியை இடந்து எடுத்து வந்த, பெருமாள் வராகர் - ஆதி வராகரது, கரந்தை வெற்பில், - ஆலம் எடுத்த கணாள் - விஷம் தீட்டப்பட்ட கண்ணை யுடையவளாகிய, அரும்பாவைக்கு - பெறுதற் கரிய (நம்) தலைவிக்கு, அணிய என்று - சூட்டிக் கொள்வதற் கென்று, ஒரு தோன்றல் - ஒரு ஆண் மகன், நீலம் எடுத்து நின்றான் - நீலப்பூ வொன்றைக் கையிலெடுத்து நின்றான்; இள நெஞ்சி - (அதனைக் கண்டு) மனம் இளகியவளாகிய இவள். சென்று - அவனிருக்கு மிடத்திற்குப் போய், அதை -, சேலம் எடுத்து - ஆடையால் எடுத்து, இரு செங்கையில் ஏந்தினள் - தனது இரண்டு கையினா லும் வாங்கிக் கொண்டாள்.

இறந்த காலம் என்று கூறி, மேல் 'எடுத்த பெருமாள்' என்றதால், 'எடுத்த' என்றது - காலம் நடையாகும் தேசமாகிய பூமியை எடுத்த எனப் பொருள் பட்டது. தலைவியின் கண் விஷம் வருத்துவது போலக் கண்டாரை வருத்தும் பேரழகு படைத்தது என்பது கருத்து. ஆலம் - விஷம்.

கணாள் - கண்ணாள் - இடைக்குறை. நெஞ்சி - இகர விகுதி பெற்ற பெண்பாற் பெயர். சேலம் - ஆடை; ''அவள் சேலம் திருத்தி'' (பெருங்கதை: வத்தவ: 12,97)

பாங்கி இறைவிக்கு அவன் குறையுணர்த்தல்

56. நுண்டா திறைக்குந் துழாயோன்
கரந்தையி னாலிடையாய்
தண்டா ரிவர்தங் கருத்தென்ன
வோதனி யேவருவர்
வண்டார் தழைகொய்து நல்லதெல்
லாந்தரு வாரவரைக்
கண்டார் மதனென்பர் கானுட
வர்க்குநங் காவகமே.

பாங்கி இறைவிக்கு அவன் குறையுணர்த்தல்:- [இறைவன் றனக்குக் குறைநேர்வித்த] பாங்கி, தலைவியை யணுகி அவளிடம் அவன் குறையை யுணர்த்துதல். [குறை நேர்வித்தலாவது - அவன் குறையைப் போக்க உடன்படல்].

தாது - மகரந்தப் பொடிகள். இறைக்கும் - தூவும், துழாயோன் - திருத்துழாய் மாலையை யணிந்த வராகர். நூல் இடையாய் - நூல் போல் மெல்லிய இடையை யுடையவளே! தலைவியை நோக்கிய விளி.

கானுடவர்க்கு - காட்டில் சஞ்சரிக்கின்ற இவர்க்கு, நம் கா - நம் சோலையிடமே, அகம் - தங்கும் மனையாவுள்ளது. தனியே வருவர் -; வண்டுகள் பொருந்திய (புதிய) தழைகளை யெல்லாம் (உடுக்கக்) கொய்து கொண்டு வந்து மேலும் நல்லன வெல்லாம் கொண்டு தருவார்; அவரைக் கண்டவர் மதன் [மன் மதன்] என்கிறார்கள்; குளிர்ந்த மாலையைத் தரித்துள்ள இவர் மனக்கருத்து என்னவோ?

'என்னவோ'? என்று பாங்கி தெரியாதவள் போல் கூறினாலும், ''தனியே வருவர், நல்லதெல்லாம் தருவர், மதன் என்பர், நம் கா அகமே'' முதலாகக் கூறியுள்ளவற்றை நோக்குங்கால் தலைவி குறைநேர்தல் வேண்டும் என்பதே அவளுக்குக் கருத்தாகும். எனவே, பாங்கி கூறியது குறை நயப்பித்தலிற் சேரும்.

நல்ல தெல்லாம் - ஒருமைப் பன்மை மயக்கம். 'தலைவனைக் 'கானுடவர்' என்று குறித்தது, கருப்பொருள் நோக்கி. இனி, நம் அகமே கா - நம் மனமே அவருக்குச் சோலையாகும் என்பது தொனிப் பொருள்.

கோழி குரல் காட்டுதல்

57. நூலாய் வலரவர் நான்மறை
வேள்வியர் நுண்ணுணர்வின்
பாலா ரரசர் பணிசமு
கத்தர்வைப் பாய்வணங்கு
மாலார் கரந்தையில் ஆதி
வராகர் வரையணங்கே!
வேலார் கொடிசெங்கை வில்லார்
வரவை விலக்குமின்றே.

கோழி குரல் காட்டுதல்:- இரவுக்குறிக்கண் தலைவன் வருந் தொழிற்கு இடையீடு நேரும்படி கோழி கூவுதல். [தலைவன் வருந்தொழிற் கருமை ஏழனுள் இஃதொன்று.]

நூல் ஆய்வலரவர் - சாத்திர நூல்களை ஆய்தலில் வல்லவ ராகிய ஞானிகள், நான்மறை வேள்வியர் - நான்கு வேதங்களிலும் வல்லவராய் யாக யக்ஞங்களைச் செய்து போரும் கரும யோகியர், [இவை யிரண்டு தொடர்களும் அந்தணரைக் குறிப் பன; ஞான காண்டம், கர்ம காண்டம், இரண்டிலேயும் தனித் தனி ஊற்றம் உடையவர் எனக் காட்டியபடி].

இனி ''நுண்ணுணர்வின் பாலார் அரசர்'' என்றது - க்ஷத்தி ரியர்களை. அரசர்கள் நுண்ணிய வுணர்வுடையவராய் அவர்க் குரிய பொருணூல்களிலே வல்லவர் என்றபடி. (அவர்க்குப் பின்) பணி சமுகத்தர் - வணிகர், வேளாளர்; இந்த இரண்டு சமூகத் தாரையும் குறித்தபடி. ஆக, நான்கு பகுதிப்பட்ட சமூகத் தாரும் வணங்கும் வைப்பாய் [சொத்தாய், நிதியாய்] இருப்பவர் மால் ஆதிவராகர் என்பது பெற வைக்கப்பட்டது. அணங்கே - தலைவியை நோக்கிய விளி.

வேலார் - முருகன். கொடி - அவனுக்குக் கொடியா யிருக்கும் சேவல் கோழி. செங்கை வில்லார் - தலைவன். இரவுக் குறி யிடத்து வழியிடை ஏதம் காக்க வில்லேந்தி வருவன். அவன் வரவை விலக்கும் என்றதால் குரல் காட்டி இடையிருளில் ஊரை எழுப்பும் என்பது தேறியது. **வேலார்** கொடி **வில்லார்** வரவை விலக்கும் என்ற விடத்து நயம் காண்க.

ஈண்டு ஒரு விஷயம் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது. கரந்தை ஆதி வராகரை நூலாய் வல்லவர் வைப்பாகவும், நான்மறை வேள்வியர் வைப்பாகவும், பூமியைக் காக்கும் அரசர் வைப்பாகவும், பணி சமூகத்தர் வைப்பாகவும் கூறியுள்ளார். இதனுடைய உட்கருத்து சுவைக்கத்தக்கது.

நூலாய் வல்லவர் வைப்பு - ஞானவராகர் நிலையில் அதாவது ஞானப்பிராணுகிய நிலையில். நான்மறைவேள்வியர் வைப்பு -யக்ஞவராகராகிய நிலையில். பூவரசர் வைப்பு - பூவராகராகிய நிலையில். [பூவராகர்க்குப் பிரம்மாண்டமான சிற்பம் உதயகிரி யில் (உ.பி.) குப்தர் காலத்தில் எழுப்பப் பட்டது]. பணி சமு கத்தர் வைப்பு - மகா வராகராகிய நிலையில்.

இதனுல் ஞானப் பிராணுகிய நிலையில் நூல் வல்லுநர்களுக் கும், யாக யக்ஞங்களை அங்கீகரிக்கும் யக்ஞவராக மூர்த்தியாகிய நிலையில் வேள்வி செய்வோர்க்கும், பூவராக மூர்த்தியாகிய நிலை யில் பூமியைக் காக்கும் அரசர்களுக்கும், கடும் உழைப்பினை மேற் கொண்டு மகார்ணவத்தில் மூழ்கி இரணியாக்கனைக் கொன்று பூமியை எடுத்து வந்து, மீண்டும் வளமுறச் செய்த மகாவராக

ராகிய நிலையில் வணிகம்வேளாளர்களுக்கும் வைப்பாய் [நிதியாய்] இலங்குவது வலியுறுத்தப்பட்டது. ஈண்டு, உழவுத்தொழில் வணிகர்களுக்கும் வேளாளர்களுக்கும் சிறப்புற வகுத்த தொழில் என்பது நோக்குக.

இக்காலத்தும் ஏனங்கள் தங்கள் மருப்பினுலே கோரைக் கிழங்கு முதலான கிழங்குகளை அகழ்ந்து எடுத்து மண்ணைக் கிளறிப் பண்படுத்தலைக் காண்கின்றோம். ஸ்ரீமுஷ்ணத்தில் (தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ளது) இன்றும் ஆதிவராக மூர்த்திக்குக் கோரைக் கிழங்கு நைவேத்தியம் காணலாம்.

கையுறை கொடுத்தல்

58. நெடுமால் கரந்தையில் ஞானப்பி
ரான்வெற்பி னீலவண்டார்த்
திடுமாந் தழையுந் தரளமு
முல்லையு மேந்துகச்சுத்
தொடுமா முலைக்குங் கலைக்குநின்
கூந்தற் சொருகினுமாம்
வடுமான் வரிவிழி யாய்கடி
தேந்து மலர்க்கரத்தே.

கையுறை கொடுத்தல்:- பாங்கி தலைவன் கொடுத்த கையுறையைப் புகழ்ந்து தலைவி கையிற் கொடுத்தல்.

நெடுமால் - உலகளந்த பிரான். ஞானப் பிரான் - ஆதிவராகர். நீலவண்டு ஆரவாரிக்கும் மாந்தழையும், தரளமும் (முத்தம்), முல்லையும் (முல்லைப் பூவும்) முலைக்கும், கலைக்கும், கூந்தற் சொருகினுக்கும் ஆம் - பொருந்துவனவாம். எதிர் நிரனிறை. 'சொருகினும்' என்பதன் பின் நான்கனுருபு தொக்கது. மாந்தழை - கலையாய் [ஆடையாய்]ப் பொருந்தும். தரளம் - முலைமேல் அணியும் சரமாய்ப் பொருந்தும். முல்லை - கூந்தலிற் சூடுதற்குப் பொருந்தும். ஆதலின், கடிது ஏந்து மலர்க்கரத்தே என்று சொல்லித் தலைவி கையில் கொடுத்தாள். பாங்கி என்பது துறை விளக்கம். கடிது - விரைவில். மலர்க் கரம் - உருவகம். வடு மான் வரி விழியாய் - தலைவியை நோக்கிய விளி. வடு - மாவடு; மாவின் பிளவு போன்ற நீண்ட கண்; மான் - மானின் கண் போன்று மருளும் கண். வரி - செவ்வரி கருவரி பரந்த கண். ஏந்து கச்சுத் தொடுமா முலை - கச்சைப் பொருமுலை என்றபடி.

வரையு நாளுணர்த்தல்

59. நேசந் தருமங்கை கொங்கைபொன்
    பூத்தன நீள்வனத்தில்
வாசந் தருமலர் வேங்கையும்
    பூத்தன வைகிடமாந்
தேசந் தரவல்ல ஞான
    வராகர் சிலம்பிலன்பர்
பாசந் தரவிண் பரிவேடம்
    பூத்தன பான்மதியே.

வரையு நாளுணர்த்தல்:- உலகத்து மணம் புரியும் நாள் வந்ததென்று கூறிப் பாங்கி வரைவு கடாதல்.

பொன் பூத்தன - சுணங்கு பரந்தன. சுணங்கு - மாமை நிறம். இது அழகு செய்யும் என்பர். வாசம் - வாசனை. வேங்கை - வேங்கை மரம். வேங்கையும் **பூத்தன** என்றதால் ''இது வரையும் நாள்'' என வெளிப்படையான் உணர்த்திய வாறாயிற்று.

வைகிடமாந் தேசம் - தாம் தங்கும் கலங்காப் பெரு நகர மாகிய முத்தியுலகு; விஷ்ணுவின் பரம பதம்; வைகுண்டம். அன்பர் - பக்தர்கள். பாசம் - அன்பு, பக்தி (devotion). அன்பர் பாசம் தர ஞான வராகர் தேசம் தருவர் என்பது நயம்.

பான் மதி - பால் போல் வெள்ளிய நிலவைச் சொரியும் சந்திரன். விண் - ஆகாயத்திடத்தே, பரிவேடம் பூத்தன - மண்டலம் வளைந்தது. [பரிவேடத்திற்கு ஊர்கோள் என்று பெயர்; ஊர்ந்து கொள்வது பற்றி வந்தது. ஊர்தல் - சூழ்தல்] மண்டலம் வளைந்ததால் திங்கள் நிரம்பிற்று, அதாவது வளர்தல் கொண்டது. வளர் பிறையில் கல்யாண நாள் வைப்பது உசிதம்.

(பி-ம்) வைகுண்டமாந்

''வைகுண்டமாந்தேசம் தரவல்லர்'' என்ற விடத்து, ''சரணமாகும் தனதாளடைந்தார்க் கெல்லாம், மரணமானல் வைகுந்தம் கொடுக்கும் பிரான்'' (9-10-5) என்ற திருவாய் மொழியும், ''வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே'' (10-9-9) என்ற திருவாய்மொழியும் அநுசந்தேயம்.

குறியிடத்து இறைவியைக் கொண்டு சேறல்

60. நைக்கும் பிணியு மிலம்பாடுந்
தீர்க்குமெஞ் ஞானப்பிரான்
கைக்குன்றம் காத்த நெடுமால்
வராகர் கரந்தைவெற்பிற்
றைக்குங் கணைவிழி யாய்சிறு
வீடு தனையமைத்து
வைக்குங் கறிமணற் சோறுக்க
மாதவி வாய்ச்செலவே.

குறியிடத்து இறைவியைக் கொண்டு சேறல்:- பாங்கி தலைவியைக் குறியிடத்து அழைத்துக் கொண்டு போய்ச் சேர்த்தல். குறியிடம் - பகலிற் கூடுமிடத் தடையாளம்; சங்கேத ஸ்தானம். சந்தித்தற்கு அறிவித்துக் குறிப்பிட்டுக் கொள்ளும் இடம். இச் செய்யுளின்படி மாதவிக் கொடி சூழ்ந்த பந்தர் குறியிடம் ஆயிற்று. மாதவிக்கொடி படர்ந்து மலர்ந்து நறுநாற்றம் வீசச் சுற்றும் புதல் சூழ்ந்து அகத்திருந்தோர் புறத்தில் வருவோர்க்குப் புலனுகா மறைவு வாய்த்திருப்பதோரிடம்.

நைக்கும் - நையச் செய்யும் [வருத்தும்], பிணியும் - உடல் நோயையும், இலம்பாடும் - வறுமையையும், தீர்க்கும் - தீர்த்து வைப்பன் எம் ஞானப்பிரான். கைக்குன்றம் - யானை; இங்கே கஜேந்திரன். அவனைக் காத்தது முதலை வாயினின்று, ஈண்டு, அத்தாளநல்லூர் கஜேந்திர வரதரைத் தியானிக்கலாம். தைக்கும் கணை - பொத்துகின்ற அம்பு; தலைவியின் விழிக்கு அம்பினை உவமை கூறியது, கண்டோரைத் தன் பார்வையினுல் குத்தி வருத்து தலாலாகும். சிறு வீடு கட்டிச் சிறு சோறு ஆக்கி விளையாடுதல் இளைய மகளிர்க்கு மரபாதலின் அதனை யொட்டிப் பாங்கி தலைவியை ''மாதவி வாய்ச்செலவே, வா'' என்று குறியிடம் கொண்டு சேர்கின்ருள். தெள்ளியெடுத்த மணலினுற் சிறு வீடு கட்டி அந்த மணலினுலேயே சோறு கறி முதலியன ஆக்கிச் சிறுமியர் விளையாடுதலை வியாஜமாகக் கொண்டு குறியிடம் சேர்ந்தபடி. விளையாடல் குறித்தபடியால் பகற் குறியிடம் என்பது பெற்ரும். [பாங்கிக்கு வகுத்த நான்கினுள் ''கூட்டல்'' என்ற பகுதியினைச் சேர்ந்தது இது]. செலல் - செல்க: அல் விகுதி பெற்ற வியங்கோள் வினைமுற்று. (பி-ம்) வாய்ச்செல்வமே.

பாகனோடு சொலல

61. நொடிக்கும் பொழுதொரு நூறுக
மாயெண்ணி நொந்துகண்ணீர்
வடிக்குங் கிளிக்குமுன் கார்செல்லு
மேனச்சு மச்சமும்போற்
றுடிக்குங் கிடந்து கரந்தை
வராகர் துவரைவெற்பில்
நடிக்கும் பரித்தடந் தேர்வல
வாவுனை நம்பினனே.

பாகனோடு சொல்லல்:- வினை முற்றி மீளும் தலைமகன் இடைச்சுரத்தில் தேர்ப்பாகனோடு சொல்லியது. நொடிக்கும் பொழுது - கை விரலைச் சுடுக்கும் இறைப்பொழுதையும், ஒரு நூறு உகம் [யுகம்] என்று எண்ணிக் கண்ணீர் வடிப்பள் தலைவி. ஒரு நொடிப் பொழுதும் பல்லூழிக் காலம் போல் நீட்டித்துக் காட்டும் பிரிந்த தலைவிக்கு: கிளி - கிளி போன்றாளுக்கு உவமை யாகுபெயர். அப்படிப்பட்ட தலைவிக்கு முன் இந்தக் கார் (மேகம்) செல்லுமேல், அதனைக் கண்டு ''கார்காலம் வந்தும் சொன்னபடி தலைவன் வரவில்லையே' என வருந்தி விடமுண்ட மீனைப் போலத் துடிதுடிப்பள் தரைமேற் கிடந்து. ஆகவே, நடிக்கும் பரி - பல கதிகளில் விரைந்து செல்லும் குதிரை பூட்டிய, தடம் தேர்வலவா - விசாலமான பெரிய தேரைச் செலுத்த வல்ல பாகனே! உனை நம்பினனே; நீ தலைவி முன் இந்தக் கார் செல்லுதற்கு முன் தேரை விரைவாகச் செலுத்துக என்பது எச்சம்.

வினை மேற் செல்லும் தலைவன் கார்காலத் தொடக்கத்து மீள்வன் என்று தலைவியிடம் காலங் குறித்துச் செல்லுவன்; ஆகவே, தலைவனின் பிரிவினால் வருந்தும் தலைவி மேகங்களைக் காணின் கார்ப்பருவம் வந்த பின்பும் தலைவர் வரவில்லையே என்றெண்ணி வருந்தித் துடிப்பள் என்பது உணர வேண்டுவது.

கிடந்து துடிக்கும் என மாறுக. துவரை - தானியம்; புன்செய்ப் பயிர்.

தன்மகள் மென்மைத் தன்மைக்கு இரங்கல்

62. நோமே மலரடி நுண்பரற்
பாலையி னூடுசென்றாற்
பூமேல் மிதித்தும் பொறுத்ததன்
றேயுந்தி பூத்தசெங்கண்
மாமேக வண்ணத்த ராதி
வராகர் வரையிலன்பர்
தாமே நிழலன்றி வேறே
நிழலில்லை தையலுக்கே.

தன் மகள் மென்மைத் தன்மைக்கு இரங்கல்:- நற்றாய் தன் மகளின் மெல்லிய இயல்பாகிய தன்மைக்கு இரங்கல் [இது அன்னை மருட்சியின்பாற்படும்.]

நுண் பரல் - நுண்ணிதாய்க் கூரிய பரற் கற்கள். பாலை - சுரம். ''சென்றால் மலரடி நோமே; என் மகளின் பாதம் பூ மேல் மிதித்தாலும் அதனுறுத்தலைப் பொறாதே'' என்று மென்மைத் தன்மைக் கிரங்கியபடி. உந்தி - கொப்பூழ். அன்பர் தாமே நிழலன்றி - உடன் கூட்டிச் சென்ற தலைமகன் தானே பாதுகாப்பாவதன்றி, வேறே பாதுகாப்பில்லை தையலுக்கு. தையல்-பெண், மகள். நிழல் - பாதுகாப்பு; புக்கில். அன்பர் என்ற சொல்லால், அவர் அன்பே நிழல் என்பதும் பெறப்படும்.

பொருள் வயிற் பிரிவு

இளவேனிற் பருவங்கண்டு வருந்திய தலைமகளைத் தோழியாற்றுவித்தல்

63. நௌவிசென் றாடு திரைநீர்ப்
பொருநை நதிக்கரையார்
மைவியன் கார்வண்ண ராதி
வராகர் வளம்பதிக்கே
யிவ்விளங் காவி லிளம்பேடுஞ்
சேவலு மின்பமுறுஞ்
செவ்விகண் டாரிலை யோபொருண்
மேலன்று சென்றவரே.

பொருள் வயிற் பிரிவு:- தலைமகன் பொருளீட்டுதல் காரணமாகப் பிரியும் பிரிவு. தான் தேடிய பொருளைக் கொண்டு இல்லறம் நடத்துதலே உத்தம மாதலாலெனக. [இஃது கற்பின் நிகழும் பிரிவு].

வராகர் வளம்பதிக்கே பொருள் மேல் அன்று சென்றவர் இவ்விளங்காவில் இன்பமுறுஞ் செவ்வி கண்டாரிலையோ என முடிவு காண்க. 'கண்டாரிலையோ' என்றதால் கண்டமை தேற்றம். அங்ஙனம் கண்டவராதலின், பேடும் சேவலும் போலத் தாமும் இன்பமுறும் பொருட்டு விரைந்து மீள்வர் என்று தோழி தலைமகளை ஆற்றுவித்தாள். இளவேனிற் பருவம் என்பது ''இளங்கா'' என்றதாலும், ''இளம் பேடும் சேவலும்'' என்றதாலும் பெறப்படும். மற்றும், பொருள்வயிற் பிரிவுக்குக் காலம் குறித்துச் செல்லுதல் இளவேனிற் பருவமாகும். விவரம் பின்னர் 93ஆம் செய்யுளுரையிற் காண்க.

பேடு - பெட்டைக் குயில். சேவல் - பறப்பனவற்றின் ஆண்பாற் பெயர்; இங்கு, ஆண் குயிலுக்காகியது. குயில் இளவேனிற் பருவம் வந்ததைக் குறிக்கும். நௌவி - நவ்வி - மான்: மான் போன்ற பெண்களுக்கு உவமவாகுபெயர். ஆடு - நீராடுகின்ற. திரை - அலை. மை - கருநிறம். வியன் - பெரிய. கார் - மேகம். பதிக்கு - நான்கனுருபு மேல் வரும் 'சென்றவர்' என்பதோடு இயைந்தது. இன்பம் - கலவியின்பம். செவ்வி - அழகு.

பாங்கன் குறிவழிச் சேறல்

64. பந்தாடு மோபொற் கழங்கா
டுமோபொற் படர்முலைக்குச்
சந்தாடு மோவுஞ்ச ணுடு
மோவெண் டரளமுந்தி
நந்தாடு செங்கையர் ஞானப்பி
ரான்சந்த ணுசலப்பூங்
கொந்தாடு மார்பன் குறிப்பையெல்
லாந்திறை கொண்டகொம்பே.

பாங்கன் குறிவழிச் சேறல்:- தலைவன் கூறிய குறியிடத்துத் தலைவியைக் காணுமாறு பாங்கன் போதல்.

வெண்தரளம் உந்தி - வெள்ளிய முத்துக்களைச் சொரிந்து. நந்து - சங்கு. இங்குப் பாஞ்சசன்னியம் என்னும் சங்கம்

ஆடு - தங்கியிருக்கின்ற, செங்கையர் - திருமால். அவர் ஞானப் பிரானாய் எழுந்தருளியுள்ளார். அப்பிரானது, சந்தனுசலம் - சந்தன மலையிடத்து, பூங்கொந்து - பூங்கொத்துக் கலை, ஆடு - தரித்த, மார்பன் - தலைவன். குறிப்பை எல்லாம் - எண்ணங்களனைத்தையும், திறை கொண்ட - [தனக்கு உரிய] திறைப்பொருளாக (தங்குமிட மாக)க் கொண்ட, கொம்பு - தலைவி, உவமவாகு பெயர்.

கழங்கு - கழற்சிக்காய் கொண்டு விளையாடும் ஓர் ஆடல். அம்மனை யாடுதலுமாம்: பொன் - பொன்போல் பூத்த சுணங்கு. படர் - பரவியுள்ள. சந்து - சந்தனம். ஆடுமோ - பூசுவளோ? உஞ்சல் - ஊஞ்சல், ஊசல். ஆடுமோ - ஓகாரம், ஐயப்பொருளது. பொன் - சுணங்குக்குப் பண்பாகுபெயர். வெண்தரளம் - பண்புத்தொகை சந்தனுசலம் - வடமொழித் தொடர்: தீர்க்க சந்தி. கொந்து - கொத்து, மெலித்தல் விகாரம். ''பச்சைக் கொடி விடையோன் ஒரு பாகந் திறை கொண்டாள்'' என்றார் வில்லியும். தலைவன் கூறிய குறியிடம் அவள் விளையாடும் பொழிலிடம் என்பது பெறப்படும்.

களிறு வினுதல்

65. பாயுங் கடமும் பிறைவாண்
மருப்பும் பனைக்கையுமாய்க்
காயுங் களிறென்று வந்ததுண்
டோகையுங் காலும்கண்ணும்
வாயுஞ் செவேலென்ற கார்மேனி
யாதி வராகர்வெற்பிற்
றேயும் பிறைநுத லீர்நீங்கள்
காக்குந் தினைப்புனத்தே.

களிறு வினுதல்:- தலைவன் தோழியைத் தான் கொடுத்த களிற்றினை [ஆண் யானையை] வினுதல். [இஃது பாங்கி மதி யுடன்பாட்டில் குறைவுணர்தலின் பாற்படும்].

பிறை நுதலீர்! நீங்கள் காக்கும் தினைப்புனத்தே காயும் களிறென்று வந்ததுண்டோ? என்று வினுதலில் துறை விளக்கம் காண்க. பிறை போன்ற நெற்றியை உடையவளே! என்ற விளி தோழியைப் பற்றியது. தலைவியை யுளப்படுத்தியதுமாம். தேய்பிறை - நுதலின் சிறுத்தல் காட்டுவது.

கடம் - மதஜலம். பிறை போல் வளைந்த மருப்பு - தந்தம். பனை போன்ற கை- தும்பிக்கை, காயும் - கோபிக்கின்ற. தலைவன் அம்பினுல் அடிபட்டுக் கோபம் கொண்ட என்பது பாவம். ஆனுல் இயல்பாகவே காயுந் தன்மை யானைக்கு உண்டு. ''சினக் களிறு'', ''நிழலொடு மறலும் யானை'' என்பன வழக்கு.

ஆதிவராகர் மேனி - கார் நிறம்: அவருடைய கை கால் கண், வாய் இவைகள் சிவப்பு நிறம். [செந்தாமரை போன்றவை என்பது மரபு] செவேல் - உலக வழக்குச் சொல். கணும் - கண்ணும்: தொகுத்தல்.

இறைவனை நகுதல்

66. பிரசத் தழைகொண்டு போர்வேழ
மெய்த பெருமையெல்லா
மரசர்க் குரைக்கில் வெகுமானஞ்
செய்வ ரராமகுடச்
சிரசிற் றிருநடஞ் செய்தார்
வராகர்செந் தேன்புனத்தின்
பரசக் குயின்மொழி யாரறிந்
தேது பலமதனே.

இறைவனை நகுதல்:- தோழி தலைவன் கூறினது உலகத்து நிகழ்வதன்றென்று நகையாடல். [இஃது பாங்கி மதியுடன் பாட்டில் இருவருமுள வழியவன் வரவுணர்தலின் பாற்படும்].

பிரசம் - தேன். போர் வேழத்தை அம்பெய்து ஊறு படுத்துவது வீரர் செயல். நீர் தேன் பெருகும் தழை கொண்டே வேழத்தை எய்துள்ளீர். அந்தப் பெருமையாஞ் செயலை அரசரிடத்துச் சென்று கூறின், வெகுமானம் செய்வர். [பரிசு கொடுப்பர்]. தினைப்புனத்து இன்பரசக் குயில் மொழியார் - எங்களைப் போன்ற மென்மை வாய்ந்த மகளிர். அறிந்து - நும் பராக்கிரமச் செயலை அறிந்து, ஏது பலம்? ஒரு பலனுமில்லை; என்று பரிகசித்த படி. நகுதல் - நகை பேதைமை காரணமாகத் தோன்றியது.

அரா - காளிங்கன் என்னும் பாம்பு. திரு நடம் - அழகிய நடனம். காளிங்கமர்த்தனத்தில் காளிங்க நடனம் செய்தவர்

வராகர். செந்தேன் புனம் - தினைப் புனம், ஏது+பலம்+அதன்+ ஏஅதனுல், என்ன பலன்? பலம்=பலன்: மகரனகரம் மாறி வருஞ் சொல்.

(பி.ம்.) - பல மன்னனே.

இதுவுமது

67. பீதாம் பரர்பன்ன காசனர்
ஞானப் பிரான்கரந்தை
மாதாம் பிரபன்னித் தென்கரை
யார்வரை வஞ்சியன்னீர்
போதாம் பரவன்னக் கைவாளி
யும்வில்லும் போலுமிவர்
ஏதாம் பிரபன்ன ரானையெய்
தோமென் றியம்பியதே.

(இறைவனை நகுதல்)

பீதாம்பரர் - பொன்னுடை தரித்தவர்; பன்னகாசனர் - ஆதிசேடனையிருப்பிடமாகக் கொண்டவர். ஞானப்பிரான் - வராகர். மா தாம்பிரபன்னித் தென்கரை கரந்தையார் - சிறந்த தாம்பிரபரணி நதியின் தென்கரையிலுள்ள கரந்தைப் பதியினர். அவருடைய, வரை - எல்லையிலுள்ள, வஞ்சியன்னீர் - தினைப்புனங் காக்கும் தலைவியை நோக்கிய விளி; தோழி விளித்தது. அ வன்னக் கைவாளியும் வில்லும் - அந்த நிறம் பொருந்திய கையம்பும், வில்லும், ஆம்பர் போது போலும் - ஆம்பல் பூக்களைப் போலே! மெல்லியனவாய் உள்ளன. ஆம்பர் - ஆம்பல்: ஈற்றுப் போலி, பந்தர் - பந்தல் என்பது போல. பிரபன்னர் இவர் - சரணம் புகுந்த இந்த ஆடவர், ஆனை எய்தோம் என்று இயம்பியது ஏதாம் - யானையை அம்பெய்து கெடுத்தோம் என்று கூறியது என்னவிந்தையோ? என்று இறைவனை நகையாடியது.

வைணவ சம்பிரதாயத்தில் ''உன் சரணல்லால் சரணில்லை'' என்றும், ''களைவாய் துன்பம் களையா தொழிவாய் களைகண் மற்றிலேன்' என்றும்! எம் பெருமானை நம்பி யிருப்பவர் 'பிரபந்நர்' எனப்படுவர்'. தலைவனை இங்கே 'பிரபந்நர்' என்ற சொல்லால் நகையாடியது அவன் தோழியைச் சரண் புகுந்திருத்தல் பற்றி என்க. அ வன்னக் கை வாளி - அகரச் சுட்டு பிரசித்தி

காட்டுவது. வன்னம் - வர்ணம், நிறம். போதாம்பர் - ஆம்பர் போது என மாறுக.

பிரபந்நருக்கு ''யானை எய்தல் எதற்கு'' எனப் பரிகசித்த படி.

தாம்பிரபன்னி - தாம்பிரபர்ணி: தண்பொருநை என்பது இங்ஙனம் மருவி வழங்கப் பெற்றதென்பர்.

நீங்கற்கருமை தலைவி நினைந்திரங்கல்

68. புனையுந் துளபத் திருமால்
வராகர் பொருப்புமின்னே
பனையன் றிலையு மருந்ததி
வாழ்வையும் பார்த்திலையோ
நினையுந் தொறும்விரும் பேனெருப்
பாய்நெடு மூச்செறிந்து
வனையுந் துணைமுலை முத்தா
ரமும்பொரி மாப்படுமே.

நீங்கற்கருமை தலைவி நினைந்திரங்கல்:- தலைவனை விட்டு நீங்கற்கு அருமையைத் தலைவி நினைந்து தன் தோழியிடத்து இரங்கிக் கூறுதல்.

மின்னே! தோழியை நோக்கிய விளி. அன்றிற் பறவையும் அருந்ததி வாழ்வும் தலைவன் தலைவியர் இணை பிரியாதிருத்தற்கு எடுத்துக் காட்டினபடி. அனலாய்ப் பெருமூச்சு விட்டு முலை மேலணிந்த முத்தாரமும் பொரிமாப் போலே உதிர்ந்து படுவதே என்று தலைவன் பிரிவைத் தாங்க மாட்டாத தலைவியின் படியினைப் பெற வைத்தது. ''நினையும் தொறும் விரும்பேன்' என்றது - தலைவன் விட்டு நீங்குவன் என்பதை நினைக்குந்தோறும் அப்பிரிவை விரும்ப மாட்டேன்; இணைபிரியாது இருத்தலையே விரும்புவேன் என்று தலைவி கூறி இரங்கியது. ஈண்டு ''முன் நான்முகத்தோன் ஒன்று விதித்திலனே உயிர்போல வுடம்பையுமே'' என்ற தஞ்சைவாணன் கோவைச் செய்யுளடியினை நினைக.

அன்றிற் பறவை இணைபிரியாது ஆணும் பெண்ணும் வாயலகு கோத்துக் கொண்டு உறங்கும். ஒன்றை விட்டு ஒன்று பிரிய நேரின் மூன்று தரம் கத்தும்; அதற்குள் இணைப்பறவை

வராமற் போனால் இறந்துபடும். ''அன்றில் ஒரு தரம் கத்தும் பொழுதும் பொருள் என் ஒரு வல்லியே'' என்றார் பிள்ளைப் பெருமாளையங்கார் திருவேங்கடத் தந்தாதியில். இந்தப் பறவை பனைமரத்தில் வசிக்கும்.

அருந்ததி, நட்சத்திர நிலையிலும் வசிட்டரை விட்டுப்பிரியாது இருப்பவளாதலின், இணைபிரியாத அன்பினுக்கும் கற்பினுக்கும் சிறந்த எடுத்துக்காட்டு. திருமணச் சடங்குகளிலும் ''அருந்ததி காட்டல்'' ஒன்றாதல் அறிக. முத்தாரமும் பொரிமாவாயிற்று என்றதால் அவன் நீங்குதலைத் தாங்ககிலாது நெருப்பிடைப் பட்டது போல் துடிப்புப் பெற வைக்கப் பட்டது.

பகலினும் இரவினும் பயின்று வருகென்றல்

69. பூணார மார்பர்மெய்ஞ் ஞான
வராகர் பொதியவெற்பில்
வாணாள் கணவர் மருவிய
நாள்மட வார்க்குப்பஞ்ச
பாணுவ தாரகெம் பீரரிங்
கும்மைப் பகலிரவாய்க்
காணா திருக்கப் பொருந்தாள்
சுரத கலாமயிலே.

பகலினும் இரவினும் பயின்று வருக என்றல்:- பகல் வருவானை நோக்கியது, இது, (பயின்று - நெருங்கி). நின் பிரிவைத் தலைவி சிறிதும் ஆற்றலளாதலின் இருபோதினும் நெருங்கி வருக என்று தோழி தலைவனுக்குக் கூறுதல். [இஃது வரைவு கடாதலின் பாற்படும்]

பஞ்சபாணுவதார கெம்பீரரே! இங்கு உம்மைப் பகலிர வாய்க் காணாதிருக்கப் பொருந்தாள். மயிலே என்றதால்- இருபோதும் பயின்று வருக என்றாள் தோழி. பஞ்சபாணுவ தாரர் - மன்மதன் போல் அழகு படைத்தவன் தலைவன். கம் பீரர் - காம்பீர்யம், தோற்றம் (personality) உடையவன். எனவே, சுரதகலா மயில் காணாதிருக்கப் பொருந்தாளாயினாள். சுரதம் - கலவி யின்பம். மயில் - சாயலுக்கு உவமை.

பொதிய வெற்பு என்றது கரந்தை வெற்புக்கும் அபேதமாக் கூறியபடி. ''மடவார்க்கு வாணாள் கணவர் மருவிய நாள்'' என்ற இந்தப் பொதுப்பொருளை மேல் ''காணாதிருக்கப்

பொருந்தாள்'' என்ற சிறப்புப் பொருள் கொண்டு சமர்த்தித்தது **வேற்றுப்பொருள் வைப்பணி.**

காமம் மிக்க கழிபடர் கிளவி

70. பெருகும் பொருநைத் துறைக்குரு
கீரெம் பிரான்கரந்தை
வருகின்ற நாட்சொல்லி மாநிதிக்
கேகின்ற வஞ்ச(ர்)பின்போய்
உருகின்ற தென்னெஞ்ச மூருங்கண்
ணீரு முலர்ந்துடலங்
கருகின்ற தென்றிவை காண்கின்ற
நீரொரு காற்சொலுமே.

காமம் மிக்க கழிபடர்கிளவி:- காமம் - வேட்கை, கழி - உள்ளது சிறத்தல். படர் - நினைத்தல். ஆக, வேட்கை மிக்குச் சிறப்பச் சிந்தித்துச் சொல்லுஞ் சொல். இந்தக் கிளவியில் வரும் செய்யுட்களின் கருத்து பெரும்பாலும், கடல், கானல் பொழில், விலங்கு, புள் இவற்றை நோக்கித் தலைவி இரங்கிக் கூறுதலில் அமையும். [இஃது வரைதல் வேட்கையின் பாற்படும்].

குருகீர்! என்று நாரைகளை விளித்துக் கூறினாள் தலைவி. பொருநை - தாமிரபரணி. மாநிதிக்கு ஏகின்ற வஞ்சர் என்று தலைவனைக் குறித்தலால் அவன் பொருள் வயிற் பிரிவு தெரிவித்த படி. வருகின்ற நாள் - வினைமுற்றித் திரும்பி வரும் நாள். என் நெஞ்சம் அந்த வஞ்சர் பின் போய் உருகுகின்றது. ஊரும் கண்ணீரும் - சுரக்கின்ற கண்ணீரும், உலர்ந்து - பிரிவுத் துன்பத்தின் தாபத்தால் வற்றிப் போக, உடலமும் கருகுகின்றது. இவையிற்றை நீங்களே நேரிற் காண்கின்றீர். ஆதலின் அப்படிக் கண்ணுற்ற நீங்கள் என் பரிதாப நிலையை அவ்வஞ்சர்க்கு ஒரு கால் எடுத்துச் சொல்லுங்களேன் என்று தலைவி குருகுகளை நோக்கி இரங்கிக் கூறினாள்.

வஞ்சர் - நலமுண்டு போயவர். ஊரும் கண்ணீர் - பெயரெச்சத் தொடர். உருகின்ற, கருகின்ற - உருகுகின்ற, கருகுகின்ற என்ற சொற்கள் யாப்பினுக் கேற்ப 'கு', சாரியை கெட்டு நின்றன. சொலும் - சொல்லும் - தொகுத்தல்.

இதுவுமது

காமமிக்க கழிபடர் கிளவி

71. பேரா யிரமுள்ள ஞான
வராகப் பிரானருள்போற்
சீராய் வளருஞ் செழுஞ்சாலிச்
செய்யிற் சிறையுலர்த்தி
வாரா யிருக்கின்ற நாராயென்
கொங்கை மழைத்தடங்கண்
ணீராய் நிறைந்தது பாராய்
வரார்வஞ்ச நெஞ்சகரே.

துறை விளக்கம் முன்னர்க் காட்டப்பட்டது. [செ.70]. பேராயிரம் - சகஸ்ரநாமம். சாலி - நெல். செழுஞ் சாலி - செந்நெல். செய் - கழனி, வயல். சிறை - சிறகுகள். வாராய் - வரிசையாய். நாராய் - நாரைகளே! கொங்கை மேல் கண்ணீர் வழிய நின்றேன்; பாருங்கள்: வஞ்ச நெஞ்சகர் இன்னும் வாரார்; எனவே, நீங்கள் சென்று கண்டு என் நிலை கூறுங்கள் என்பது எச்சம்.

அருள் போல் வளர்ந்தது செந்நெல் என்றது உயர்வுவமை. நாராய்! நீங்கள் சிறை நீரையுலர்த்துகின்றீர்; நானோ கண் ணீர் நிறைய நிற்கின்றேன். வாராய் நாராய் நீராய் பாராய்! என்ற விடத்தும், வஞ்ச நெஞ்சகர் என்ற விடத்தும் **பிராசம்** என்னும் அணிபட நின்றது.

வார் - வரிசை. மழை - குளிர்ச்சி. தடங்கண் - உரிச் சொற்றொடர்.

பாகனோடு சொல்லல்

72. பைத்தேறு பாம்பணை யாதி
வராகர்தென் பால்வலவா
முத்தேறு கொங்கைமுன் கார்செல்லு
மால்முடி தாங்குகன
கத்தேருந் தானையுங் காணுவென்
றேங்கிக் கபோலமிற்கை
வைத்தே மனமலைத் தேனிற்கு
மேதெரு வாசலுற்றே.

பாகனோடு சொல்லல்:- துறை விளக்கம் முன்னரே கூறப்பட்டது. (செய்யுள்-61).

வலவா - தேர்ப்பாகனை நோக்கிய விளி. பைத்து ஏறு - படங்களோடு கிளர்ந்து எழும். பாம்பு - ஆதிசேடன். அணை - படுக்கை; சயனம். தென்பால் கார் செல்லுமால். கார் - மேகம்; தென்பால் - தெற்குப் பக்கம். அந்தப்பக்கம் போதலால் என் தலைவி முன் போக நேரிடும். முத்து ஏறு கொங்கை - முத்து மாலை அசையும் முலைகளையுடையவள். கொங்கை - சினையாகுபெயர். கார் காலத் தொடக்கத்து வருவேன் என்று காலங்குறித்துத் தலைவன் சென்றனனாதலின், காரினைக் கண்டவுடன் தலைவி கலுழ்வள்; செல்லுமால் - ஆல் - அசை.

முடி - சிகரம்: கலசம். கனகத்தேர் - பொற்றேர். தானை - சேனை, எனவே, காவற் பிரிவு குறித்தபடி. காணு என்று ஏங்கி - திரும்பி வாராமையால் காணவில்லையே என்று ஏங்கி. கபோலமிற் கைவைத்து - கன்னத்தில் கையை வைத்த படியே; விசாரத்தோடு. தெரு வாசலில் வந்து பார்த்துக் கொண்டே, மனம் மலைத்து நிற்கும் - (கவலையுற்ற) மனத்தோடு மருள் கொண்டு நிற்பள். **தன்மை நவிற்சியணி**

தலைவி முன் கார் செல்லுதற்குமுன் தேரை விரைவாகச் செலுத்துகவென்பது எச்சம். (பி.ம்.) வாசல்வந்தே.

கலந்துடன் வருவோர்க் கண்டு கேட்டல்

73. பொன்னுடன் முத்து மகிலுடன்
சாந்தும் பொருதெறியுங்
கன்னடி யன்பெருங்கா லாதி
வராகர் கரந்தைவெற்பில்
மன்னுடன் செல்லும் வயங்கிழை
யேயுங்கள் வாசனைக்கோர்
மின்னுடன் மேகஞ் செலக்கண்ட
தோவிந்த வெஞ்சுரத்தே.

(செவிலி) கலந்துடன் வருவோர்க் கண்டு கேட்டல்:- உடன்போக்குப்போன தலைவனும் தலைவியும் போல, அன்பு கலந்து வழியிடை வருவோர் இருவரைக் கண்டு செவிலி வினுதல். [செவிலி பின்தேடலின்பாற்படும்].

கன்னடியன் கால்வாய் - இது தாமிரபர்ணி நதியின் கிளைக் கால்வாயாகும். [இதனைப் பற்றிய முழுவிவரம் முகவுரையிற் கூறப்பட்டுள்ளது.] அந்தக் கால்வாய் நீர் பொன்னுடன் முத்தையும், அகிலுடன் சந்தனத்தையும் மோதவிட்டு அடித்துக் கொண்டு வரும். மன் - தலைவன்: இங்கே வழியிடையே எதிர்ப் பட்ட பிறிதோர் தலைவன். அவனுடன் செல்லும் வயங்கிழை - அவன் உடன்போக்கில் கொண்டுசெல்லும் பிறிதோர் தலைவி. இப்படிக் கலந்துடன் வருவோரைக் கண்டு செவிலியானவள் ''ஓர் மின்னுடன் மேகம் செலக்கண்டதோ இந்த வெஞ்சுரத்தே'' என வினவினாள். மின் - தன் தலைவியைக் காட்டுவது. மேகம்-தன் தலைவியைக் கொண்டு சென்ற தலைவனைக் காட்டுவது. ஆகவே, மின், மேகம் இரண்டும் ஆகுபெயர்கள். ''உங்கள் வாசனைக்கு'' - என்பது ஒருசொல் விழுக்காடு. ''ஏதோ நீங்கள் அறிந்த வகையில்'' என்பது பொருளாகும். இது உலக வழக்கில் பெரிதும் வழங்குவதே.

வெஞ்சுரம் - பண்புத் தொகை. பொன்னுடன் முத்தையும், அகிலுடன் சந்தனத்தையும் சேர்த்துப்பிணைத்துக் கூறியது-உடன் போக்கிற் செல்லும் தலைவன் தலைவியரின் இனப் பொருத்தம் உள்ளுறையாக்கொண்டபடி. வயங்கிழை - அன்மொழித்தொகை.

பருவங் கண்டு பெருமகள் புலம்பல்

74. போனது வேனில் புகுந்தது
காரென் புணர்முலைபொன்
னது கண்டு மவரோவந்
தாரிலை யாழியிலோர்
மீனது வானவர் ஞான
வராகர் விளங்குவெற்பிற்
றேனது வார மலர்ந்தது
பூங்கொன்றை செம்பொனென்றே.

தலைவன் பிரியுங்கால் கார்ப்பருவத்திற்கு முன்னே வருவே னென்று கூறிப்போவன்: அக்கார்ப் பருவம் வரக்கண்டு தலைமகள் புலம்பிக் கூறுதல். [இஃது ஓதற் பிரிவின் பாற்படும்].

வேனில் போனது - முது வேனில் கழிந்தது. கார் புகுந்தது - கார்காலம் தொடங்கியது. என் கொங்கைகள் மேல் சுணங்கு பரந்திருத்தலைக் கண்டும் தலைவர் வந்தாரிலை. சுணங்கு-அழகு தேமல். ஆழி - சமுத்திரம். மீனது ஆனவர் - மச்சாவ

தாரம் எடுத்தவர். முன்னொரு காலத்தில் பிரமதேவன் கண் துயில்கையில், சோமகன் என்னும் அசுரன் வேதங்களை யெல்லாம் கவர்ந்து கொண்டு கடலினுள் மறைந்து செல்ல, பிரமன் முதலிய தேவர்களின் வேண்டுகோளால் திருமால் ஒரு பெருமீனாகத் திருவவதரித்துக் கடலினுட் புக்கு அவ்வசுரனைத் தேடிப் பிடித்துக் கொண்டு, அவன் கவர்ந்த சென்ற வேதங்களை மீட்டுக் கொணர்ந்து, அன்னவடிவமாய் அவற்றைப் பிரமனுக்கு உபதேசித்தருளினன். 'அவரோ' என்ற விடத்து அந்த வேதங்களை யோதுதற்குப் பிரிந்து போன என் தலைவரோ என்ற பாவம்,

தேனது - தேன். வார - ஒழுக. கொன்றைப் பூ பொன் போலே இருக்கும். ''கொன்றைகள் மேல் தூங்கு **பொன்** மாலை களோடு உடனாய் நின்று தூங்குகின்றேன்'' என்றாள் ஆண்டாளும்.

மீனது தேனது - அது பகுதிப் பொருள் விகுதி.

வலம்புரி கிழத்தி வாழ்த்தல்

75. பௌவ மனைய படைவேந்தர்
தேரிற் பணித்தசங்கந்
தைவிகச் சங்கத் தமிழ்வாணர்
வாழ்த்தசற் சங்கமொய்க்குந்
தெய்வ வராகப் பெருமாள்பொற்
கோயிற் றிருச்சங்கமுங்
கைவரு சங்கமும் போல்வாழி
யாயிரங் காலங்களே.

வலம்புரி கிழத்தி வாழ்த்தல்:- பிரிந்த தலைவன் வரவை அறிவுறுத்திய வலம்புரிச் சங்கினைத் தலைவி வாழ்த்தல். பௌவம் அனைய - கடல் போல் பரந்த, படை வேந்தர் - படைக்கு அரச ராகிய என் தலைவர். தேரில் பணித்த - வினைமுற்றி வெற்றி பெற்றுத் திரும்பி வரும் தேரினின்று முழங்கிய, சங்கம் - சங்கானது, கோயில் திருச் சங்கமும் கைவரு சங்கமும் போல் வாழி என முடிபு காண்க.

தைவிகச் சங்கத்தமிழ் வாணர் வாழ்த்த - தெய்வீகம் பொருந்திய சங்கத்தமிழில் வல்ல புலவர்கள் வாழ்த்தும் படியான. அதாவது, புலவர் பாடும் புகழுடைய. சத்சங்கம் - சான்றோர்களின் ஈட்டம். மொய்க்கும் - திரளுகின்ற தெய்வவராகப்பெருமாளின், பொன் - அழகிய, கோயில் திருச்

சங்கமும் - கோயிலில் (விடியற் காலை ஊதப்படும்) மங்கலச்சங்கமும், கைவருசங்கமும் - அவர் கையில் வைத்துள்ள பாஞ்சசன்னியமும், போல் - ,ஆயிரங்காலங்கள் வாழி - பல்லாயிர ஊழிக் காலங்கள் வாழ்வதாகுக என வாழ்த்தினுள்.

படை வேந்தர் என்று தலைவனைக் குறித்தலால், அவன் நாடுகாவற் பிரிவு காரணமாக வினைமேற் பிரிந்தவன் என்பது பெற வைக்கப்பட்டது. தான் வினைமுற்றி மீண்டதைத் தேரில் பணித்த சங்கத்வனியால் தெரிவித்தான். அதனுல் பிரிவுத் துன்பம் நீங்கிப் பெருமகிழ்ச்சி விளையவே, அந்தச் சங்கம் வராகர் கோயில் திருச்சங்கு போலவும், அவர் கையிலுள்ள பாஞ்சசன்னியம் போலவும் பல காலம் வாழிய எனத்தலைவி வாழ்த்தினுள். ''படைபோர் புக்குமுழங்கும் அப்பாஞ்ச சன்னியமும் பல்லாண்டே'' என்ற 'திருப்பல்லாண்டு' நினைக.

சங்கத்தமிழ் தைவீகம் பொருந்திய தென்றது, கண்ணுதற் பெருங்கடவுளும், குன்ற மெறிந்த குமர வேளும், அகத்தியர் போன்ற முனிச்சிரேட்டர்களும் கழகமோடமர்ந்து பண்ணுறத் தெரிந்தாய்ந்ததொன்ருதலின்.

தமிழ்ப்புலவர்கள் வாழ்த்தும் படியான பேறுபெற்ற சத்சங்கம் என்றது - புலவர் பாடும் புகழுடைய நல்லோர் கூட்டம் எனப்பெற வைத்தற்கு. சத்துக்கள் பயிலும் இடம் வராகர் கரந்தை என்பது கருத்து. வாழி - வியங்கோள் வினைமுற்று. தலைவன் சங்கை வலம்புரி என்றது, உயர்வு பற்றி.

சுவடு கண்டிரங்கல்

76. மறங்கண்ட கள்ளர் செருப்படி
யாங்கவை மற்றவரைப்
புறங்கண்ட வேலன்பொற் காற்சுவ
டிங்கிவை பூதலத்தில்
அறங்கண்ட மாயன் கரந்தைவெற்
பூடுகண் டஞ்சுமென்பொன்
நிறங்கண்ட தண்டைச் சிறுகாற்
சுவடுவை நேர்படுமே.

(செவிலி) சுவடு கண்டிரங்கல்:- சுரத்தின்கண் காலமுந்திய குறியைக் கண்டு செவிலி இரங்கிக் கூறுதல்.

மறம் கண்ட - வீரம் செறிந்த, கள்ளர் - ஆறலை கள்வரின், செருப்படி - செருப்பணிந்த அடிச் சுவடுகள், ஆங்கு அவை - **அவ் விடத்தி**லிருப்பவை. மற்று - வினைமாற்று.

அவரைப் புறங்கண்ட வேலன் - அக்கள்வர்களைப் புறங் காட்டி ஓடச் செய்த வேலையேந்திய வீரனாகிய தலைவனின், பொற் கால் சுவடு - அழகிய காலடிச் சுவடுகள், இங்கு இவை - **இவ் விடத்தி**லிருப்பவை; பூதலத்தில் - இப்பூமியில், அறங்கண்ட மாயன் - கீதையின் மூலம் தரும உபதேசம் செய்த கிருட்டிணனது, கரந்தை வெற்பூடுகண்டு - கரந்தை மலையின் நடுவிடத்தில் நிகழ்ந்த போரினைக் கண்டு, என் பொன் அஞ்சும் - பொன் போல அருமையான என்மகள் அஞ்சினள்; அவளது, நிறம் கண்ட - அழகு பொருந்திய, தண்டைச் சிறு காற் சுவடு உவை - தண்டை யணிந்த சிறிய கால்களை வைத்து நடந்த சுவடுகள் **பின்னிடத்தி** லிருப்பவை. நேர் படுமே - நேரே கண்ணுற் காணும்படி நேர்பட்டதே (எனக்கு) என்று செவிலி இரங்கிக் கூறினள்.

செருப்படி - ''செருப்பு+அடி'' என்று பொருள் படுவ தோடு செரு+படி என்று கொண்டு போரிட்ட திறம் என்றும் கொள்க. அப்போது அத்திறத்தால் ஏற்பட்ட சுவடுகள் ஆங் கவை என்க. ''செருப்படி பட்டார்'' என்ற உலக வழக்கும் த்வனி. வெற்பூடு - ஊடு, ஏழனுருபு. பொன் - தலைவிக்கு உவமவாகுபெயர். அவை, இவை, உவை - சுட்டினடியாப் பிறந்த பலவின்பாற் சொற்கள். நேர்படுமே - என்றதால் துறை விளக்கப்பட்டது.

பசலைக்கிரங்கல்

77. மாயோன் கரந்தையி லாதி
வராகர் மலையகிரி
மேயோன் கரந்தை வருந்தனங்
காள்மலர் மேலிருந்தாள்
சேயோன் கரந்தை மலர்வாளி
யெய்யவெண் டுண்டமுடித்
தூயோன் கரந்தை யெனப்பசந்
தீரவன் சொன்னினைந்தே.

பசலைக்கிரங்கல்:- தலைவியின் உடலில் தோன்றிய பசலைக்குச் செவிலி இரங்கிக் கூறுதல். (பசலை - பிரிவுத் துயரினால் உடலில் தோன்றும் நிற வேறுபாடு; பசப்பு, மாமை எனவும்படும்.

கணவன் பிரிவில் ,நாருரித்த ஆம்பல் தண்டு போன்று வெளுத்துக் காணப்படும் நிறம். 'ஆம்பற்றூம்புடைத்திரள்கால், நாருரித் தன்ன மதனின் மாமை'' என்பது நற்றிணை.)

மாயோன் கரந்தையில் - திருமாலின் கரந்தைப் பதியில், ஆதிவராகரது மலைய மலையில், மேயோன் - பொருந்தியவனுகிய தலைவன், கரம் - அவனது கைகள், தைவரும் - தடவிப் பிடிக்கும், தனங்காள் - கொங்கைகளே! என அவற்றை நோக்கிய விளி; செவிலி விளித்தது.

மலர்மேல் இருந்தாள் - இலக்குமிதேவி, (அவளது) சேயோன் - மகன், மன்மதன், (சேய் - பிள்ளை). கரம் - அந்த மன்மதனது கைகள், தை - தைக்கச் செய்கின்ற, மலர் வாளி - புஷ்பபாணங்களை, எய்ய - பிரயோகிக்க.

வெண்துண்ட முடித்தூயோன் - சிவபிரான்; வெண்துண் டம் - பிறைச்சந்திரன். (அவன் சூடியுள்ள) கரந்தை என - கரந்தைப் பூப்போல, பசந்நீர் - பசந்து (நிறமிழந்து) காட்டு கின்றீர். இதற்குக் காரணம், அவன் - அவ்வஞ்சன், சொல் நினைந்தே - பிரிந்த காலத்துச் சொன்ன சொற்களை நினைந்தே யாகும்.

கரந்தை என்ற ஒரேசொல் நான்கடிகளிலும் முன்னும் பின்னும் நோக்கிப் பொருள் வகுக்கும் போது, கரந்தை(ப்பதி) யில், கரம் தைவரும், கரம் தை மலர் வாளி, கரந்தை(ப்பூ) எனப் பிரிதலால், **யமகம்** என்னும் சொல்லணி கொண்டு வந்தது.

யமகமாவது - பல அடிகளிலாயினும் ஓரடியில் பல இடங் களிலாயினும் வந்த எழுத்துத் தொடர்களே மீண்டும் வந்து பொருள் வேறுபடுவது.

கரந்தை:- ஈரமான இடங்களிலும் அறுவடையான நெல் வயல்களிலும் மிகுதியாக வளரும் ஒரு பருவச் செடி. ஓரிரண்டடி உயரம் இருக்கும். இதற்கு ஒரு விதமான மணம் உண்டு. இதன் பூக்கள் சிறியவை. உருண்டை வடிவமான பூத்தலை மஞ் சரிகளாக இருக்கும். செந்நிறம் அல்லது ஊதா கலந்த செந்நிறமாக இருக்கும். (பி.ம்.) திங்கள்முடித்

அவன் சுரத்துய்த்தல்

78. மின்னு மருங்குல்வெள் ளோதிம
மேமெள்ள மெள்ளவராய்
இன்னு நடையென் றினியிரங்
காம லிடையிலுண்டு

கன்ஞ ரியாக்குந் திருமால்
வராகர் கரந்தைவெற்பிற்
றென்ஞர் தடம்பனை மன்ஞர்
பதிதடை தீர்ந்துறவே.

அவன் சுரத்து உய்த்தல்:- தலைமகன் தலைமகளைச் சுரத்திற் செலுத்தல். (இஃது உடன்போக்கின் பாற்படும்)

மின்ஞு(ம்) மருங்குல் - மின்னலைப் போல் ஒளிரும் இடையையுடைய, வெள் ஓதிமமே - வெள்ளை யன்னம் போன்றவளே! (தலைவியைத் தலைவன் விளித்தபடி). ஓதிமம் - நடைக்கு ஒப்பாவதாகலின் சந்தர்ப்பத்திற்கேற்ப விளித்த நயம் காண்க. மெள்ள மெள்ள வாராய் - மெதுவாக நடந்து வருவாய்.

நடை இன்ஞ என்று - நடப்பது இனிமேல் இனியதாகாது (முடியாது) என்று, இனி இரங்காமல் - இனிமேல் வருந்தாதபடி, இடையில் - வழியிடையிலே, தென் ஆர் தடம் பனை உண்டு- இனிமை நிரம்பிய பெரிய பனம் பழங்களுண்டு. (அவைகளின் நுங்கு நீர் பருகி ஏகலாம்) ஆகவே, மன் ஆர்பதி - நிலை பெற்ற நமது ஊருக்கு, தடை தீர்ந்து உறவே - [இடையே களைப்பால் நேரும்] தடை நீங்கிச் சேரவே, தடம் பனையுண்டு என மாறுக, பனை - எழுவாய், உண்டு - பயனிலை.

மூன்ருமடியில், கல் + நார் + யார்க்கும் கன்ஞரியாக்கும் என வந்தது. கல் — உரல், நார் — தாம்பிஞல், யாக்கும் - கட்டப் பட்ட, திருமால் - கிருஷ்ணன் . கண்ணன் இடையில் தாம்பிஞல் உரலோடு கட்டப் பட்டு யாப்புண்டமை பிரசித்தம்.

கல் + நார் = கன்ஞர் ''னலமுன்றனவும்........ தநக்களாயுங் காலே'' என்பது விதி. நார் + யாக்கும் = நாரியாக்கும் - ''தன்ஞெழிமெய்ம்முன் யகரம்வரின் இகரம் துன்னும்''. தென் - இனிமை குறிப்பது. மன் ஆர் பதி - இது தலைவன் ஊர் குறிப்பது. (பி.ம்.) 'தீர்ந்தெய்தவே'

காதலின் விலக்கல்

79. மீனங்கள் போல்விழி யாளுட
னீகங்குல் மேவிலெங்கள்
தானங்க ணீள மிலையண்ண
லேயிச் சரிநடந்த

ஊனங்கள் ஆறி மரைப்பால்
விருந்துண் டுறங்கியெழுந்
தேனங்க ளேனப் பெருமாள்
கரந்தையிற் செல்லுமினே.

(கண்டோர்) காதலின் விலக்கல்:- கண்டோர் காதலினால் பாலைச்சுரத்துப் போக்கை விலக்கி எம் பாடியில் தங்கிப் போம் என்று கூறுதல். (இஃது உடன்போக்கின் பாற்படும்).

மீனங்கள் - மீன்கள். அம் - சாரியை. நீ கங்குல் மேவில் - நீ இரவில் தங்க விரும்பினால், எங்கள் தானங்கள் நீளமில்லை - எங்கள் மனைகள் சிறிய குடிசைகளே; எங்கள் உபசாரங்களும் அதிகமில்லை என்பது உட் பொதிபொருள். அண்ணலே! இச்சரி - இந்தவழி [சரி - சரித்தல்].

ஊனங்கள் - புண்கள், மரை - மான். உறங்கி - தூங்கி. ''எழுந்தே + நங்கள்'' எனப் பிரிக்கவும். நகரத்திற்குப் பதில் 'னகரம்' வந்தது எதுகை நயத்திற்காக என்க. நங்கள் - எங்களுடைய, ஏனப்பெருமாள் - ஆதிவராகப் பெருமாள். [விழியாளுடன் நீ செல்லு மின் - என இயையும். (பி.ம்.) செல்லுமின்கள்: இஃது பாடமாயின், ஒருமையிற் பன்மை வந்ததென்க.

தன் பதியணிமை சாற்றல்

80. முனந்தானை காத்தவ ராதி
வராகர் முகிற்கிரிமேற்
பனந்தாங்கு கொங்கைப் பசுங்கொடி
யேகொடும் பாலையென்ற
வனந்தான் கடந்தனம் மாளிகை
பார்மணிக் கோபுரம்பார்
சனந்தான் புகழ்தடந் தேர்பார
தோகரந் தாபுரியே.

தன் பதியணிமை சாற்றல்:- தலைவன் தன்பதி அணித்தென்பதனைத் தலைவிக்குக் கூறுதல், [அணித்து - சமீபத்திலிருப்பது, அணிமை - சமீபம்].(இஃது உடன்போக்கின் பாற்படும்).

முனம் தானை காத்தவர் - முற்காலத்துத் [துவாபரயுகத்தில்] திரௌபதியின் ஆடை சுரக்கும்படி செய்து அவளது மானங் காத்தவர். முகில் கிரி - மேகம் தவழும் மலை. பனம் தாங்கு - பனம்பழம் போன்ற. கொடி - உவமவாகுபெயர். கடந்தனம் - தாண்டி விட்டோம். மாளிகை பார், கோபுரம் பார், தடந்தேர் பார் என்று விரையக் கூறி, அதோ கரந்தாபுரி (தெரி கின்றது) என்றது - தன்பதியின் அணிமையைச் சுட்டிக் காட்டிய படி. இதனுல் துறை விளக்கம் காண்க. சனம் - மக்கள்.

முக்கோற் பகவரை விஞதல்

81\. மூத்த வராகமுக் கோலுமுந்
நூலு முகந்துநெறி
வாய்த்த வராக வருமந்த
ணீர்சொலும் வையமெலாம்
பூத்த வராகர் புரந்ததென்
னுட்டினில் பூவைதன்னைக்
காத்த வராக நிழலாய்
நடந்த கருத்துணர்ந்தே.

முக்கோற் பகவரை விஞதல்:- செவிலி தேடிப்போகுங் கால் வழியிடையே எதிர்வரும் முக்கோலுடைய அந்தணரை வினவுதல். (இஃது செவிலி பின்தேடலின் பாற்படும்).

மூத்தவராக - வயது முதிர்ந்தவராக, முக்கோலும் - திரி தண்டும், முந்நூலும் - பூணூலும், உகந்து - விரும்பி ஏற்றுக் கொண்டு, நெறி வாய்த்தவராக வரும் - ஞான விரத அநுட்டான நெறிகள் தவருமல் ஒழுகுபவராக வருகின்ற, அந்தணீர் - சிரேட் டர்களே! - இங்ஙனம் முக்கோற் பகவரைச் செவிலி விளித்தாள். இனி,

வையம் எலாம் பூத்த - உந்தித்தாமரையில் மலரச் செய்த, வராகர் - ஆதிவராகப்பெருமாள், புரந்த - காத்து வருகின்ற, தென் நாட்டினில் - தெற்கிலுள்ள பாண்டிய நாட்டி னில், பூவை தன்னை - நாகணவாய்ப்புள் போன்ற மென்மை படைத்த என் மகளை, காத்தவராக - பாதுகாக்கும், நெறியுடைய வராக, நிழலாய் நடந்த - அவளது நிழல் போலே விடாமல் தொடர்ந்து நடந்து போன, கருத்து உணர்ந்து - ஆழ்பொருளை உணர்ந்து, நீர் சொலும் - நீங்கள் சொல்லுங்கள்.

நெறி வாய்த்தவராதலின் அப்பகவரை வினவினுள். கலித் தொகையிலும் இங்ஙனம் செவிலி வினவியதற்கு, ''சிறந்தானை வழிபடீச் சென்றனள்; அறந்தலை, பிரியா ஆறுமற் றதுவே'' (**கலித் -** 9) எனக் கருத்துச் சொன்னதும் நினைக. நெறி - ஆசாரம். ''நூலே கரகம் முக்கோல் மனையே, ஆயுங்காலை அந்தணர்க் குரிய'' (**தொல்காப்பியம்** - பொருளதி - மரபியல், 71) என்பதனுல் முந்நூலும் முக்கோலும் கூறினுர்.

நற்ருயிரங்கல்

82\. மென்மரல் சாய்ந்தெட்டி வேரறத்
தீய்ந்துவெள் வேல்கருகிப்
புன்மர மொன்றற்ற பாலையி
லேயொரு பொற்கணையால்
வன்மர மேழெய்த மாயோன்
கரந்தையில் வாய்த்தவன்பின்
பன்மல ரோதிதன் பாடகக்
காலெப் படிவைகுமே.

நற்ருய் இரங்கல்:- நற்ருய் சுரத்திடை போய தன்மகள் மென்மைத் தன்மைக்கு இரங்கல். (இஃது அன்னை மருட்சியின் பாற்படும்).

மென்மரல் - மெல்லிய மரல் என்னும் சிறு செடி வகை; ''மரையா மரல்கவர மாரி வறப்ப'' (கலித்: 6).

சாய்ந்து - வெப்பமிகுதியால் சாய்வுற்று, எட்டி - எட்டி மரம், வேரறத் தீய்ந்து - வெள்வேல் கருகி - வெள்ளிய வேல மரம், கருகி - கரியாகி, புல் மரம் - புல்லோ மரமோ, ஒன்றற்ற - ஒன்று கூட இல்லாமற் போன, பாலையிலே - சுரத்திலே, -

வாய்த்தவன் பின் - தனக்கென வந்து ஏற்பட்ட தலைவன் பின்னே, பல் மலர் ஓதி - பல மலர்களையிட்ட கூந்தலையுடைய என் மகள், தன் பாடகம் கால் - பாடகம் என்னும் காலணி யணிந்த தன்னுடைய பாதங்கள், எப்படி வைகுமே—எங்ஙனம் பதியும். (பதித்து வைக்க முடியாது துடிப்பளே! என இரங்கியவாறு).

மரல் சாய்ந்து, எட்டி வேரறத் தீய்ந்து, வெள் வேல் கருகி, புல் மரம் ஒன்றும் இல்லாது அற்றுப் போன பாலை என அந்நிலக்

கொடுமையும் சுரத்தின் வெப்பமும் பெற வைத்தபடி. இப்படிக் கொதிக்கும் பாலையில் எப்படிக் கால் பதியுமோ என நற்றாய் தன் மகள் மென்மைத் தன்மைக்கு இரங்கியபடி.

பொற்கணையால் வன்மரம் ஏழ் எய்த மாயோன் - இராம பிரான். ஓரம்பினால் ஏழு மராமரங்களை ஒரு சேரத்துளைத்து வீழ்த்தியமை பிரசித்தம். சுக்கிரீவனுக்காக இச்செயல் செய்தார். அதனை இங்கே நற்றாய் குறித்தற்குக்காரணம் - அவரோ ஏழு மரங்களையே வீழ்த்தினர். இந்தப்பாலை வெப்பமோ எல்லா மரங்களையும் புல் பூண்டு உட்பட ஒன்று கூட இல்லாமல் தீய்த்து வீழ்த்துகின்றதே என்ற அவலம் தெரித்தற்கு என்க.

'எட்ட வேரற' என்ற பாடத்திற்கு எட்ட[நட்ட] முழுவதும் எனப் பொருள் கொள்க: இது உலக வழக்கில் வருவது. ஓதி - ஆகுபெயர்.

பாங்கியை முனிதல்

83. மேட்டுக் கிறைத்த புனலோ
கடற்பெய்த மென்மழையோ
காட்டுக் கெறித்த நிலவோ
வராகர் கரந்தைவள
நாட்டுத் தளவ நகையா
யுனைநம்பி நான்வந்ததுங்
கோட்டுத் தனத்திற்குக் கையுறை
தேடிக் கொணர்ந்ததுமே.

பாங்கியை முனிதல்:- தலைவி பாங்கியை முனிந்து தன்னுட் கூறல். (இஃது பாங்கியிற் கூட்டத்தில் தலைவி குறை நேர்தலின் பாற்படும்).

தளவ நகையாய் - முல்லைப் பூப்போன்ற பற்களையுடைய பாங்கியே! உனை நம்பி நான் வந்ததும், நீ அவர் கொடுத்த கையுறையை (என்னைத்) தேடிக் கொணர்ந்ததும் வீணாகப் பயனின்றிக் கழியக் கூடா. அவையிற்றைப் பயனுளவாக்க வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டுள்ளது. ஆகவே உன்னையும் நம்ப வேண்டியதுதான். [இல்லையேல், மற்றேது அவர் நினைப்பார்?].

ஈண்டு ஒன்று நினைவு கூர்தற்குரியது. இந்தப் பாங்கியிற் கூட்டத்துக்கு முன்னரே தலைவனோடு கூட்டம் **பான்மை** வயத்தா னெய்தியிருக்கின்றாள் தலைவியாதலின், இது போது ஏதோ தோழி தன்னால்தான் முடிவது போலக் கையுறை தேடிக் கொணர்ந்து குறையுற்றிரத்தலின், தலைவி ''அவளையே நம்பி வந்ததாகவும், கையுறையைத் தேடிக் கொணர்ந்த அவளுக்காக ஏற்பதாகவும் கூறுவது, கோபந் தோன்றத் தன்னுட்கூறிக் கொண்டது என உணர வேண்டுவது.

கோடு - காம்பு. மேட்டுக்கு இறைத்த நீரும், கடலிற் பெய்த மழையும், காட்டில் எறிந்த நிலவும் பயனில வாகும். ஆதலின், அம்மூன்றனையும் இங்கே உவமையாக்கிக் கூறினாள் தலைவி. ஓகாரங்களால் அவை அங்ஙனன்றிப் பயனுள்ளனவே யாக்கப்பட்டன எனப் பெற வைத்தாள். ஓகார இடைச்சொல் எதிர்மறைப்பொருள் குறித்து வந்தது.

'நான் வந்ததுங்' - விளச்சீரில் புள்ளிநின்று வற்றியது.

இறைமகள் மறுத்தல்

84. மைபோ லிருண்டது வானமெல்
லாமழை மாரிபெய்து
செய்போற் குளிர்ந்தது தேசமெல்
லாமிடைச் சேரியிற்போய்
நெய்போற் றயிருண்ட கள்வர்
வராகர் நெடுங்கிரியில்
மெய்போல வேரதி யேவம்புக்
காரன்று மின்கொடியே.

இறைமகள் மறுத்தல்:- கார்ப்பருவம் வரக்கண்டு இறைமகள் புலம்ப, அது கண்டு இதனை வம்பென்று கூற இறைமகள் பாங்கி கூறியவதனை மறுத்துக் கூறுதல்.

ரதியே! - என்றது பாங்கியை நோக்கிய தலைவியின் விளி. இது வம்புக் காரன்று, (காலத்தில் வந்த கார் தான் இது). மின் கொடியைப் பார் - மின்னலைப் பார். தெரியலாம், ''மலை யாள மின்னல், ஈழ மின்னல், சூழ மின்னுதே' என்றது முக்கூடற்பள்ளு: 35).

(மேலும்) வானம் எல்லாம் மை போல் இருண்டது; (மை - அஞ்சனம்). தேசமெல்லாம் மழை - (மேகம்) மாரி பெய்து - (பொழிந்து), செய்போல் - கழனிகள் குளிர்ந்திருப்பது போலே, குளிர்ந்துள்ளது. இடைச்சேரியிற் போய் நெய்போல் தயிரையும் உண்ட கள்வர் வராகர் - கிருஷ்ணவதாரத்தில்: மெய் போலவே - உண்மையாகவே: இது, ''மின் கொடியே'' என் பதனேடியையும். வம்பு - புதுமை: ''வம்பே புதுமை''(தொல்)

போல் + தயிர் = போற்றயிர்: ''னலமுன் றனவும்........ தநக்கள் ஆயுங்காலே'' என்பது விதி. வராகர் கள்வராயினும் அவர் நெடுங்கிரியில் வந்த கார் கள்ளமன்று என்பது தொனி.

விதிவழிச் சேறல்

85. மொய்வர வூரவர் முந்நூ
லவர்வர முத்தனையாள்
கைவரு மாலையென் கண்களி
கூர்வரக் காணுமுன்னே
மைவரு நீல மலைபோலு
மாதி வராகர்வெற்பின்
மெய்வருங் காவலன் பின்போக
வோதலை மேல்விதியே.

விதிவழிச் சேறல்:- உடன்போக்கில் தலைவன் பின் தலைவி விதி வழியே செல்ல அதனால் வரைவு காணாது போகவே, நற்றாய் பாங்கியர் விதிவலி கூறிப் புலம்பல் இது. (இஃது நற்றாய் புலம்பலின் பாற்படும்).

பெரியோரைக் கொண்டு கடிமணம் காணு முன்னே காவலன் பின் போனது தலைவிதியே எனத் துறை விளக்கம் காண்க. இனி,

ஊரவர் மொய் வர - ஊரிலுள்ள மகளிர் வெள்ளம் சூழ்ந்து வர, முந்நூலவர் வர - அந்தணச் சிரேட்டர்கள் மந்திரம் ஓதிவர, முத்து அனையாள் - முத்துப் போன்ற என் மகள், கை வருமாலை - கையிற்கொண்டுள்ள மணமாலையைக் [கணவனுக்குச் சூட்டுவதை], என் கண் களி கூர் வர - என் கண்கள் களிக்கும்படி, காணும் முன்னே, மெய்வரும் காவலன் - களவினில் வந்து செல்லும் தலைவனின், பின் போகவோ - பின்னர் நடந்து செல்வதோ! தலைமேல் விதியே (இவள்) தலை விதி யிருந்தவாறு என்னே! என நற்றாய் மகள் தலை விதிக்குப் புலம் பியபடி. இனி, தன் தலைவிதிக்கு நொந்ததுவுமாம்.

'மெய் வருங்காவலன்' என்ற விடத்து இன்னுப்பு, பொய்யே வந்து களவினில் நீட்டித்தவன் என்பது குறிப்பு. மெய் - பொய் என்ற எதிர்மறைக் குறிப்பினது. மூன்றும் அடியால் ஆதிவராகர் கரிய மேனிப்பிரான் என்றது.

குறத்தி குறி கூறியமை சாற்றல்

86. மோகக் கணவன் வருவான்பொன்
னேயின்று முட்டையிட்ட
பாகக் கெவுளி பலுகுநன்
றுந்திருப் பாற்கடலில்
யோகத் துயில்கொண்ட வாதி
வராக ருயர்பொதியக்
காகக் குறக்குறி பொய்யாது
கூழுங் கலையுநல்கே.

குறத்தி குறி கூறியமை சாற்றல்:- தோழி இறைமகளிடம் குறத்தி கூறிய குறி பலித்தமை கூறல்.

பொன்னே! - இறைவியை நோக்கிய விளி. மோகம் கணவன் - ஆசை விஞ்சிய தலைவன், வருவான்: ஏனெனில் முட்டையிட்ட, கெவுளி - பல்லி, பாக - நல்ல சூசகமாம் படி, பலுகு - சொன்னது, நன்றும் - நன்னிமித்தமாயிற்று. பாக, பலுகு - இரண்டும் தெலுங்குச் சொற்கள். திசைச் சொற்கள் உபயோகித்துக் காட்டியபடி.

யோகத் துயில் - அறிதுயில். உயர் பொதியம் - உயர்ந்த பொதிய மலையிடத்து, காகம் குறம் குறி - காகம் செய்த குறியும், குறத்தி சொன்ன குறியும், பொய்யாது - பொய்யாகாமல் பலித்தன. (ஆகவே) கூழும் - காகத்திற்குக் கூழும், கலையும் - குறத்திக்குச் சேலையும், நல்கு - கொடுப்பாய் என்று தோழி இறைவிக்குக் கூறினள்.

காகக் குறக்குறி - காகக்குறி, குறக்குறி என ஈரிடத்தும் இயைத்துப்பொருள் கொள்க. அஞ்ஞான்று, 'பொய்யாது' என்ற ஒருமை பன்மை காட்டுவது. கூழும் கலையும் நல்கு - **முறை நிரனிறைப்பொருள்கோள்** காண்க. இரண்டாமடியில் ''பாகக் கெவுளி பலுகு'' என்ற நயம் பாராட்டத்தக்கது. பலுக்குதல் - தெளிய உச்சரிக்கப்படுதல்.

தனிமைக்கு இரங்கல்

87. மௌவற் கமுக மடன்மேற்
படர்ந்து மலர்ந்துவண்டு
கௌவக் கமழுங் கரந்தை
வராகர் கனங்கிரிமேல்
ஒளவைத் தெரிவை யரன்பருந்
தாமு மணைத்துறங்க
இவ்வத் தனிக்குத் துணைநா
ளொருத்தி யிருந்தனனே.

தனிமைக்கு இரங்கல்:- தலைவி தலைவனையின்றித் தான் தனிமையாயிருத்தற்கு இரங்கல்.

மௌவல் - முல்லைக்கொடியானது, கமுகமடல்மேல்படர்ந்து -, மலர்ந்து -, வண்டு கௌவ - வண்டு கிண்டுதலாலே, கமழும் - வாசனை வீசுகின்ற, கனம் கிரி - மேகம் தவழும் மலை. அந்த மலையிடத்து, ஒளவைத் தெரிவையர் - தாய்மாரோடு கூட வாழும் மகளிர், அன்பரும் தாமும் - தத்தம் கணவன்மாரும் தாங்களுமாக, அணைத்துறங்க - தழுவித்தூங்க, -

நான் ஒருத்தி மட்டும், இ - இந்த, அத்(த) தனிக்கு - அர்த்த சாமத்துத் தனிமைக்கு, துணையாயிருந்தனனே! எல்லே பாவம்! எனத்தனிமைக்குத் தலைவி இரங்கியபடி. ''அர்த்த'' என்ற வடசொல் ''அத்த'' எனக் குறுகிப் பின் 'தனி' என்ற சொல் லோடு புணருங்காலத்துத் தனது ஈற்றுயிர்மெய்கெட்டு, ''அத்தனி'' என நின்றது.

மௌவல் வண்டு கௌவக் கமழும் என்றது - தலைவி தலைவன் சேர நிறம் பெறுவள் என்பதும், மௌவல் கமுக மடல் மேல் படர்ந்து மலர்ந்து என்றது - தலைவி தலைவனது தோளினை இறுகக் கட்டித் தழுவுவள் என்பதும் **இறைச்சிப்** பொருளாகக் கொள்க. ''கருப்பொருட்பிறக்கும் இறைச்சிப் பொருளே'' என்றது நம்பியகப்பொருள் (சூ.240).

அத்த + சாமம் = அர்த்தசாமம் (midnight). தனி - தனிமை, (loneliness)

தன் வரவுணர்த்தி விடுத்தல்

88. யமுகக் கவிஞரு மேழிசை
வாணரு மேத்துபெருஞ்
சமுகத் திறைவர் கரந்தை
வராகர் தலத்தந்தணீர்!
கமுகக் கழுத்திய ராயமுந்
தாயுங் களிக்கவேபோய்ச்
சுமுகத் தலைவ ருடனுன்
வருவது சொல்லுமினே.

தன் வரவு உணர்த்தி விடுத்தல்:- தலைவி முன் செல்வோர் தம்மோடு தன்வரவு பாங்கியர்க்கு உணர்த்துமாறு சொல்லி விடுத்தல்.

அந்தணீர்! என்று விளித்தனளாதலின், முன்செல்வோர் முக்கோற் பகவர் போன்ற சான்றோர் என்பது பெற்றும். அவர்களை விளித்து ''ஆயமும், தாயும் களிக்க நீவிர் போய், தலைவருடன் நான் வருவது சொல்லுமினே'' என்றதால் துறைவிளக்கம் பெறப்பட்டது.

யமகம் - யமுகம் என எதுகை நோக்கித் திரிந்தது. யமகம் பாடுதலில் வல்ல கவிஞர்களும், இசை வல்லுநர்களும் பெருங் கூட்டமாக நின்று ஏத்துகின்ற இறைவர் வராகர். அவர் தலத்து அந்தணீர் என்று முன் செல்வோரைச் சிறப்பித்தபடி. **யமகம்** - பல அடிகளிலாயினும் ஓரடியிற் பல இடங்களிலாயினும் வந்த எழுத்துத் தொடர்களே மீண்டும் வந்து பொருள் வேறுபடுவது. ஏழிசை - சப்த ஸ்வரங்கள்: - ச, ரி, க, ம, ப, த, நி, இதனைக். குரல். துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பர். முதலடியால், இயலிசை வல்லுநர் ஏத்த நின்றவர் வராகர் என்பது கருத்து. ஸ்ரீ முத்துசாமி தீட்சிதர் அவர்கள் இயற்றிய ஆபோகிராக கீர்த்தனை ''ஸ்ரீலக்ஷ்மி வராஹம்'' என்பதனை ஈண்டுச் சிந்திக்கலாம்.

கமுகக் கழுத்தியர் - பாக்குமரத்தின் கழுத்துப் போன்ற கழுத்தையுடையவர் பெண்கள். மகளிரின் கழுத்துக்கு - கமுக மரத்தின் கழுத்தினை ஒப்பிடுவது வழக்கம். சற்றுப்பருத்து நெய்ப்போடு பளபளத்துக் கீற்றுக்கொண்டு காட்டும் கமுகங் கழுத்து. ஆயம் - பாங்கியர் கூட்டம். தாய் - நற்றாய்; செவிலி

யுமாம். சுமுகம் - அழகிய மலர்ந்த பொலிவுடன் கூடிய முகம்: வடசொல்.

சென்றேருரைத்தல்

89. யாவரும் யாவையும் யாமேயென்
றோதி யிறைமைபெற்ற
மூவரு மானவ ராதி
வராகர் முகிற்பொதியக்
காவரு மன்னமன் னீர்நாளைக்
காளையுங் காதலியுந்
தேவர்தங் கோனிந்தி ராணியென்
றேவந்து சேருவரே.

சென்றேருரைத்தல்:- முன் சென்றவர் தலைவன் தலைவியோடு [இருவருமாக] வந்து சேர்வதைப் பாங்கியர்க்கு உரைத்தல்.

முகில் - மேகம் சூழ்ந்த, பொதியக்கா - பொதியமலைச் சோலையிலே, வரும் அன்னம் அன்னீர் - உலாவுகின்ற அன்னப் பறவை போன்றவர்களே! இந்த விளி, முன் சென்றவர் பாங்கியரை நோக்கி விளித்தது. அன்னம் - மெதுவான நடையழகுக்கு ஒப்பு.

காளை - தலைவனுக்கு உவமவாகுபெயர். நாளை -,. காளை - இந்திரன் போலவும், காதலி இந்திராணி போலவும் வந்து சேருவர் என நிரல்பட இயைவதால் **நிரனிறை**.

இறைமை பெற்ற மூவரும் ஆனவர் ஆதிவராகர் - பிரம விட்டுணு ருத்திரர் என்ற மும்மூர்த்திகளும் தான் ஒருவரேயான வர் ஆதிவராகர். ''முதலாவார் மூவரே, அம்மூவருள்ளும், முதலாவான் மூரிநீர் வண்ணன்'' என்ருர் **பொய்கை யாழ்வாரும்**. (முதல் திரு: செ.15).

''**யாவரும், யாவையும் யாமே**'' என்று ஓதி இறைமை பெற்ற வராகர் என்ற விடத்து அறிய வேண்டுவது:-
யாவரும் - எல்லா உயர்திணைப் பொருள்களும்
யாவையும் - எல்லா அஃறிணைப் பொருள்களும்
யாமே - நாமே யாவோம்.

''ஸர்வம் விஷ்ணு மயம் ஜகத்'' என்றபடி சகல சேதந அசேதநங்களின் உள்ளும் புறம்பும் ஆதிவராகர் வாசியறக் கலந்து நிற்றலின், ''யாவரும் யாவையும் யாமே'' என்றது.

''யாவையும் யவருந் தானாய்'' (3-4-10) என்றார் திருவாய் மொழியிலும். ''மூவருமாகி அந்த மூவர்க்குண் முதல்வனாகி, யாவரும் யாவும் ஆகி.....நின்ற செங்கண்மால் எங்கள் கோவே''. என்றார் வில்லிபுத்தூரரும். (வீட்டும - முதற்போர் - செ-1).

இங்கு ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் ''வராக சதுஸ்லோகி'' என்று பாராட்டப்படும் ஸ்லோகங்களில் இரண்டின் கருத்துக்கள் குறிக்கப்பட்டுள்ளன. (1- ஆவது அம்சம், 4 - அத்யாயம்). இவை சனக சனந்தனாதி யோகீந்திரர்கள் செய்த தோத்திரத்தின் பகுதியாகும்.

1. பரமாாத்த த்வம் ஏவைகோ, நாந்யோஸ்தி ஜகத:பதே
தவைஷ மஹிமாயேந, வ்யாப்தம் ஏதச்சராசரம் (38)

2. யேது க்ஞான வித: சுத்த சேதஸ்தே அகிலம் ஜகத்
க்ஞானாத்மகம் ப்ரபச்யந்தி த்வத் ரூபம் பரமேச்வர (41)
இவற்றின் கருத்து, பின்வருமாறு:-

1. ஓ! ஜகந்நாதா! உண்மையான பொருள் நீ ஒருவனே யன்றி மற்றொன்றும் இல்லை. எப்படியென்னில், சராசரமய மான சகலமும் உன்னாலே வியாபிக்கப்பட்டு உன் திருமேனியாய் இருக்கிறபடியினாலே இது வெல்லாம் உன் மகிமையே ஆகிறது. ஆனது பற்றி நீ ஒருவனே பரமார்த்தமாகிறாய். உலகத்துக்குக் காரணபூதனாய், அதனிடத்தில் உள்ளும் புறமும் வியாபித்திருக் கின்ற உன் மகிமை சொல்லத் தக்கதோ?

2. எவர்கள் ஆத்தும சொரூபத்தை ஞானசாரமாக அறிந்து, பகவானை அநுபவிக்கத் தக்க யோக நிலைக்கு யோக்கிய மான, பரிசுத்த மனம் உடையவர்களோ அவர்கள் பிரகிருதி விகாரமான தேவ மனுஷ்யாதி ரூபமாய்க் காணப்படுகிற இந்தப் பிரபஞ்சத்தை ஞான குணமுள்ள ஆத்தும சொரூபமாகவும் உன் திருமேனியாகவும் காண்கின்றார்கள். (ஸ்ரீ விஷ்ணு புராணம் - வசன காவியம் - திருவல்லிக்கேணி: திருமலை, ஈச்சம்பாடி ஸ்ரீ நிவாச ராகவாசாரியார் மொழிபெயர்ப்பு. P. No. - 16).

மேலும், பகவத்கீதையிலும் கண்ணன் கூறியவை இங்கு அநுசந்தேயம்:

''அஹமாத்மா குடாகேச ஸர்வபூதா சயஸ்த்தித: அஹ மாதிச்ச மத்யஞ்ச பூதானமந்த ஏவ ச'' (10 - 20) (இதன்

பொருள்:- ''நான் எல்லாப் பிராணிகளின் இருதயத்திலும் உள்ள ஆத்மா; பிராணிகளின் ஆதியும் நடுவும் முடிவும் நானே''.)

''அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ மத்த: ஸர்வம் ப்ரவர்த்ததே'' (10-8) (இதன் பொருள்:- ''நான் அனைத்துக்கும் பிறப்பிடம்; என்னிடமிருந்தே அனைத்தும் பிரவிருத்தித்து இயங்குகின்றது'').

வரைந்து கொள்ளென்றல்

90. யுத்திக்கு யூகியு மாண்மைக்கு
மாருதி யுஞ்சரியா
எத்திக்கு மெண்ணப் பெறுமிறை
யோய்நல் லிருக்குநெறி
வத்திக்குஞ் செல்வக் கரந்தை
வராகர் மலயவெற்பில்
தித்திக்குந் தேனை வரையாது
சேர்வது செய்கையன்றே.

வரைந்து கொள் என்றல்:- களவொழுக்கத்தில் நீட்டித்த தலைவனைப் பாங்கி யறிவுறுத்தித் தலைவியை வரைந்து கொள்ளும்படி கூறல். (வரைவு கடாதலின்பாற்படும்)

தேனை - தேன் போன்ற தலைவியை, வரையாது - வெளிப் படையாக வரைந்து கொள்ளாமல், சேர்வது - களவொழுக்கத்தில் சேர்ந்து வருவது, செய்கை யன்றே - தகுதியான செயலாகாதே என்று கூறியதால் துறைவிளக்கம் பெறப்படும். தேன் - தேன் போன்று இனிமையுடையாளுக்கு உவமவாகுபெயர்: பண் பாகுபெயருமாம். வெற்பில் தேன் இருப்பது சகஜமே.

தலைவனின் பெருமையை முதலிரண்டடிகளிற் காணலாம். யுக்திக்கு - சமயோசிதபுத்திக்கு, யூகியும் - யூகியையும், ஆண்மைக்கு - வீர தீரத்திற்கு, மாருதி - அனுமனையும் கூறுவது பெருவழக்கு. அவ்விருவர்க்கும் சரியா - சமானமாக, (யுக்தியிலும் ஆண்மையிலும்), எத்திக்கும் - எத்திக்கிலுள்ளாராலும் (அனைவ ராலும்), எண்ணப்பெறும் - மதிக்கப்பெறும், இறையோய் - தலைமை படைத்தவனே! இஃது பாங்கி விளித்தது.

நல் இருக்கு நெறி வத்திக்கும் - நல்ல வேத நெறியைக் கடைப்பிடித்தொழுகும், செல்வக்கரந்தை - தனம் படைத்த

கரந்தை நகர். தித்திக்கும் தேனே என விசேடித்தது - தலைவியின் பெண்மை நலம் சிறந்து காட்டற்கு.

வத்திக்கும் - வர்த்திக்கும், திக்கு - திக்கிலுள்ளார்க்கு இடவாகுபெயர். இருக்கு - ரிக் வேதம்: இங்கு, பொதுவாக வேதத்திற்கு வந்தது.

யூகி - யௌகந்தராயணன்; இவன் யுக்தியில் வல்லவன். வத்ஸ ராஜனுன உதயணனிடம் இராச்சிய தந்திரத்தில் நிபுணனு யிருந்த மந்திரி.

தமரைத் தெருட்டல்

வாழ்க்கை நன்றென்றறைதல்

91. யூகப் படையின ராதி
வராக ருயர்பொதிய
நாகத் துறையுங் கிளிகாள்நங்
கன்னியை நல்குதற்கு
போகத் தலைவர் குடிமைக்கு
மாண்மைக்கு முற்றுமிந்திர
போகத்து வாழ்வுக்கு நம்மினு
மேற்றம் பொருந்தினன்றே.

தமரைத் தெருட்டல்:- தம்மவராகிய செவிலி ஆயத்தார் போன்றோரைத் தெளிவு பெறச் செய்தல். இது பாங்கி செய்வது.

வாழ்க்கை நன்றென்றறைதல்:- பாங்கி இல்வாழ்க்கை நன்றென்று செவிலிக்கு உரைத்தல். (இஃது இல்வாழ்க்கையின் பாற்படும்).

கிளிகாள்! என்ற விளி தமரைப் பற்றியது. கிளிபோன்ற பேச்சினிமை யுடையவர்களே! எனக் கொண்டாடியபடி, கிளி - உவமவாகுபெயர். யூகம் - வியூகம், படை வகுப்பு; ரத கஜ துரக பதாதி கொண்டவர். நாகம் - மலை, கன்னி - தலைவியை, நல்குதற்கு - மணம் செய்து கொடுப்பதற்கு, (த்தகுதியாக) போகத் தலைவர் - இன்பத்திற்குரிய தலைவர், குடிமைக்கும் - உயர் குடிப்பிறப்புக்கும், ஆண்மைக்கும் - ஆண்தன்மைக்கும், இந்திர போகத்து வாழ்வுக்கும் - சிறந்த மேன்மையான ரசாநுபவம் கொண்ட வாழ்வினுக்கும், நம்மினும் - நம்மைக் காட்டிலும், முற்றும் - முழுவதினும், ஏற்றம் பொருந்தின் - ஓக்கம் பெற்றிருப் பவராயின், நன்றே - (அஃது நம் அனைவருக்கும்) நல்லதேயாகும்.

''இறையோன் உயரினும் குறைவின் றென்மனூர்'' (நம்பி யகப் பொருள்: சூ: 119) என்ற விதிப்படி, குலத்தானும் செல்வத் தானும், அறிவானும், ஆண்மையானும், பிறவாற்றானும் தலைமகன் உயர்ந்தனனாயினும் குற்றமின்று: [எனவே தலைமகளுயர்தல் குற்றம்]'' மிக்கோ னாயினும் கடிவரையின்றே'' என்றது தொல் காப்பியமும் (பொருளதி: 93).

இதுவுமது
வாழ்க்கை நன்றென்றுறைதல்

92. யோகத்தி லேயுன் மகள்மலர்ப்
பாவைசை யோகசுக
போகத்தி லேரதி வாரத்தி
லேயன்னை புள்ளரசில்
மாகத்தி லேவரு மாதி
வராகர் மலையமதில்
யாகத்தி லேபிரி யார்பொன்
னினைநண்ப ரன்புநன்றே.

துறை விளக்கம் முன்னரே கூறப்பட்டது.

உன் மகள் -, யோகத்திலே - விட்டுப் பிரியாதுறைதலிலே, மலர்ப்பாவை - இலக்குமி; சையோக சுக போகத்திலே - கலவி யின்பச் சுகாநுபவத்திலே, ரதி -, வாரத்திலே - அன்பு செய்தலிலே. அன்னை - தாய். தாய் அன்புக்குச் சிறந்த எடுத்துக் காட்டாவள். புள்ளரசு - கருடன்: பக்ஷிராஜன். மாகத்திலே - மகநட்சத்திரத் தன்று. இனி, மாகம் - ஆகாயமுமாம்.† [தலைவனோ] நண்பர் - மிக்க அன்புடையவர்.

யாகத்திலே - யாகஞ் செய்யும் போது, பொன்னின் - பொன்னைப் போல, பிரியார் - பிரியாது இருப்பர்: (அவரது) அன்பு நன்று. ஆகவே, இல்வாழ்க்கை நன்றாயிற்று என்று பாங்கி செவிலிக்குக் கூறினாள். அன்பு இல்வாழ்க்கைக்குச் சிறப்புற வேண்டுவதென்பதை ''அன்புடைமை'' அதிகாரம் கொண்டு வள்ளுவர் சிலாசாசனமாக்கினார்.

---

† கல்லிடைக்குறிச்சி ஸ்ரீ ஆதிவராஹ ஸ்வாமி பிரமோற்சவ பத்திரி கையின்படி கருட சேவை ஐந்தாம் நாள் இரவு நடைபெறும். மேலும், புரட்டாசி மாதம் நாலாவது அல்லது ஐந்தாவது சனிக்கிழமைகளில் கருடசேவை நடைபெறும் என்பர்.

யாகம் செய்யும் போது தக்கிணை முதலானவை கொடுப்பதற்கும், அத்வர்யு முதலான சான்றோர்களைக் கௌரவித்தற்கும், யக்ஞ சாமக்ரியைகள் யாதொரு குறையும் நேராதபடி சேகரித்து வைப்பதற்கும், வந்த விருந்தினர் அனைவருக்கும் தக்க உபசாரங்கள் செய்து போரற்கும், பொன் பிரியாது வேண்டியிருத்தல் உணரத் தக்கது. ரகு மன்னனிடம் யாசித்தமையும் கௌசிகன் அரிச்சந்திரனிடம் அண்டினமையும் ஈண்டு நினைக.

மேலும் ஒரு விழுமிய கருத்து பொதிய வைக்கப் பட்டுள்ளது. ''யக்ஞோவை விஷ்ணு:'' என்றபடி விஷ்ணுவே யக்ஞமாக (யாகமாக) இருப்ப, அவரை விட்டுப் பொன்னாகிய இலக்குமி (ஸ்ரீ) பிரிய மாட்டாள் என்பதை ''விஷ்ணோ ஸ்ரீ: அநபாயிநீ'' என்ற ஸ்ரீ ஸூக்தியாலும் தெளியலாம்.

பொன்னின் - ஐந்தனுருபு ஒப்புப் பொருளது.

இனி, ''ஆதிவராகர் மலைய மதில் யாகத்திலே பிரியார் பொன்னின்'' எனற தொடர் அமைப்பால் மேலும் ஒரு சிறந்த கருத்து, பெறப்படுகின்றது.

'யாகத்திலே' என்ற சொல்லாற்றலால் யக்ஞ வராக ரூபியாகிய நிலை பேசப்படுகிறது இங்கு எனலாம். அதற்கேற்ப யாகாதிகளை அவயவமாக நிரூபித்தபடி எங்ஙனம் என்னில்-

நான்கு வேதங்களும் - நான்கு சரண கமலங்கள் (திருவடிகள்)
யூபஸ்தம்பங்கள் - கோரைப்பற்கள்
யக்கிய அவிசுகள் கொள்ளும் இடம் - தந்தங்கள்
ஓமஸ்தானங்கள் - திருமுகம்
அக்கினி - நாக்கு
தருப்பைப்புற்கள் - ரோமம்.
இராப்பகல் செய்யும் சந்திர சூரியர்கள் - திருக்கண்கள் (அவை யாக காலங்களைக் காட்டுகிறபடியினாலே)
பிரணவம் பிரதான மாகையாலே - திருமுடி.

இப்படி நிரூபிக்கப்படவே, யக்ஞரூபியாய், யக்ஞத்தினால் ஆராதிக்கப் படும் புருஷன் கரந்தை வராகப் பெருமான் என்பது த்வனி.

பனிப் பருவங் கண்டு வருந்தல்

93. யௌவன கால மிரும்பனிக்
கால மிரண்டுமொன்றாய்க்
கௌவின காலமன் றேகற்ப
காலங் கடற்புவியை

வெளவின கார்வண்ண ரர்து
வராகர் மலயவெற்பிற்
செவ்வன காலங்க ளோவன்பர்
தாமுந் திரும்பிலரே.

பணிப்பருவங் கண்டு வருந்தல்:- பின்பனிப்பருவம் வர அதனைக்கண்டு தலைவி வருந்தல்.

வேந்தர்க்குற்றுழி யுதவியிற் பிரிந்து சென்ற தலைவன் பின்பனிக்காலம் வந்தும், ''இன்னும் திரும்பிலரே'' எனத் தலைவி வருந்தியது இச்செய்யுள். இஃது எங்ஙனம் பெறுதும் என்றால்-

இரும் பனிக்காலம் என்றதால் பின்பனிக்காலம் என்பது பெறப் பட்டது. இந்தப் பின்பனிக் காலத்துத் திரும்பி வருவேன் என்று கூறிச்செல்லும் தலைவன் ''வேந்தர்க்குற்றுழி யுதவியிற் பிரிவன்'' என்பதைத் தஞ்சைவாணன் கோவையால் அறியலாம்.

[குறிப்பு:- ஓதற்குப் பிரிந்துழி - கார்ப்பருவம் கண்டு வருந்துதலும், காவற்குப் பிரிந்துழி - கூதிர்ப்பருவங் கண்டு வருந்துதலும், தூதிற்குப் பிரிந்துழி - முன்பனிப்பருவங் கண்டு வருந்துதலும், வேந்தர்க்குற்றுழி யுதவியிற் பிரிந்துழி - பின்பனிப் பருவங்கண்டு வருந்துதலும், பொருள்வயின் பிரிந்துழி - இளவேனிற் பருவங் கண்டு வருந்துதலும் பாடல் சான்ற புலனெறி வழக்கமாகும் என்பது உணர வேண்டுவது. தஞ்சை வாணன் கோவை நூலாலும் இதனைத் தெளிக.]

தலைவியானவள். இந்தப் பின்பனிப்பருவம் தனிச்சிறப் புடையதாய் என்னை வாட்டுகின்றதே! இஃது எனது யௌவன காலத்தையுமன்றோ உடன் கூட்டிக்கொண்டது! இரண்டு காலங்களும் சேர்ந்து என்னைக் கௌவின: யான் என் செய்கேன். அன்பரோ திரும்பிலர். ஒருகால் அவர் சென்றிருக்கும் மலைய வெற்பில் செவ்வன காலங்களோ - காலங்கள் இப்போது செவ் வனவாய் உள்ளனவோ? [செவ்வன - தக்க தட்ப வெப்ப நிலை யுடையன அநுகூலமாயுள்ளன] என வருந்தினாள்.

கற்ப காலம் - வராக கல்ப காலத்தில், கடற் புவியை - கடல் சூழ்ந்த பூமியை, வெளவின - தமது கோட்டால் குத்தியெடுத்துக் கொண்டு வந்த, கார் வண்ணர் ஆதிவராகர். அவரது மலைய வெற்பில் காலங்கள் செவ்வனவோ என மாறுக.

கடலில் வீழ்ந்த பூமியைத் திருமால் வராகாவதாரங் கொண்டு எடுத்தமையின் அது **வராககற்பம்** எனப் பெயர் வழங்கும். வராக சம்பந்தமானது வராக கற்பம்.

கடற் புவியை **வௌவின** கார் வண்ணர் - '**வௌவின**' என்ற சொல்லாற்றலால் 'கல்பாந்தகாலத்தில் சகல பூதங்களையும் கிரகித்து, மூன்று லோகங்களையும் தண்ணீர் பொங்கி மூழ்த்தும்படி செய்தவன்,' என்ற விஷ்ணுபுராணக்கருத்து பெறப்படுதல் காண்க. [ஸ்வேதவராகச் சிற்ப மொன்று ஏரானிலுள்ளது என்றும் அது குப்தர் காலத்த தென்றும் கூறுப].

காதலன் பிரிவுழிக் கண்டோர்
புலவிக் கேதுவிதாமிவ் விறைவிக் கென்றல்

94. வருந்தா வகைதம்மை வந்தடைந்
தார்க்கு வரங்களெலாந்
தருந்தா மரைக்கண்ண ராதி
வராகர் தமிழ்வரைமேல்
அருந்தாத வாம்பல் பொதுமாதர்
பானம தாடவர்க்கு
விருந்தான தான்மடவீர் நங்கை
பாற்புல விக்கிடமே.

காதலன் பிரிவுழிக் கண்டோர் புலவிக்கேது இதாம் இவ் விறைவிக்கு என்றல்:- காதலன் பரத்தையிற் பிரிந்தனனாக அதனைக்கண்டோர் இந்தத் தலைவியின் புலவிக்குக்காரணம் இவனது இத்தகைப் பிரிவே எனப் பாங்கியர் முதலானோர்க்குக் கூறுதல். [இஃது, பரத்தையிற் பிரிவில் உணர்த்த வுணரும் ஊடலின் பாற்படும். பரத்தையிற் பிரிவு - தலைவன் பரத்தை மேற் காதலாய்த் தலைவியைப் பிரிந்து பரத்தையர் சேரியிற்போதல். உணர்த்த உணரும் ஊடலாவது - தெளிவித்தலாலே தெளிவு பெறும் ஊடல்: தீர்க்கத் தீரும் ஊடல் என்றவாறு. ஊடலாவது - ஒருவரையொருவர் நணுகாராகி உரைமறுத்திருத்தல்.]

மடவீர்! பொதுமாதர் ஆம்பல் பானம் ஆடவர்க்கு விருந்தானது; ஆதலால் (அதுதான்) நங்கைபாற் புலவிக்கிடமா யிற்று என்று துறை விளக்கம் காண்க.

மடவீர்! - தலைவியின் பாங்கியர் சுற்றத்தை நோக்கிய விளி. ஆம்பல் மலரை மகளிர் வாய்க்கு ஒப்புச் சொல்லுவது மரபு.

ஆம்பல் - குமுதமலர், ''நங்கைமார் வாயடங்கிய வென்ன வந்து குவிந்த வண்குமுதங்களே'' என்றார் கம்பரும். ஆம்பல் பானம் என்றது - அதர பானத்தை: வாயெயிறு ஊறிய நீரையுண்டது. ''இவள் செங்கனி வாயாருந்தொறும் இனிதாயமிழ்தாமென தாருயிர்க்கே'' என்றதும் காண்க. ஆடவர்க்கு - தலைவனுக்கு. அருந்தாத விருந்தானது எனக் கூட்டுக. அருந்தாத - பிறரோடு பகிர்ந்து அருந்தகிலாத. விருந்தானதால் - ஆல், அசை: இனி, ஆல் - ஆதலால் எனினுமாம். புலவி - பிணக்கு.

முதலிரண்டடிகளில், தம்மை வந்து சரணடைந்தவர்க்கெல் லாம் அவர்கள் வருந்தாதபடி வேண்டிய வரங்களை யெல்லாம் தருபவர் தாமரைக்கண்ணராகிய ஆதிவராகர் என்று அவர் சிறப்புக் கிளந்தபடி. பகவத் கீதையில் கண்ணன். ''யே யதா மாம் ப்ரபத்யந்தே தாம் ஸ்ததைவ பஜாம்யஹம்'' (4-11) என்றான். [இதன் பொருள்:- எவர்கள் எவ்வாறு என்னை நாடு கின்றார்களோ அவர்களை அவ்வாறே அனுக்ரஹிக்கிறேன்.]

தலைவி நெய்யாடியதிகுளை சாற்றல்

95. வாங்கிய கார்முகன் பார்மகள்
கேள்வன் வளைதிகிரி
தாங்கிய பாணியந் தாமரை
யான்கரந் தாபுரியில்
ஓங்கிய வேலண்ண லேயிரு
பேர்கிளை யுந்தழைக்க
வாங்கியல் பாவை யருமக
வீன்றுநெய் யாடினளே.

தலைவி நெய்யாடியது இகுளை சாற்றல்:- புதல்வனைப் பயந்த பின் தலைவி நெய்யாடியதைத் தோழி தலைவனுக்குச் சொல்லுதல். [இகுளை - தோழி. நெய்யாடியது - புதல்வனைப் பயந்த பின் எண்ணெய் அப்பி முழுகுதல்] (இஃது உணர்த்த வுணரா வூடலின்பாற்படும்).

வேலண்ணலே! தலைவனை நோக்கிய விளி. பாவை அரு மகவு ஈன்று நெய்யாடினளே என்றது துறை விளக்கம். இரு பேர் கிளையும் தழைக்க - இரண்டு தரப்பிலுள்ள பெரிய சுற்றங் களும் தழைக்கும்படி - (அதாவது - பிறந்த குலம், புக்க குலம் ஆகிய இரண்டு குலச் சுற்றங்களும் மேலும் தழைத்தோங்கும்

படி) மகவு ஈன்றாள் என முடிக்க. ஆங்கு - மனையிடத்து. இயல் - அழகு படைத்த, பாவை - தலைவி. ''**அருமகவு**'' எனவே புதல்வன் என்பது பெற்றாம்; ''**நன்** மக்கட்பேறு'' என்றது போலே.

வாங்கிய - வளைந்த, கார்முகன் - சார்ங்கம் என்னும் வில்லை யுடையவன். பார்மகள் கேள்வன் - பூமி தேவிக்குக்கணவன். வளைதிகிரி தாங்கிய பாணியந் தாமரையான் - சங்கு சக்கரம் இரண்டினையும் ஏந்திய தாமரைத் தடக்கையினன். பாணி -கை. இம்மூன்றும் ஒருவன் மேலடுக்கி வந்த பல பெயர்கள். வளை திகிரி - உம்மைத்தொகை.

காண விரும்பல்

96. விந்தைக் கிசைதந்த மாயோன்
கரந்தையில் மின்னனையாள்
சந்தத் தனமும் பிதிர்பாலும்
பாலனைத் தாங்குகையுங்
கந்தத் தளிரினு நெய்யா
டியமெய்யுங் கார்குழலு
மெந்தப் படிகண்டு கண்களி
கூர்வ தினியெனக்கே.

காண விரும்பல்:- நெய்யாடிய தலைவியைக் காண விரும்பிய தலைவன் தன் மனத்து உவகை கூறல்.

இனி, எந்தப்படி கண்டு கண்களி கூர்வது! எனக் கூறிய மையால், அவன் மனத்து உவகை பெறப்பட்டது.

